REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்
THINAKARAN
தினகரன்
2022 ஜுன் 21 செவ்வாய்க்கிழமை
1932 - 2022

வரு. 90 இல. 144 | Tuesday 21, June, 2022 | 12பக்கங்கள் | 40/-




## படகு மூலம் வருவோரை ஒருபோதும் ஏற்க மாட்டோம்

### அவுஸ்திரேலிய பிரதமர் அந்தனி அறிவிப்பு



படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்கு வரும் அகதிகள் அவுஸ்திரேலியாவில் குடியேற்றப்பட மாட்டார்கள் என அவுஸ்திரேலிய பிரதமர் அந்தனி அல்பனீஸ் கூறியுள்ளார்.

அவுஸ்திரேலியாவின் புதிய பிரதமர் அந்தனி அல்பனீஸ் தலைமையிலான அரசாங்கமானது அகதிகளுக்கு சார்பானதாக உள்ளது எனவும், அவர்கள் அவுஸ்திரேலிய அரசாங்கத்தினால் திருப்பி அனுப்பப்பட மாட்டார்கள் என ஆட்கடத்தல்காரர்கள் உறுதியளித்தனர் என அவுஸ்திரேலியாவினால்

08

## கொழும்பு உட்பட நகர்ப்புறங்களில் பூட்டு:

## வடக்கு, கிழக்கில் வழமை போல இயங்கிய பாடசாலைகள்

**மாணவர் வருகையில் வீழ்ச்சி**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொழும்பு கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகள், நகர்ப்புற பாடசாலைகள் மற்றும் மாகாணங்களிலுள்ள பிரதான நகர பாடசாலைகள் நேற்று பூட்டப்பட்டிருந்த போதிலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பாடசாலைகளில் நேற்று வழமை போன்று கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

எனினும் அவ்வாறான பாடசாலைகளில் நேற்று எதிர்பார்த்த அளவு மாணவர்கள் பாடசாலைக்கு சமூகமளிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆசிரியர்கள் மாணவர்கள் ஆகியோருக்கான போக்குவரத்து அசௌகரியங்கள் காணப்படாத குறைந்த

08

## பொருளாதார நெருக்கடிக்கு தீர்வாக

## உணவு மற்றும் சுகாதார தேவைகளுக்கு 50 மில்.டொலர்

### அவுஸ்திரேலிய அரசு வழங்கியது



இலங்கையின் அவசர உணவு மற்றும் சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய அவுஸ்திரேலியா 50 மில்லியன் டொலர் உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவிகளை வழங்கவுள்ளது. இலங்கையில் உள்ள அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகரகம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தற்போது மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்கிறது. இது மருந்து, உணவு மற்றும் எரிபொருள் பற்றாக்குறைக்கு

08

# பொருளாதார மீட்சி: கடன்பெற ஒத்துழைப்பு

### இலங்கை வந்துள்ள IMF பிரதிநிதிகளுடன் பிரதமர் பேச்சு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவுக்கும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கும் இடையில் நேற்று முதற்கட்ட பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது. மேற்படி குழுவில் 10 பிரதிநிதிகள் உள்ளடங்கியுள்ளதாகவும் பேச்சுவார்த்தைகள் சுமுகமாக இடம்பெற்றதாகவும் பிரதமர் அலுவலகம் தெரிவித்தது.

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்கும் வகையில் இலங்கை எதிர்பார்த்துள்ள கடன் ஒத்துழைப்பை பெற்றுக்கொடுப்பது தொடர்பில் நேற்றைய பேச்சுவார்த்தையின் போது முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அடுத்து வரும் நாட்களில் விரிவான பேச்சுவார்த்தையை மேற்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் இந்த

08

**பேச்சுவார்த்தை சுமுகமாக நடைபெற்றதாகவும் IMF அதிகாரிகள் குழுவினருடனான பேச்சுவார்த்தை ஊடாக 4 பில். அமெரிக்க டொலர்களை பெற்றுக்கொள்வதில் இலங்கை ஆர்வமாக உள்ளதாகவும் பிரதமர் அலுவலகம் தெரிவிப்பு**



இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய உள்துறை அமைச்சர் கிளேர் ஓ நீல் நேற்று (20) காலை கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்த போது...



## தம்மிக்க பெரேரா இன்று MP ஆகிறார்?

03

## எரிபொருள் நெருக்கடிக்கு தீர்வு காணாவிடின்

## 850,000 ஆட்டோ சாரதிகளின் வாழ்வாதாரம் கேள்விக்குறி

### இலங்கை ஆட்டோ உரிமையாளர்கள் சங்கம் கவலை



நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக 850,000 தொழில்முறை முச்சக்கரவண்டி சாரதிகளின் வாழ்வாதாரம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதாக தொழிற்சங்கங்கள் தெரிவிக்கின்றன.

எரிபொருள் நெருக்கடிக்கு உடனடியாக தீர்வு வழங்கப்படாவிட்டால் மூன்று மில்லியன்

08

## ஜனாதிபதி செயலக வாசலை மறித்து சிலர் ஆர்ப்பாட்டம்

### பதற்றத்தை தணிக்க பொலிஸ், இராணுவம் குவிப்பு

**21 பேர் கைதாகி பிணையில் விடுதலை**



**ஷம்ஸ் பாஹிம்**

ஜனாதிபதி செயலக நுழைவாயில்களை மறித்து போராட்டத்தில் ஈடுபட்ட 21 பேர் பொலிஸாரினால் கைது

08

## கொள்ளுப்பிட்டியில் பாரிய கொள்ளை:

## வர்த்தக நிலையத்தை உடைத்து இரத்தினக்கற்கள், தங்கம் திருட்டு

### 1.5 பில்லியன் பெறுமதி; பொலிஸ் விசாரணை தீவிரம்



கொழும்பு, கொள்ளுப்பிட்டி, பித்தல சந்தியில் உள்ள இரத்தினக்கல் மற்றும் நகைக் கடை உடைக்கப்பட்டு 1.5 பில்லியனுக்கும் அதிக பெறுமதியான இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை கொம்பனித் தெரு பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். கடந்த 18ஆம் திகதி அதிகாலை 5.00 மணிக்கும் 7.00 மணிக்கும் இடையில் இந்த திருட்டு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

08

## நிமலை நீக்கும் தீர்மானத்துக்கு இடைக்கால தடை நீடிப்பு

### SLFPக்கு நீதிமன்றம் உத்தரவு



ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அனைத்து பொறுப்புகளிலும் இருந்து, அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவை நீக்கும் கட்சியின் தீர்மானத்துக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நீடித்துள்ளது.

அதற்கமைய, நிமல் சிறிபால டி சில்வாவை நாளை (22) வரை கட்சியில் அவர் வகிக்கும் பொறுப்புகளில் இருந்து நீக்குவதற்கு நீதிமன்றம் இவ்வாறு தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

அமைச்சராக பதவியேற்ற, தமது கட்சியின்

08

## 21ஆவது திருத்தத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம்

### விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்



அரசியலமைப்பின் 21ஆவது திருத்தச் சட்ட மூலத்திற்கு அமைச்சரவை நேற்று அனுமதி வழங்கியுள்ளது. சட்ட மூலம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

21 ஆவது திருத்தின் மூலம் ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்படுவதுடன், இரட்டைப் பிரஜாவுரிமை பெற்றவர்கள், பாராளுமன்ற

08

## மின்கட்டண உயர்வு குறித்து 3 நாட்களுக்குள் தீர்மானம்

### பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தலைவர் அறிவிப்பு



மின்சாரத்தை 30 முதல் 60 அலகுகளுக்குள் பயன்படுத்தும் குறைந்த வருமானம் கொண்ட வாடிக்கையாளர்களின் கட்டணத்தை பெருமளவில் அதிகரிக்காமல், ஏனைய வாடிக்கையாளர்களிடம் மின் கட்டணத்தை அதிகரிக்க கூடும் என தெரிவிக்கப்படுகிறது.

மின் கட்டண அதிகரிப்பு தொடர்பில் எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள் தீர்மானம் எட்டப்படவுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு வின்

08

## பெருந்தோட்ட மக்களுக்கும் நிவாரண திட்டம் அவசியம்

### அறிக்கை விட்டு வேலுகுமார் சுட்டிக்காட்டல்



தோட்ட மக்களுக்கு விசேட பொருள் விநியோக வழிமுறையும் நிவாரண திட்டமும் முன்வைக்கப்பட வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

இன்று நாட்டில் கடுமையான பொருளாதார நெருக்கடி நிலை ஏற்பட்டு எரிபொருட்களின் தட்டுப்பாடு நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு செல்கின்றது.

08

## யாழ். கடை உரிமையாளர் ஒருவரது முன்மாதிரி செயல்



பொருளாதார நெருக்கடிகளில் நாட்டு மக்கள் சிக்கித் தவிக்கையில் யாழ்.சாவகச்சேரியில் வர்த்தக நிலையம் ஒன்றின் உரிமையாளர் மனமுவந்து செய்த நற்செயல் பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.



## யாழ். சென்னை விமான கட்டண விபரம் அறிவிப்பு

03



## பாராளுமன்றம் இன்று கூடுகிறது

24ம் திகதி வரை இடம்பெறும்

03

## நாட்டின் நிலைமை படுமோசம்;

## எமக்கு உதவி செய்ய தயாராக இருங்கள்

### புலம்பெயர் மக்களிடம் சாணக்கியன் MP கோரிக்கை



நாட்டில் உணவு பஞ்சம் ஏற்படும் அபாயமுள்ளதால் எமது மக்களுக்கு உதவி செய்வதற்கு புலம்பெயர் தமிழ் மக்கள் தயாராக இருக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

சுவிஸில் இடம்பெற்ற மக்கள்

08

## எரிபொருள் வரிசையில் வைத்தியர்:

## குழந்தை பிரசவித்த தாய் உயிருக்கு போராட்டம்



வைத்தியசாலையில் குழந்தையை பிரசவித்த பின்னர் தாய் ஒருவருக்கு குருதிப்பெருக்கு ஏற்பட்டிருந்தது. இந்த சமயம் மருத்துவர் எரிபொருளை பெறுவதற்காக எரிபொருள் நிரப்பு நிலைய வரிசையில் நின்றிருந்தார். அவரை அழைத்து வர முச்சக்கரவண்டி கூட கிடைக்கவில்லை. எரிபொருள் வரிசையில் நின்ற மருத்துவரை கூட்டி வருவதற்காக வாகனங்களை அனுப்புவதற்கு பொலிஸார்

08

## தமது உயிரை பணயம் வைத்து

## பெண்ணை காப்பாற்றிய பொலிஸ் அதிகாரி மற்றும் இளைஞன்

### சமூக வலைத்தளத்தில் பாராட்டுகள் குவியல்



மினிபே, ஹசலக நகருக்கு அருகில் உள்ள ஆற்றுக்கு அருகில் வீதி போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் இளைஞன் ஒருவரும் தங்கள் உயிரை பணயம் வைத்து பெண் ஒருவரை காப்பாற்றியுள்ளனர். இந்த சம்பவம் கடந்த 17ஆம் திகதி மாலை இடம்பெற்றுள்ளது. வயதான பெண் ஒருவர்

08

# எத்தியோப்பியாவில் தாக்குதல்: 200க்கும் மேற்பட்டவர்கள் பலி



எத்தியோப்பியாவின் ஒரோமியா பிராந்தியத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற தாக்குதலில் அம்ஹாரா இனத்தினரை பெரும்பான்மையாகக் கொண்ட 200க்கும் அதிகமான பொது மக்கள் கொல்லப்பட்டிருப்பதாக பார்த்தவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலை நடத்தியதாக ஒரோமோ விடுதலைப் படை கிளர்ச்சிக் குழு மீது குற்றம்சாட்டப்படுகிறது.

அம்ஹாரா இனத்தினர் வாழும் தொலை தூர கிராமங்கள் மீது கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தி இருப்பதாக கூறப்படுகிறது. இதன்போது வீடுகளுக்கும் தீ வைக்கப்பட்டுள்ளது. “230 சடலங்களை நான் பார்த்தேன். எனது வாழ்நாளில் பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட மிக மோசமான தாக்குதலாக இது இருக்கும் என்று நான் அஞ்சுகிறேன்” என்று கிம்பி பகுதியைச் சேர்ந்த அப்துல் செயித் தாஹிர் என்ற குடியிருப்பாளர் ஏ.பீ செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

“அவர்களை நாம் பாரிய புதைகுழியில் அடக்கம் செய்தோம். இன்னும் நாம் உடல்களை சேகரித்து வருகிறோம். மத்திய இராணுவம் இங்கு வந்துள்ளது. அவர்கள் சென்ற பின் மேலும் தாக்குதல் நடத்தப்படலாம் என்று அஞ்சுகிறோம்” என்றும் அவர் குறிப்பிட்டார்.

எத்தியோப்பியாவின் பல பிராந்தியங்களிலும் இன ரீதியான பதற்ற சூழல் நீடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பிரான்ஸ் பொதுத் தேர்தல்: மக்ரோனுக்குப் பின்னடைவு

பிரான்ஸ் ஜனாதிபதி எமனுவேல் மக்ரோன் பாராளுமன்றத் தேர்தலில் அறுதிப் பெரும்பான்மையை இழந்துள்ளார். புதிதாக உருவாக்கப்பட்ட இடதுசாரி கூட்டணி மற்றும் தீவிர வலதுசாரிகள் முன்னேற்றம் கண்டுள்ளனர்.

கடந்த ஜூன் 12 மற்றும் 19 ஆம் திகதிகளில் இடம்பெற்ற தேர்தலின் முடிவு நேற்று திங்கட்கிழமை வெளியான நிலையில் பிரான்ஸ் அரசியலில் இழுபறி சூழல் ஏற்பட்டுள்ளது.

இதனால் மக்ரோன் அரசில் இரண்டாவது தவணைக்காக வகுக்கப்பட்ட திட்டங்களும் சீர்த்திருத்தங்களும் நிறைவேறாமல் போகலாம் என்று கூறப்படுகிறது.



மக்ரோனின் மையவாத கூட்டணி 577 ஆசனங்கள் கொண்ட பாராளுமன்றத்தில் 245 இடங்களை பெற்றுள்ளது. அந்தக் கூட்டணி பெரும்பான்மை பெற 289 இடங்கள் தேவையாக உள்ளன.

இதில் பரந்த வலதுசாரி கூட்டணி ஒன்று 141 இடங்களை பெற்றிருப்பதோடு மரின் லே பென் தலைமையிலான தீவிர வலதுசாரி பேரணிக் கட்சி 89 இடங்களை கைப்பற்றியுள்ளது.

“நாம் எதிர்கொண்டிருக்கும் சவால்களை பார்க்கும் போது, இந்த நிலை ஆபத்தை ஏற்படுத்தும்” என்று பிரதமர் எலிசபெத் போர்ன் தெரிவித்தார். பெரும்பான்மையை கட்டியெழுப்ப செயல்டுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# கொலம்பிய ஜனாதிபதியாக முன்னாள் போராளி வெற்றி



முன்னாள் கிளர்ச்சிப் போராளியான குஸ்தாவோ பெட்ரோ, கொலம்பியாவின் முதலாவது இடதுசாரி ஜனாதிபதியாக வெற்றிபெற்றுள்ளார்.

தற்போது செனட்டராக இருக்கும் பெட்ரோ, கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் இரண்டாவது சுற்றில் வலதுசாரியான ரொடொல்போ ஹெர்னன்டஸை தோற்கடித்தார்.

தற்போது இயங்காத எம்–19 அமைப்பில் ஒரு கிளர்ச்சி போராளியாக இருந்த பெட்ரோ சிறை அனுபவித்து பொதுமன்னிப்பில் விடுதலை பெற்றவராவார். இதில் துணை ஜனாதிபதியாக தேர்வாகி இருக்கும் பிரான்சியா மார்கியுவஸ் முன்னர் வீட்டுப் பணிப்பெண்ணாக இருந்தவர் என்பதோடு அந்தப் பதவிக்கு தேர்வாகும் முதல் கறுப்பினத்தவராவார்.

## சர்வதேச செய்திகள்

# ரஷ்ய இசைக்கு உக்ரைன் தடை



ரஷ்ய இசை சிலதை ஊடகங்கள் மற்றும் பொது இடங்களில் ஒலிக்க தடை விதிப்பதற்கு உக்ரைன் பாராளுமன்றம் ஆதரவாக வாக்களித்துள்ளது.

அனைத்து ரஷ்ய இசைகளுக்கும் இந்தத் தடை பொருந்தாது என்ற போதும், 1991 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ரஷ்ய பிரஜைகளால் அமைக்கப்பட்ட அல்லது இசைக்கப்பட்டவற்றுக்கே தடை விதிக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பை கண்டித்த ரஷ்யர்களின் கலைப்படைப்புகளுக்கு இதில் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

# உக்ரைனியத் தானியங்களை முடக்கும் ரஷ்யாவின் செயல் ஒரு 'போர்க் குற்றம்'

### ஐரோப்பிய ஒன்றியம் குற்றச்சாட்டு

பல மில்லியன் தொன் உக்ரைனிய தானியங்களை ரஷ்யா முடக்குவது ஒரு போர்க் குற்றம் என்று ஐரோப்பிய ஒன்றிய வெளியுறவுக் கொள்கைகளுக்கான தலைவர் ஜோசப் பொரெல் தெரிவித்துள்ளார்.

“உலகில் இருக்கும் மக்கள் பட்டினியில் வாடும் நேரத்தில் மில்லியன் கணக்கான தொன் கோதுமை உக்ரைனில் முடக்கப்பட்டிருப்பது நினைத்துக் கூட பார்க்க முடியாத ஒன்று” என்று பொரெல் தெரிவித்தார்.

“துறைமுகங்களை முடக்குவதை நிறுத்தும்படி ரஷ்யாவுக்கு நாம் அழைப்பு விடுக்கிறோம்” என்றும் அவர் கோரினார்.



இந்த நெருக்கடி குறித்து ஐரோப்பிய ஒன்றிய வெளியுறவு அமைச்சர்கள் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துகின்றனர்.

உக்ரைனின் கருங்கடல் துறைமுகங்களை முடக்கி இருப்பதை நிறுத்தும்படியும் உலக சந்தைக்கு பெரும் அளவான தானியங்கள் செல்வதற்கு அனுமதிக்கும்படியும் மேற்கத்திய நாடுகள் ரஷ்யாவை கோரியுள்ளன.

இந்த முடக்கம் சர்வதேச அளவில் உணவுப் பொருட்களின் விலை அதிகரிக்கக் காரணமாக இருப்பதோடு மில்லியன் கணக்கான மக்கள் பஞ்சத்தை எதிர்நோக்கக் கூடும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

### மின்சார பற்றாக்குறை:

# மூடிய நிலக்கரி ஆலையை திறக்கும் ஆஸி.

அவுஸ்திரேலியா நாட்டில் ஏற்பட்டிருக்கும் மின்சாரப் பற்றாக்குறைக்குத் தீர்வுகாண மூடப்பட்ட நிலக்கரி ஆலை ஒன்றை மீண்டும் திறக்கவுள்ளது.



அவுஸ்திரேலியாவின் முக்கிய மின்சார விநியோக நிறுவனமான வெர்பண்ட் குழுமத்துடன் இணைந்து செயல்பட்டு, அந்நாட்டு அரசாங்கம், மெல்லாக் நகரிலுள்ள அந்த ஆலையை மீண்டும் செயல்பாட்டுக்குக் கொண்டுவரத் திட்டமிடுகிறது.

அவசரகாலத்தில் தேவைப்படும் போது நிலக்கரியைக் கொண்டு போதிய மின்சாரத்தை உருவாக்குவது அதன் நோக்கம் என்று அரசாங்கம் தெரிவித்தது.

இருப்பினும் அதற்கான ஆயத்தங்களைச் செய்வதற்குச் சில மாதங்களாகும் என்று கூறப்பட்டுள்ளது.

# பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்த உதவும் ஆடை உற்பத்தியாளர்கள்

தற்போதைய பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த உதவும் ஆடைத் தொழில்துறை தற்போதைய பொருளாதார அழுத்தங்கள் மற்றும் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுகளை சமாளிக்க அவர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆடை உற்பத்தியாளர்கள் தங்கள் ஊழியர்களுக்கு நிதி சார்ந்த மற்றும் நிதிசாரா உதவிகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இலங்கையின் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் 40% ஐப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஆடைத் தொழில்துறையானது இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தின் மிகப்பெரிய ஆதாரமாகும்.

"நாங்கள் மிகவும் கடினமான மற்றும் சவால் நிறைந்த நேரத்தை எதிர்கொள்கிறோம். இது போன்ற நேரத்தில், நமது தொழில்துறையானது உழைக்கும் சமூகத்தின் பலத்தில் தொடர்ந்து செயல்படுகிறது மேலும் அவர்களின் நல்வாழ்வுக்காக உழைக்க வேண்டியது நமது முதன்மையான பொறுப்பு.

ஆடைத் தொழிற்சாலை உரிமையாளர்கள் தங்கள் ஊழியர்களின் தேவைக்கேற்ப நலத்திட்டங்களைச் செயல்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம், மேலும் பலர் இந்தத் திட்டத்தை ஏற்கனவே செயல்படுத்தி வருகின்றனர்” என கூட்டு ஆடைகள் சங்கங்கள் மன்றத்தின் (JAAF) பொதுச் செயலாளர் யொஹான் லோரன்ஸ், தெரிவித்துள்ளார்.

சுமார் 80% ஆடை உற்பத்தியாளர்கள் வருடாந்த சம்பள உயர்வுகளுக்கு மேலதிகமாக அவர்களின் வாழ்க்கைச் செலவுகளை சமாளிப்பதற்குத் தேவையான கொடுப்பனவுகளை இப்போது அதிகரித்துள்ளனர். இது 25% அதிகரிப்பு மற்றும் இந்த மேம்பாடுகள் 2021 முதல் அமலுக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாதுகாப்பு ஊழியர்கள் தங்கும் கூடங்கள், உணவகங்கள் மற்றும் பாதுகாப்பு ஊழியர்கள் போன்ற அவுட்சோர்ஸ் சேவைகள் உட்பட தொழிற்சாலைகளின் உள்ளக ஊழியர்களை வலுப்படுத்த சில தொழிற்சாலைகள் உலர் உணவு விநியோக திட்டங்களையும் தொடங்கியுள்ளதாக லோரன்ஸ் மேலும் குறிப்பிட்டார். "எங்கள் ஊழியர்களுக்கு உதவுவதற்கும், இந்த கடினமான காலங்களில் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை சமாளிக்க அவர்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கும் நாங்கள் முன்னுரிமை அளிக்கிறோம்." என லோரன்ஸ் மேலும் வலியுறுத்தினார்.

# இன்சூரன்ஸ் நிறுவனங்களுடன் இணைந்து மகளிர் வாடிக்கையாளர்களுக்கு கொம்பாங்கின் 'அணகி'



கொமர்ஷல் வங்கி, பல காப்புறுதி நிறுவனங்களுடன் கைகோர்த்து, வங்கியின் ‘அணகி மகளிர் வங்கிச் சேவையின்’ கீழ், பெண் வாடிக்கையாளர்களுக்கு பிரத்தியேகமாக ஒப்பிடமுடியாத குறைந்த பிரீமியம் கட்டணங்களுடன் சிறப்பு ஆயுள் மற்றும் பொது காப்புறுதித் தயாரிப்புகளை வழங்குவதாக அறிவித்துள்ளது. இந்த பிரிவை ஆதரிக்க வங்கியின் சேவைகளின் வரம்பை விரிவுபடுத்தும் வகையில், ஆயுள் காப்பீடு, வணிகக் காப்பீடு மற்றும் வீட்டுக் காப்பீட்டு விருப்பங்களை காப்பீடு உள்ளடக்கியதாக வங்கி தெரிவித்துள்ளது.

பொருந்தும் சிறப்பு பிரீமியம் விகிதங்கள் தவிர, காப்பீட்டை மிகவும் எளிமையாக்கப்பட்ட செயல்முறை மூலம் பெறலாம், மேலும் பெண் வாடிக்கையாளர்கள் மற்றும் மனைவிகளுக்கும் நீட்டிக்கப்படலாம். காப்புறுதிப் பாதுகாப்பின் மூலம் அணகி மகளிர் வங்கிச் சேவையின் முதன்மை நோக்கங்களில் ஒன்றான நிதிச் சேர்க்கையை ஊக்குவிக்கும் வகையில் இந்தத் திட்டம் எதிர்பார்க்கப்படுவதாக வங்கி தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஆயுள் காப்பீடு கொள்கை காலத்தில் ஆயுள் காப்பீட்டாளரின் இயற்கையான மற்றும் விபத்து மரணம் ஏற்படும் பட்சத்தில் காப்பீட்டின் கொள்கை மதிப்பு ரூபா 1 மில்லியனில் இருந்து ரூபா 5 மில்லியன் வரை இருக்கும்.

இந்த ஆயுள் காப்புறுதி வசதியின் கீழ், கொமர்ஷல் வங்கியின் 18 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்ட பெண் வாடிக்கையாளர், 1,100 ரூபாய் வருடாந்த பிரீமியத்தைச் செலுத்தி, 1 மில்லியன் பாலிசியில் பதிவு செய்யலாம். மனைவி அதே கொள்கையை ரூபா 1,500க்கு பெறலாம். 46 முதல் 65 வயதிற்குட்பட்ட பெண்கள், கொள்கையை அவர்களுக்காக எடுத்துக் கொண்டால், ரூபா 2,200 வருடாந்த பிரீமியத்துடன் அதே காப்பீட்டுத் தொகையைத் தேர்வு செய்யலாம் அல்லது கொள்கையை மனைவிக்குக் காப்பீடு செய்ய எடுத்துக்கொண்டால், ரூபா 2,750. ரூபா 1,100 அல்லது ரூபா 2,200 யூனிட் விலையின் மடங்குகளில் பெறலாம்.

# SLT-MOBITEL இனால் மேம்படுத்தப்பட்ட தொலைபேசி விவரக் கோவை அறிமுகம்

நுண், சிறு மற்றும் நடுத்தரளவு வியாபாரங்களுக்கு சகல சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரப்படுத்தல் தீர்வுகளையும் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில், SLTMOBITEL இன் முழு உரிமையாண்மையில் இயங்கும் SLT Digital Services (Pvt) Limited (SLTDIGITAL) இனால்



தேசிய வியாபார தொலைபேசி விவரக் கோவை ‘The Directory’ 2022 எனும் பெயரில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

தேசிய வியாபார தொலைபேசி விவரக் கோவையின் பிந்திய வெளியீடாக ‘The Directory’ 2022 அமைந்திருப்பதுடன், நாட்டில் வியாபாரத்தை மேற்கொள்வதற்கான புதிய சாதனமாகவும் அமைந்துள்ளது. பாவனையாளர்களுக்கு நட்பான வழிகாட்டல்களினூடாக மேம்படுத்தப்பட்ட உள்ளம்சங்கள் மெருகேற்றப்பட்ட வர்த்தக நாமத்தில் வழங்கப்படுவதுடன், ஏற்கனவே காணப்படும் மற்றும் எதிர்காலத்தில் இணையவுள்ள வாடிக்கையாளர்களுக்கு மற்றும் பதிவு செய்து கொண்டுள்ள விற்பனையாளர்களுக்கு மேலதிக பெறுமதியை சேர்க்கும் வகையில் அமைந்துள்ளது.

மேம்படுத்தப்பட்ட தேசிய வியாபார தொலைபேசிக் கோவை 2022 இல் உறுதி செய்யப்பட்ட தொடர்பாடல் தகவல்கள் காணப்படுவதுடன், நாட்டு மக்களுக்கு தமக்கு அவசியமான தேடல்களை இலகுவாக மேற்கொள்ளக்கூடிய வகையிலும், தொழிற்துறை பிரிவுகளான ஹாட்வெயார், நிர்மாணம், மின்சாதனங்கள், இலத்திரனியல் போன்ற பிரிவுகளைச் சேர்ந்த தேடல் அம்சங்களையும் கொண்டுள்ளது.

புதிய வியாபார தொலைபேசி கோவையான ‘The Directory’ 2022 இன் முதல் பிரதி, SLTMOBITEL இன் தவிசாளர் ரொஹான் பெர்னாண்டோவிடம், SLTDIGITAL இன் பிரதம நிறைவேற்று அதிகாரி உபுல் மஞ்சநாயக்க கையளிப்பதையும், அருகாமையில் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி லலித் செனெவிரட்ன, SLT பிரதம நிறைவேற்று அதிகாரி ஜனக அபேசிங்க மற்றும் SLTDIGITAL நிர்வாக அணியின் பிரதிநிதிகள் காணப்படுகின்றனர்.




# Microgrid கட்டமைப்பு மூலம் இலங்கையில் பசுமை வலு சக்தியை மேம்படுத்தும் DIMO

இலங்கையின் முன்னணியில் உள்ள பல்வகைப்பட்ட கூட்டு நிறுவனங்களில் ஒன்றான DIMO, மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட இலங்கையின் முதலாவது 'Microgrid புதுப்பிக்கத்தக்க வலுசக்தி திட்டத்தை' அண்மையில் வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது. இந்த Microgrid கருத்திட்டத்தின் மூலம் உள்ளூர் தொழிற்துறைகளுக்கு தொடர்ச்சியான மின்சார விநியோகத்தை வழங்க DIMO நிறுவனம் எதிர்பார்க்கிறது. தனது பொறியியல் சேவைகள் மூலம் மாலைதீவு மற்றும் ஆபிரிக்காவின் கிராமப்புறங்களில் தனது வியாபித்துள்ள DIMO, குறித்த வெளிநாட்டு சந்தைகளுக்கும் Microgrid கருத்திட்டதை அறிமுகப்படுத்த எதிர்பார்த்துள்ளது.



இலங்கை தனியார் மின்சார நிறுவனம் (LECO) மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன், DIMO நிறுவனத்தினால் மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்ட Microgrid கட்டமைப்பு மூலம், பல்கலைக்கழகத்திற்குத் அவசியமான மின்சாரம் தொடர்ச்சியாக விநியோகிக்கப்படுகின்றது. இதன் காரணமாக தற்போது நடைமுறையில் உள்ள மின்சாரத் தடையின்போது, (13 மணி நேர மின்வெட்டு) ஏற்படும் சிரமங்களை மொரட்டுவை பல்கலைக்கழகத்தினால் சமாளிக்கக் கூடியதாக உள்ளது. மேலும், இத்திட்டத்தின் காரணமாக, தேசிய மின்கட்டமைப்பை மாத்திரம் சார்ந்திருக்காமல், மொரட்டுவைப் பல்கலைக்கழகம் தனது சொந்த மின்சாரத் தேவைகளை அதன் வளாகத்திலேயே உற்பத்தி செய்து கொள்ள முடிந்துள்ளது. பல்கலைக்கழகத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த Microgrid கட்டமைப்பு, 375kw Solar PV தொகுதி மற்றும் 418kw கொள்ளவு கொண்ட ஒரு மின்கலம் மற்றும் அவசியமான வேளையில் பயன்படுத்தக் கூடிய 1,170 kW டீசல் மின்பிறப்பாக்கி ஆகியவற்றை கொண்டுள்ளது. Microgrid கட்டமைப்பினுள் எல்லா நேரங்களிலும் அவ்வேளைக்கு அவசியமான மின் சக்தியை கண்டறிந்து அதற்கேற்ற வகையில் மின்சாரத்தை உருவாக்குகிறது. இதன் விளைவாக அத்தொகுதியில் உள்ள அனைத்து மின் சக்தி மூலங்களையும் பயன்படுத்தி தொடர்ச்சியான தடையில்லாத வகையில் திறனாக மின்சாரத்தை வழங்குவதற்கும் முடிவதோடு, மின்சாரக் கட்டண செலவுகளை குறைக்கவும் முடிகின்றது.

இந்த திட்டத்தில், கலப்பின (Hybrid) தொழில்நுட்பத்தின் அடிப்படையிலான புதுப்பிக்கத்தக்க வலுசக்தி தீர்வுகளை வழங்குகின்றதும், இத்துறையில் உலகின் முன்னணி நிறுவனங்களில் ஒன்றானதுமான DHYBRID உடன் DIMO கைகோர்த்துள்ளது.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஜுன் 21 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்




**தொழுகை நேரம்**

21 முதல் 25 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.33 |
| லுஹர் | 12.14 |
| அஸர் | 03.41 |
| மஃரிப் | 06.29 |
| இஷா | 07.45 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் ஆனி 7

ராகுகாலம் : பகல் : 03.00 - 04.30வரை
சுபநேரம் : காலை : 07.30 - 09.00வரை

யோகம்: மரணஅமிர்த யோகம்

திதி: அஷ்டமி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | வெற்றி |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | முயற்சி |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | செலவு |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | சுகம் |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

## யாழ்.- சென்னை விமான கட்டண விபரம் அறிவிப்பு



யாழ்ப்பாணம் விமான நிலையத்தில் இருந்து சென்னை, திருச்சிக்கான விமான சேவை ஜுலை 1 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கவுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதன்போது யாழ்ப்பாணம் விமான நிலையத்தில் இருந்து சென்னைக்கு ஒரு வழி கட்டணமாக 50 ஆயிரம் ரூபாவும், திருச்சிக்கு ஒருவழி கட்டணமாக 40 ஆயிரம் ரூபாவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இன்று முதல் டிக்கெட் வழங்கப்படவுள்ளதாக மேலும் தெரியவந்துள்ளது.

## தம்மிக்க பெரேரா இன்று MP ஆகிறார்?

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள பிரபல வர்த்தகர் தம்மிக்க பெரேரா இன்று (21) காலை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்ய ஏற்பாடாகியிருந்தது.

ஆனால் அவரின் நியமனத்திற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

அவை நேற்று இரவு வரை விசாரணைக்கு எடுக்கப்பட்ட நிலையில் அவர் பதவி ஏற்பது சந்தேகம் என பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.



அவரின் நியமனத்திற்கு நீதிமன்றம் தடைவிதிக்காதபட்சத்தில் அவர் இன்று பதவி ஏற்கலாம் என அறியவருகிறது.

முன்னாள் அமைச்சர் பெசில் ராஜபக்ஷ எம்.பி பதவியை ராஜினாமா செய்ததையடுத்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக தம்மிக்க பெரேரா நியமிக்கப்பட்டார்.

இவரின் பெயரை தேர்தல்கள் ஆணைக்குழு வர்த்தமானியில் வெளியிட்டுள்ளது.

இவர் எதிர்வரும் தினங்களில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக பதவியேற்கவுள்ளதாக அறியவருகிறது.

தம்மிக்க பெரேரா, நாட்டில் பல பிரபலமான வர்த்தக நிறுவனங்களைச் சொந்தமாக வைத்திருக்கும் பிரபல வர்த்தகர் ஆவார். (பா)

# பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்கு IMF கட்டமைப்பிற்குள் இருந்து ஆதரவு

### அவுஸ்திரேலிய உள்துறை அமைச்சர் கிளேர் தெரிவிப்பு



இலங்கையின் பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்கு சர்வதேச நாணய நிதியம் (IMF) ஆதரவளிக்கும் என அவுஸ்திரேலிய உள்துறை அமைச்சர் கிளேர் ஓ நீல் தெரிவித்துள்ளார். இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள அவர் நேற்று (20) காலை கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்த போதே இதனைத் தெரிவித்தார்.

சட்டவிரோத குடியேற்றம் மற்றும் மனித கடத்தல் தொடர்பான புதிய தொழிற்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசாங்கத்தின் கொள்கையில் மாற்றமில்லை என்றும் அவர் கூறினார்.

சட்டவிரோத குடியேற்றங்களை தடுப்பதற்காக பாதுகாப்பு செயலாளராக தான் பதவி வகித்த காலத்தில் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து விளக்கமளித்த ஜனாதிபதி, கடற்படையினர் அவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் தெரிவித்தார். கடற்படை, தொழில்நுட்ப மற்றும் பொருள் உதவிகளை வழங்குவதில் அவுஸ்திரேலிய அரசாங்கம் வழங்கிய ஆதரவைப் பாராட்டிய ஜனாதிபதி, இரு நாடுகளும் நெருக்கமாக இணைந்து செயற்படுவதாகக்

08

## செப்டம்பரில் நிலக்கரி இருப்பு குறைவடையும்

### அடுத்த வருடம் கடும் மின்நெருக்கடி எச்சரிக்கை!



இலங்கையின் நிலக்கரி இருப்புக்கள் எதிர்வரும் செப்டெம்பர் 15 – 20ஆம் திகதிக்குள் குறைவடையும் எனவும் இதனால் அடுத்த வருடம் கடும் மின் நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடும் எனவும் தெரிவித்துள்ள பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு எதிர்காலத்தில் தேவையான நிலக்கரியை கொள்வனவு செய்யாவிட்டால் இந்த நிலை ஏற்படுமெனவும் தெரிவித்துள்ளது.

அந்த ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்விடயத்தை தெரிவித்துள்ளார்.

இதனைத் தடுக்க சுமார் 600 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் அடுத்த வருடம் செப்டம்பர் மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை இலங்கைக்கு நிலக்கரி இறக்குமதி செய்யப்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, அரசியல்வாதிகள், அதிகாரிகள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் இவ்விடயம் தொடர்பில் சிந்தித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## லேக் ஹவுஸ் நிறுவன பொது முகாமையாளரின் தாயார் காலமானார்



லேக் ஹவுஸ் நிறுவனத்தின் பொது முகாமையாளர் சுமித் கொத்தலாவலவின் தாயாரான கே. சுவர்ணலதா நேற்று 20 ஆம் திகதி காலமானார்.

அன்னாரின் பூதவுடல் மக்களின் இறுதி அஞ்சலிக்காக ஹோமாகம, கட்டுவன, நாலாவது ஒழுங்கை, குலசிறி குமாரகே மாவத்தையிலுள்ள 323/4/சி என்ற இலக்க இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது. இறுதிக் கிரியைகள் நாளை 22 ஆம் திகதி புதன் கிழமை நியந்தகல பொது மயானத்தில் நடைபெறும்.

## வாக்காளர் இடாப்பில் பெயர் உள்ளதா?

### சரிபார்க்குமாறு ஆணைக்குழு அறிவுறுத்தல்




2022 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பில் தங்கள் பெயர்கள் உள்ளதா என்பதை சரிபார்க்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

தங்கள் பிரதேசத்தின் கிராம உத்தியோகத்தரிடம் அல்லது www.election.gov.lk என்ற இணையத்தளத்தில் இதனை சரிபார்க்குமாறும் தேர்தல்கள் ஆணைக்குழு

08

## இந்தியா வழங்கும் யூரியா 6ஆம் திகதி நாட்டுக்கு வரும்

### விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு

இந்திய அரசாங்கத்தினால் இலங்கைக்கு வழங்கப்படவுள்ள 65,000 மெற்றிக் தொன் யூரியா உரம் எதிர்வரும் ஜூலை மாதம் 06ஆம் திகதி இலங்கைக்கு கொண்டுவரப்படவுள்ளதாக விவசாய மற்றும் வனவிலங்கு பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டு மற்றும் 2023 ஆம் ஆண்டு பெரும்போகத்தில் உர விநியோகத்திற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது தொடர்பான கலந்துரையாடலின்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, விவசாயிகளுக்கு நெற்செய்கைக்கு 50,000 மெற்றிக் தொன் உரமும் சோளச் செய்கைக்கு 10,000 மெற்றிக் தொன் உரமும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



அடுத்த மாதம் 6ஆம் திகதி யூரியா உரம் கிடைத்து சில நாட்களில் விவசாயிகளுக்கு அவற்றை விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

08

## தேர்தல் நடத்துவதே இன்றைய நெருக்கடியை தீர்க்கும் வழிமுறை

### ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி ஹர்ஷ தெரிவிப்பு




தேர்தலுக்கு செல்வதே தற்போதைய நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கான ஒரே வழிமுறை என ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது. தேர்தல் நடத்துவதற்கு அதிக நிதி செலவாகும் என தெரிவிக்கப்பட்டாலும் பாதுகாப்பு தலைமையக கட்டிடத்திற்கு அதனை விட அதிக தொகை செலவாவதாக ஐ.ம.ச பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

2020 ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலுக்காக 5.7 பில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. தேர்தலை விட மேலதிகமான நிதியை அரசாங்கம் முக்கியத்துவமற்ற செயற்றிட்டங்களுக்கு ஒதுக்கியுள்ளது. பாதுகாப்பு அமைச்சின் செயற்றிட்டங்களுக்காக 19.1 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு தலைமையகத்தை அமைப்பதற்காக 12 பில்லியன் ரூபா செலவிடப்படுகிறது.

08

## பஸ் சேவையை 50 வீதத்தால் அதிகரித்தும் பயணிகள் எண்ணிக்கையில் நேற்று வீழ்ச்சி



இலங்கை போக்குவரத்து சபை டிப்போக்கள் ஊடாக தனியார் பஸ்களுக்கான எரிபொருள் விநியோகம் செய்யப்பட்டதன் மூலம் நேற்று (20) 50 சதவீதத்துக்கும் அதிகமான தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டாலும் பயணிகளின் எண்ணிக்கை குறைந்து காணப்பட்டதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபையின் ஊடாக டீசல் விநியோகம் செய்வதற்கான முறைமை ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. அதற்காக அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பஸ் சேவை நடைபெறுவதால் பாடசாலைகளை மீள ஆரம்பிக்குமாறு கல்வி அமைச்சரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எனவே, பயணிகள் பயணத்தை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என்று அவர் மேலும் கூறினார்.

## பாராளுமன்றம் இன்று கூடுகிறது

### 24ம் திகதி வரை இடம்பெறும்



பாராளுமன்றமானது இன்று 21ஆம் திகதி முதல் எதிர்வரும் 24ஆம் திகதி வரை கூடவுள்ளது. கைத்தொழில் பிணக்குகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் இரண்டாவது வாசிப்பு மீதான விவாதம் இன்று நடைபெற உள்ளதோடு நாட்டில் தற்பொழுது நிலவும் சுகாதாரப் பிரச்சினைகள் குறித்து 22ஆம் திகதி சபை ஒத்திவைப்பு விவாதம் நடைபெறும்.

கடந்த மார்ச் 8ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடருக்கான அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (கோப் குழு) முதலாவது அறிக்கை குறித்த சபை ஒத்திவைப்பு விவாதம் நாளை மறுதினம் 23ஆம் திகதி மு.ப 11.00 மணி முதல் பி.ப 530 மணிவரை நடைபெறவிருப்பதாகப் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக தெரிவித்தார்.

அண்மையில் நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இன்று மு.ப 11.00 மணி முதல் 11.30 மணி வரையான நேரத்தில் குற்றவியல் நடவடிக்கை முறை சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் மற்றும் சிவில் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் ஆகியன விவாதம் இன்றி நிறைவேற்றப்படவிருப்பதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார். மு.ப 11.30 மணி முதல் பி.ப 4.30 மணி வரை கைத்தொழில் பிணக்குகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் விவாதித்து நிறைவேற்றப்படும். பி.ப 4.30 மணி முதல் 4.50 மணி வரை

08

## எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பாதாள உலகத்தினரின் தலையீடு

நாட்டின் சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பாதாள உலகத்தின் தலையீட்டுடன் எரிபொருள் பெறப்படுவதாகவும் எரிபொருள் நிரப்ப வரும் மக்களை கூட இவர்கள் கட்டுப்படுத்தி வருவதாகவும் அறிய வருகிறது.

சில பாதாள உலக செயற்பாட்டாளர்களும் குண்டர்களும் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்குள் புகுந்து பல்வேறு அச்சுறுத்தல்களை விடுத்து தமக்கு நெருக்கமானவர்களுக்கு பலவந்தமாக எரிபொருள் பெற்று வருவதாகவும் அறிய வருகிறது.

சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசையில் நிற்கும்படி மக்களை அச்சுறுத்தி தமது வாகனங்களை பலாத்காரமாக

08



கொட்டாஞ்சேனை ஜோர்ஜ் ஆர் டீ சில்வாமாவத்தையின் எரிபொருள் விற்பனை நிலையத்தில் எரிபொருள் பெறுவதற்காக வாகனங்கள் நீண்ட வரிசையில் நிற்பதை படத்தில் காணலாம். ( படம்: வடகொழும்புதினகரன் நிருபர்)




தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சுபகிருது வருடம் ஆனி மாதம் 07ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 துல்கஃதா பிறை 20

## குறள் தரும் சிந்தனை



துணைநலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்
வேண்டிய எல்லாந் தரும்

ஒருவனுக்கு வாய்த்த துணையின் நன்மை ஆக்கத்தைக் கொடுக்கும், செய்யும் வினையின் நன்மை அவன் விரும்பிய எல்லாவற்றையும் கொடுக்கும்.

# இலங்கைக்கு கைகொடுத்து உதவுவதில் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் இந்தியா

நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடியின் விளைவாக பல்வேறு விதமான அசௌகரியங்களையும் நெருக்கடிகளையும் மக்கள் எதிர்கொண்டுள்ளனர். அந்நிய செலாவணி பற்றாக்குறையை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்றுள்ள இந்நெருக்கடியின் விளைவாக எரிபொருள் மற்றும் எரிவாயுவை பெற்றுக் கொள்வதில் மாத்திரமல்லாமல், பொருட்களின் விலையேற்றத்தினாலும் இந்த அசௌகரியங்களுக்கு மக்கள் முகம் கொடுத்துள்ளனர்.

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி மக்களுக்கு பாதிப்பாகவும் சுமையாகவும் அமைவதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளும் வேலைத் திட்டங்களும் அரசினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் இப்பொருளாதார நெருக்கடியைத் தணித்து கட்டுப்படுத்துவதற்கு உலகின் பல நாடுகளும் இலங்கைக்கு உதவி, ஒத்துழைப்புகளை நல்கி வருகின்றன. அவற்றில் அண்டை நாடான இந்தியா குறிப்பிடத்தக்கதாகும். 'அயல் நாடு முதலில்' என்ற கொள்கைக்கு அமைய இந்தியா, இலங்கைக்கு உதவி, ஒத்துழைப்புகளை நல்கி வருவது தெரிந்ததே.

இந்தியாவும் உலகின் ஏனைய நாடுகளும் சர்வதேச அமைப்புகளும் இலங்கைக்கு அளித்துள்ள உதவி ஒத்துழைப்புகளில் எரிபொருள், எரிவாயு, மருந்துப்பொருட்கள், பசளை உட்பட மனிதாபிமான உதவிகளும் அடங்கியுள்ளன. இருந்த போதிலும் பொருளாதார நெருக்கடியின் விளைவாக மக்கள் எதிர்கொள்ளும் அசௌகரியங்களும் நெருக்கடிகளும் தொடர்ந்த வண்ணமுள்ளன.

இந்நிலையில், இந்தியப் பாராளுமன்றத்தின் வெளியுறவு விவகாரங்களுக்கான ஆலோசனைக் குழுக் கூட்டம் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் தலைமையில் கடந்த சனியன்று நடைபெற்றுள்ளது. இக்கூட்டத்தில் இந்தியப் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் பல கட்சிகளையும் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளனர்.

இக்கூட்டத்தின் போது இலங்கையின் பொருளாதார நெருக்கடி தொடர்பில் விஷேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் இலங்கைக்கு தொடர்ந்தும் உதவி அளிப்பதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சர்வதேச ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவித்த கலாநிதி ஜெய்சங்கர், 'இலங்கை எமது அயல்நாடு. அவர்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளை அவதானிக்கும் போது எம்மால் ஒத்துழைப்புகளை வழங்க வேண்டியுள்ளது. எதிர்வரும் தினங்களில் இலங்கைக்கு மனிதாபிமான உதவிகள் மற்றும் அனர்த்த உதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். ஆனால் எந்தவொரு நாட்டுக்கும் நாம் இதற்கு முன்னர் இவ்வாறான பொருளாதார ஒத்துழைப்புகளை வழங்கியதில்லை' என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடிச் சூழலில் இந்தியா அளித்து வரும் உதவி ஒத்துழைப்புகள் என்றும் மறக்கப்பட முடியாதவை, நன்றிக் கடனுக்குரியவை. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் ஆரம்ப காலம் முதல் நீடித்து நிலவி வரும் தொப்புள் கொடி உறவை உறுதிப்படுத்தி மேலும் பலப்படுத்தும் வகையில் இந்த உதவி ஒத்துழைப்புகள் அமைந்துள்ளன.

இலங்கை இப்பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்கத் தொடங்கியது முதல் அந்நிய செலாவணி, எரிபொருள், எரிவாயு, உயிர் காக்கும் மருந்துப் பொருட்கள், பசளை உள்ளிட்டவற்றை மாத்திரமல்லாமல் அத்தியாவசிய மனிதாபிமான உதவிகளையும் கூட இந்தியா வழங்கியுள்ளது. அத்தோடு தமிழ்நாடு மாநில அரசும் கூட சுமார் 125 கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியான மனிதாபிமான உதவிகளை இந்திய மத்திய அரசின் ஊடாக கடந்த மே மாதம் இலங்கைக்கு முதற்கட்டமாக அனுப்பி வைத்தது. இரண்டாம் கட்ட உதவிகளை அனுப்புவதற்கான நடவடிக்கைகளும் மாநில அரசினால் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளபடி, இலங்கை போன்று எந்தவொரு நாட்டுக்குமே இந்தியா பொருளாதார ஒத்துழைப்புகளை வழங்கியதில்லை. இலங்கை முகம் கொடுத்துள்ள நெருக்கடியின் உண்மைத்தன்மையைத் தெளிவாகப் புரிந்து கொண்டுள்ள பின்னணியில்தான் இந்தியா இவ்வாறு உதவி, ஒத்துழைப்புகளை நல்கி வருகின்றது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. அந்த வகையில் இலங்கைக்கு தொடர்ந்தும் உதவி, ஒத்துழைப்புகளை நல்க இந்தியா எடுத்திருக்கும் தீர்மானம் என்றும் பாராட்டி வரவேற்கப்பட வேண்டியதாகும்.

ஆகவே இந்தியாவின் இந்த உதவி, ஒத்துழைப்புகளை நன்றி உணர்வோடு நோக்குவதோடு அவற்றின் மூலம் உச்ச பிரதிபலன்களை அடைந்து கொள்ளவும் முயற்சிக்க வேண்டும். இதை விடுத்து தொடர்ந்தும் உதவி, ஒத்துழைப்புகளை எதிர்பார்க்கும் மனநிலை ஆரோக்கியமானதல்ல. நாட்டினதும் மக்களினதும் முன்னேற்றத்திற்கான கைகொடுப்பாகவும் பாலமாகவும் நோக்கப்பட வேண்டிய உதவி, ஒத்துழைப்புகள் இவை. அப்போது தான் பொருளாதார மீட்சிக்கான அடித்தளமாகவும் இந்த உதவி, ஒத்துழைப்புகள் அமையும் என்றால் அது மிகையாகாது.

editor.tkn@lakehouse.lk

# வறிய கர்ப்பிணிப் பெண்களுக்கு உணவு கொள்வனவு வவுச்சர்கள் விநியோகம்

ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டம் (WFP) கொழும்பில் வசதி குறைந்த பகுதிகளைச் சேர்ந்த கர்ப்பிணிப் பெண்களுக்கு உணவு கொள்வனவுக்கான வவுச்சர்களை விநியோகிக்கத் தொடங்கியுள்ளது. நாட்டில் உலக உணவுத் திட்டம் ஆரம்பித்துள்ள அவசர கால நடவடிக்கையை மேற்படி வவுச்சர் விநியோகம் குறிக்கின்றது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் காரணமாக உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத மிகவும் பாதிக்கப்பட்டுள்ள மூன்று மில்லியன் மக்களுக்கு உயிர்காக்கும் உணவு, பணம் மற்றும் வவுச்சர் உதவிகளை வழங்கும் வகையில் WFP செயல்படுகின்றது.

## உணவு நெருக்கடியினால் பாதிக்கப்படும் குடும்பங்களுக்கு உதவியளிக்கும் திட்டம் WFP இனால் ஆரம்பம்

மாதாந்த வவுச்சர் ரூ. 15,000 (அமெரிக்க டொலர் 40) பெறுமதியானதாகும். 2,000 இற்கும் மேற்பட்ட பெண்களுக்கு மிகவும் தேவையான உணவை வாங்குவதற்கு இந்த வவுச்சர் உதவும். அத்துடன், கொழும்பு மாநகர சபையின் பொது சுகாதாரப் பிரிவினால் வழங்கப்படும் பிறப்புக்கு முந்திய பராமரிப்புடன் இணைந்து இவ்வுதவி வழங்கப்படும்.

கொழும்பில் உணவு தொடர்பான பணவீக்கம் மே மாதத்தில் 57.4 சதவீதமாக உயர்ந்துள்ளது. அத்துடன், சமையல் மற்றும் போக்குவரத்துக்கான எரிபொருள் தட்டுப்பாட்டினால் வறிய குடும்பங்கள் உணவுப் பொருட்களை வாங்குவதற்கு இயலாமல் சிரமப்படுகின்றன. ஏறக்குறைய 5 மில்லியன் மக்கள், அதாவது இலங்கையின் சனத்தொகையில் 22 சதவீதமானவர்கள் உணவுப் பாதுகாப்பற்றவர்களாகவும் உதவி தேவைப்படுபவர்களாகவும் உள்ளனர்.

ஊட்டச்சத்தான உணவுகளான மரக்கறி, பழங்கள் மற்றும் புரதச் சத்து நிறைந்த பொருட்கள் இப்போது பல வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு கிடைக்காத நிலைமை உள்ளது. 86 சதவீத குடும்பங்கள் குறைந்தபட்சம் சமாளிக்கும் பொறிமுறையைப் பயன்படுத்துகின்றன என்று உலக உணவுத் திட்டத்தின் அண்மைய ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன.



உலக உணவுத் திட்டத்தின் நெகிழ்வுத்திறன், அவசரநிலை மற்றும் சமூகப் பாதுகாப்புக்கான இலங்கையின் பிரதானி ருஷினி பெரேரா கொழும்பு 13, வாசல வீதியிலுள்ள மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலன்புரி நிலையத்தில் கர்ப்பிணித் தாய் ஒருவருக்கு உணவு கொள்வனவுக்கான வவுச்சரை வழங்குகிறார்.

'கர்ப்பிணித் தாய்மார்கள் ஒவ்வொரு நாளும் சத்தான உணவை உண்ண வேண்டும், ஆனால் ஏழைகள் அடிப்படைப் பொருட்களை வாங்குவது மிகக் கடினமாக இருக்கிறது. அவர்கள் உணவைத் தவிர்க்கும் போது அவர்கள் தங்களையும், தமது பிள்ளைகளின் ஆரோக்கியத்தையும் ஆபத்தில் தள்ளுகிறார்கள்' என ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான கொழும்பில் உள்ள WFP துணைப் பிராந்திய பணிப்பாளர் அன்தெயா வெப் கூறினார்.

'நகரங்களில் உள்ள ஏழைக் குடும்பங்கள் மற்றும் தோட்டங்களில் வேலை செய்பவர்களின் வருமானம் குறைந்துள்ள அதேவேளை சந்தையில் பொருட்களின் விலைகள் உயர்ந்துள்ளன. தினமும் உலகளவில் உணவுப் பொருட்களின் மற்றும் எரிபொருளின் விலைகள் அதிகரிக்கின்றன. எனவே உடனடியாக செயல்பட வேண்டியது அவசியம்' என அவர் மேலும் குறிப்பிட்டார்.

நீண்ட காலமாக இலங்கை அரசாங்கத்தின் தேசிய ஊட்டச்சத்து திட்டங்களுக்கு உலக உணவுத் திட்டம் ஆதரவளித்து வருகின்றது. ஆனால், அவை பொருளாதார நெருக்கடியால் கடுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. உலக உணவுத் திட்டத்தின் அவசரகால பதில் திட்டம் தேசிய பாடசாலை உணவுத் திட்டத்தின் மூலம் ஒரு மில்லியன் குழந்தைகளுக்கு பயன் தருகின்றது. ஊட்டச்சத்துள்ள உணவை வழங்கும் திரிபோஷ திட்டத்தில் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கும் உதவுகின்றது. அத்துடன் ஒரு மில்லியன் மக்களுக்கு உணவு, பணம் அல்லது வவுச்சர்கள் ஊடாக உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

உலக உணவுத் திட்டத்தின் பதில் மனிதாபிமான தேவைகள் மற்றும் முன்னுரிமைகள் திட்டத்தின் ஒரு பகுதி ஜூன் 9 அன்று இலங்கையில் ஐ.நாவினால் தொடங்கப்பட்டது. இது ஜூன் முதல் செப்டம்பர் வரை 1.7 மில்லியன் மக்களுக்கு உயிர் காக்கும் உதவியை வழங்க 47 மில்லியன் அமெரிக்க டொலர் தேவையை கோரியிருந்தது.

உணவு மற்றும் ஊட்டச்சத்து தேவைகள் செப்டம்பருக்கு அப்பால் தொடரும் என்ற கரிசனையின் அடிப்படையில், ஜூன் முதல் டிசம்பர் 2022 வரை 3 மில்லியன் மக்களுக்கு உதவ 60 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படும் என WFP மதிப்பிட்டுள்ளது.

உலக உணவுத் திட்டத்தின் இலங்கை திட்டத்திற்கு தற்போதுள்ள நன்கொடையாளர்களில் அவுஸ்திரேலியா, கனடா, சீனா, டென்மார்க், ஜப்பான், கொரியா, மாஸ்டர்கார்ட், ரஷ்யா, சுவிட்சர்லாந்து, ஐக்கிய நாடுகளின் சமாதானத்தை கட்டியெழுப்பும் நிதியம் மற்றும் அமெரிக்கா ஆகியவை அடங்குகின்றன. ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டம் உலகின் மிகப் பெரிய மனிதாபிமான அமைப்பாகும்.

இது அவசர காலங்களில் உயிர்களைக் காப்பாற்றுகிறது. அத்துடன் மோதல்கள், பேரழிவுகள் மற்றும் காலநிலை மாற்றத்தின் தாக்கத்திலிருந்து மீண்டு வரும் மக்களுக்கு உணவு உதவியை வழங்குகிறது.

# நல்லை ஆதீன கலாமண்டபத்தில் தெய்வீகத் திருக்கூட்டத் தொடர்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டுடனும் அகில இலங்கை இந்துமாமன்றத்தின் இணை அனுசரணையோடும் முன்னெடுத்து வரும் தெய்வீகத் திருக்கூட்டத் தொடர் நிகழ்வின் ஏழாவது நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு கோண்டாவில், கைலாசநாத வேத சிவாகம அறநெறிப் பாடசாலையின் ஏற்பாட்டில், நல்லை ஆதீனக் கலா மண்டபத்திலே இடம்பெற்றது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் இரண்டாவது குருமகா சந்நிதானம் வணக்கத்திற்குரிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் அவர்களும் அமெரிக்கா, ஹாவாய் சைவ ஆதீனக் குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் சீடரான வணக்கத்திற்குரிய ஆன்மிகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளும் திருமுன்னிலை வகிக்க, யாழ்ப்பாணம், தேசியக் கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா.தனபாலன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

வரவேற்புரையினை கோண்டாவில் கைலாசநாத வேத சிவாகம அறநெறிப் பாடசாலையின் பொறுப்பாசிரியர் திருமதி கலாவதி பிரகதீஸ்வரன் வழங்கினார். வணக்கத்திற்குரிய ஆன்மிகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளின் ஆசியுரையினைத் தொடர்ந்து, கோண்டாவில் கைலாசநாத வேத சிவாகம அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் அதனைத் தொடர்ந்து நிகழ்வின் தலைவர் கலாநிதி பா. தனபாலனின் தலைமையுரையும் இடம் பெற்றன. 'கண்ணப்ப நாயனாரின் பக்தி' என்னும் விடயத் தலைப்பில், ஆன்மிகப் பிரசாரகரும் அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை ஆசிரியருமாகிய திருமதி. சிவப்பிரியா ராஜ்குமார் வழங்கிய பேச்சு நிகழ்வும் இடம்பெற்றன.யாழ்.பல்கலைக்கழக, இந்துக் கற்கைகள் பீட சைவ சித்தாந்தத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் தி. செல்வமனோகரன் 'ஈழத்துச் சைவத் தமிழ் மறுமலர்ச்சியில் நாவலர்' என்னும் தொனிப்பொருளில் சிறப்புரை ஆற்றினார். நிகழ்வின் நிறைவில், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு 2021 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட நூலறிவுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களில் ஒரு தொகுதியினருக்கான சான்றிதழ் மற்றும் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்பட்டன. அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான பாராட்டுப் பரிசில்கள் வழங்கும் நிகழ்வும், கோண்டாவில், கைலாசநாத வேத சிவாகம அறநெறிப் பாடசாலையின் ஆசிரியர் திருமதி கம்சிதா கைலாசவிஜய் குருக்களின் நன்றியுரையும் இடம்பெற்றன. நிகழ்ச்சித் தொகுப்புரையினை இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி க.சிவமணி வழங்கினார்.





அ.கனகசூரியர்

# வறிய மக்களின் துன்பத்தை உணர்ந்து கொண்ட இராணுவ வீராங்கனைக்கு பலரும் பாராட்டு

## தமிழ் மக்களை நெகிழ வைத்த சம்பவம்!

மன்னார், மடுவில் வயோதிபப் பெண்ணொருவருக்கு உதவிய இராணுவப் பெண் ஒருவரின் செயல் அனைவரையும் நெகிழ்ச்சியடைய வைத்துள்ளது. இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடியால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில், மக்களுக்கு உதவும் பொருட்டு LOVE WITHOUT BORDERS – Compassion Relief எனும் தொனிப்பொருளில் இலங்கையை சேர்ந்த Thalagala Sri Sriddhartha Foundation (தலகல சிறி சிறித்தார்த அறக்கட்டளை) என்ற அமைப்பும், Tan Ngak Buay & Kee Meng Lang Foundation Limited (Singapore) அமைப்பும் இணைந்து நாடு முழுவதும் 63.75 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் 42,500 குடும்பங்களுக்கு உதவும் நிகழ்ச்சி திட்டத்தை முன்னெடுத்து வருகின்றன.

வவுனியா 653 ஆம் பிரிவு பிரிகேடியர் கொமாண்டர் நாமல் சேரவிங்க தலைமையில் வவுனியா மற்றும் மன்னாரைச் சேர்ந்த 1500 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.



இந்நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக மன்னார், மடு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பெரியபண்டிவிரிச்சான் கிழக்கு, மேற்கு மற்றும் சின்னப்பண்டிவிரிச்சானைச் சேர்ந்த கிராம சேவகர்கள் பிரிவுக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பயனாளர்களுக்கும் வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பெரியதம்பனை கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட பயனாளர்களுக்கும் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. மன்னார், மடு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பெரியபண்டிவிரிச்சான் தேசிய பாடசாலையில் உலருணவு பொதிவழங்கும் நிகழ்வு இடம் பெற்றுள்ளது.



வயது முதிர்ந்தவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், கைக்குழந்தை உள்ள தாய்மார்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளென பலரும் பயனாளிகளாக தெரிவு செய்யப்பட்டு உலருணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. அவர்கள் உலருணவுப் பொதிகளை மேடைக்குச் சென்று வாங்கி கைகளிலேந்தி கொண்டு கீழே இறங்கி வருவதற்கு மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தனர்.

இந்நிலையில் இராணுவ வீராங்கனை ஒருவர் அவர்களுக்கு உதவி புரிந்தார். அப்போது ஒரு வயோதிபப் பெண் மேடைக்கு ஏறச் சென்ற போது அவரின் செருப்பு கழன்றது. அவ்வேளையில் அந்த வயோதிபப் பெண் செருப்பை அணிந்து கொள்வதற்கு சிரமப் பட்டுக் கொண்டிருந்தார். இதனை அவதானித்த குறித்த இராணுவப் பெண் அந்த வயோதிபப் பெண்மணிக்கு செருப்பை அணிவித்து உதவினார். அவரை கையோடு அரவணைத்துக் கொண்டு உலருணவுப்பொதியை பெற்றுக் கொடுக்க உதவினார்.

மேற்படி இராணுவப் பெண்மணியின் செயல் அங்கிருந்தவர்களை நெகிழச்சியடையச் செய்துள்ளது. அந்த இராணுவ வீராங்கனை வறியவர்களின் வலிகளை புரிந்து கொண்ட ஒரு பெண்ணாக உள்ளாரென பலரும் பாராட்டினர்.

# ஆண்டவரை உள்ளத்தில் தாங்க தகுதியுள்ளோராவது அவசியம்

கத்தோலிக்க திருச்சபை கடந்த ஞாயிறு நம் ஆண்டவர் இயேசுவின் திருவுடல் திரு இரத்தம் பெருவிழாவை கொண்டாடியது.

கடந்த வாரங்களில் தூய ஆவியின் பெருவிழா அதனையடுத்து மூவொரு கடவுள் திருவிழாவைக் கொண்டாடியுள்ள நாம் இந்த ஞாயிற்றுக்கிழமையில் ஆண்டவரின் திருவுடல் திருஇரத்தம் பெருவிழாவைக் கொண்டாடுகின்றோம்.

இவை ஒரே விடயத்தை தெளிவுபடுத்தும் ஒரு கோர்வையான திருவிழாக்களாகும்.

கடவுள் மனிதனைப் படைத்ததும் மனிதனை நம் சாயலாக படைத்துள்ளோம் என கூறுகின்றார். நம் சாயல் என்பது தந்தை, மகன், தூய ஆவி ஆகிய மூவரையும் குறிக்கின்றது.

அவ்வாறானால் இந்த மூவருக்கும் உள்ள பண்புகள் எங்களுக்குள்ளே இருக்க வேண்டும். அவ்வாறு மூன்று முக்கிய காரணங்களை நாம் குறிப்பிட முடியும் அதில் முதலாவது ஒற்றுமை.

தந்தை, மகன், தூய ஆவி என்னும் போது அவர்கள் மூவரும் ஒற்றுமையாக இருக்கின்றார்கள் என்பதை முதலில் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். அவர்கள் ஒன்றாக இருந்தே செயல்படுகிறார்கள்.

அதுபோன்று தூய ஆவியைப் பெற்றுக் கொள்கின்ற நாம் ஆண்டவரின் திரு உடலை உட்கொள்ளும் எங்கள் மத்தியில் முதலில் ஒற்றுமை என்ற பண்பு நிலையானதாக இருக்க வேண்டும்.

பரிசுத்த வேதாகமத்தில் அப்போஸ்தலர் பணிகளை நாம் பார்த்தால் நம் முன்னோர்களான அப்பத்தில் பங்கு கொண்டவர்கள் எல்லாம் ஒன்றாகக் கூடி ஜெபித்தார்கள். ஒன்றாக பந்தியில் அமர்ந்தார்கள்.ஒன்றாக அப்பம் பிட்டுக் கொண்டார்கள் எனக் கூறப்படுகிறது.

நற்கருணையை பெற்றுக்கொள்கின்ற எம் உள்ளத்தில் இருந்து முதலில் ஒற்றுமை என்ற பண்பை நாம் உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

முதலில் ஒற்றுமை எங்கள் குடும்பத்தில் உள்ளதா என்பதை பார்ப்போம். தாய், தந்தை பிள்ளைகள் என ஒற்றுமையாக நாம் வாழ்கின்றோமா?

கத்தோலிக்கர்களாகிய நாம் இயேசுவின் நற்கருணை பிரசன்னத்தை நம்புகின்றோம். நற்கருணையை பெற்றுக் கொள்கின்ற நம் உள்ளத்திலே ஒற்றுமை இல்லாவிட்டால் நாம் வாழ்கின்ற வாழ்க்கை பொய்யானதாகிவிடும்.

இரண்டாவது பண்பு விட்டுக்கொடுப்பு.






நம் ஆண்டவராகிய இயேசு யோவான் நற்செய்தியில் 8ஆம் அதிகாரத்தில் ஆவியானவர் வரும் போது அவர் முழு உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார் என்றார். அவரை எந்த விதத்திலும் குறைத்து இயேசு கூறவில்லை. இது ஒருவரை ஒருவர் வாழ்க்கையில் தாங்குகின்ற பண்பை குறிப்பிடுகின்றது. ஒருவரை ஒருவர் விட்டுக் கொடுக்காத பண்பு. இதுவும் எங்கள் வாழ்க்கையில் மிகவும் முக்கியமானதாகும்.

நாம் எமது கணவனை, அல்லது மனைவியை, குடும்ப உறுப்பினர்களை பற்றி பிறர் கேட்கும்போது விட்டுக்கொடுக்காமல் பேசுகின்றோமா? அல்லது அவர்களைக் காட்டிக் கொடுப்பது போல் பேசுகின்றோமா?

அன்னை மரியாள் ஒருபோதும் சூசையப்பரை விட்டுக்கொடுத்ததில்லை. ஏனென்றால் அவரது உதரத்தில் இயேசு இருந்தார். அவ்வாறு எமக்குள் இயேசு இருக்கும்போது நாம் பிறரை ஒருபோதும் விட்டுக் கொடுக்க மாட்டோம். ஒருவர் ஒருவரை தாங்குகின்ற எண்ணம் எம்முள்ளே உருவாகும். இயேசு எனக்குள் இல்லாவிட்டால் அதற்கு மாறான எண்ணங்களே உள்ளத்தில் உருவாகும். ஆகவே இயேசு எங்களுக்குள் இருக்கும் போது எங்கள் வாழ்க்கை வித்தியாசமானதாக மாறும்.

மாற்கு நற்செய்தியின் 16 ஆம் அதிகாரத்தில் "நீங்கள் என் பெயரால் பேய்களை ஓட்டுவீர்கள். கொல்லும் நஞ்சைக் கொடுத்தாலும் அது உங்களை ஒன்றும் செய்யாது. நீங்கள் யார் மீதாவது கைவைக்கும் போது அவர்கள் சுகம் பெறுவார்கள்." என்று இயேசு தெரிவிக்கின்றார்.

அதாவது, இயேசுவை உட்கொண்டுள்ள நாம் இயேசுவை எம் இதயத்தில் தாங்கியுள்ள நாம் தொடும்போது பிறர் குணமாகின்றனர் என்பதையே இயேசு கூறுகின்றார்.

நாம புது படைப்பாக ஒவ்வொரு நிமிடமும் மாறுகின்றோம். அவரும் நாங்களும் ஒன்றாக இணைந்து வாழ்கின்றோம் அப்போதுதான் அந்த புதுமைகளை எம்மாலும் செய்ய முடிகின்றது.

"எனது ஆவியை உங்கள்மீது ஊற்றுவேன். எனது சாயலாக உங்களைப் படைத்தேன்" என ஆண்டவர் கூறுகிறார். நாம் அவரது சாயலாகவே படைக்கப்பட்டுள்ளோம் அவரது ஆவி எங்களுக்குள் உள்ளது என்பதை நாம் ஒரு போதும் மறந்து விடக் கூடாது.

ஆகவே எனக்குள் மாற்றம் நடக்கவில்லை. என்னால் புதுமைகள் நடக்கவில்லை என்றால் எனக்குள் ஆண்டவர் இல்லை என்பதே அர்த்தம்.

இயேசுவைப் பெற்றுக் கொள்கின்ற எமக்குள் அற்புதம் நடக்க வேண்டும். இல்லாவிட்டால் இன்னும் எங்களுக்குள் அதற்கான தகுதி வரவில்லை என்றே பொருள்.

முற்காலத்தில் திவ்விய நற்கருணையை பெற்றுக்கொள்ளும் முன் தண்ணீர் அருந்துவதைக் கூட தவிர்த்தே ஆலயத்திற்கு செல்வோம்.

மிகவும் பக்தியாகவும் விசுவாசமாகவும் திருப்பலியில் கலந்து கொள்வோம்.

ஆண்டவரை பரிசுத்தமான நிலையில் பெற்றுக் கொள்வதே அதற்கான தகுதி.

இப்போதெல்லாம் பெரும்பாலும் எவரும் அவ்வாறு செய்வதில்லை.

பெண்கள் தலையில் முக்காடு போட்டு பயபக்தியாக நற்கருணையை பெற்றுக்கொள்ளும் முறை இப்போது மாறிவிட்டது.

அப்படியானால் அப்போது ஒரு இயேசு இப்போது வேறு இயேசுவா? என்ற கேள்வியைத் தான் எழுப்ப முடிகிறது.

உண்மையில் இயேசு இல்லாத இடத்தில் அற்புதங்கள் நடக்காது. நம் உள்ளத்தில் இயேசு இருந்தால் மட்டுமே எமக்குள் அற்புதம் நடக்கும். இயேசு நம் உள்ளத்தில் இருக்க நாம் தகுதி உடையவர்களாக மாற வேண்டும்.

இயேசுவின் நிழலைத் தொட்டு சுகம் பெற்றவர்கள் இருக்கின்றார்கள்.

எங்களிடம் பொன்னும் கிடையாது வெள்ளியும் கிடையாது இயேசு எங்களுக்குள் இருக்கின்றார். இயேசுவின் நாமத்தில் உங்களை குணமாக்குகின்றோம்என்றுகூறிசீடர்கள்நோயாளிகளை குணமாக்கியதை நாம் பார்க்கிறோமே!

அவ்வாறென்றால் எமது செபங்கள் கேட்கப்படாமல் எமது கஷ்ட நிலைமைகள், எமது நோய்கள் தீராமைக்கு என்ன காரணம் என்று சிந்தித்துப் பார்ப்போம்.

இயேசு எங்களுக்குள் இல்லை என்பதே உண்மை.

இயேசுவை இன்னும் நாம் தகுதியோடு பெற்றுக்கொள்ளவில்லை.

எம்மவுஸ் அனுபவத்திலே இயேசுவை கண்டவுடன் இயேசுவிடமிருந்து அப்பத்தைப் பெற்றுக்கொண்டவுடன் சீடர்கள் மாறினர். அவர்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றம் ஏற்பட்டது.அப்படியானால் இயேசுவை எமக்குள் தாங்கி நிற்கும் எமது வாழ்விலும் மாற்றம் ஏற்பட வேண்டுமே! ஏன் அப்படி ஏற்படவில்லை என்றால் நாம் தகுதியுடன் இயேசுவைப் பெறவில்லை என்பதே காரணம்.

சிலர் நற்கருணையை பெற்றுக் கொள்கின்ற வருகின்ற விதம், அதை பெற்றுக் கொள்கின்ற விதம் கூட மிகவும் விந்தையாக உள்ளது. அவர்கள் அந்தத் தகுதியோடு அதைப் பெற்றுக் கொள்வதில்லை.



## திருவுடல், திரு இரத்த திருவிழா திருப்பலியில் அருட் தந்தை அந்தனி பெர்னாண்டோவின் மறையுரையிலிருந்து...

ஆண்டவரை நாம் தகுதியுடன் வாழ்க்கையில் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் வாழ்க்கையில் எம்மால் எதையும் செய்ய முடியாது. அவரது சாயலாக நாம் படைக்கப்பட்டாலும் அவரை எமக்குள் தாங்கியிருக்கவில்லை என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

இயேசு எங்களுக்குள் இருந்தால் எல்லாம் மாறும்.அவர் எங்களுக்கும் வாழ்ந்தால் எங்கள் வாழ்க்கையில் பெரும் மாற்றம் நடப்பது உறுதி. ஐயாயிரம் பேருக்கு அப்பத்தை பகிர்ந்து புதுமை செய்த இயேசு எங்கள் பொருளாதாரத்தை நிவர்த்தி செய்ய வேண்டும். அதற்கு தகுதி உள்ளவர்களாக நாம் மாற வேண்டும்.

அப்படி மாறினால் எங்கள் வேண்டுதல்கள் நிறைவேறும். எம்மாலும் பிறரை குணமாக்க முடியும். நாம் இப்போதாவது அவரது பிரசன்னத்தை உண்மையாக உணர்வதற்கு முயற்சிப்போம்.

எல்.செல்வா...

# கிறிஸ்துவின் தியாகமிக்க அன்பை பிறரோடு பகிர்ந்து வாழ்வோம்



திருச்சபையின் மையமே நற்கருணைதான். திவ்விய நற்கருணையில் நம் ஆண்டவர் இயேசு உயிரோடு வாழ்கிறார். அந்த நற்கருணையை திருப்பலி மூலம் பெற்று உட்கொள்ளும் நாம் இயேசுவோடு இரண்டறக் கலந்து அவருடைய பிள்ளைகளாகிறோம். இது கத்தோலிக்க மக்களாகிய நமது அசையாத நம்பிக்கை.

இரண்டாம் உலகப்போரின்போது ஜப்பான் நாட்டின் ஹிரோஷிமா நாகசாகி ஆகிய இரண்டு நகரங்களில் வீசப்பட்ட இருபெரும் அணுகுண்டுகள் இலட்சக்கணக்கான மக்களைக் கொன்று குவித்தன. அப்போது ஹிரோஷிமாவில் இயேசு சபையின் முன்னாள் அதிபர் மறைந்த பேதுரு அருப்பே அவர்கள் புதிய துறவியரின் சபை இயக்குநராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

நாக்கமுரா என்ற ஏழை இளம்பெண் அவருக்கு நன்கு அறிமுகமாகியிருந்தார். இறைபக்தியும் நற்கருணை ஆண்டவர் மீது தணியாத தாகமும் கொண்டிருந்த நாக்கமுராவும் அந்தக் குண்டுவெடிப்பில் சிக்கி சின்னாபின்னமாகியிருந்தார். அவ்விளம்பெண்ணின் நிலை என்ன ஆயிற்று என்றே தெரியாத நிலையில், தன் குருமானவர்களை அழைத்துக்கொண்டு நற்கருணையையும் கரங்களில் தாங்கிக்கொண்டு அப்பெண்ணைச் சந்திக்கச் சென்றார் பேதுரு அருப்பே.

அப்பெண் தங்கியிருத்த அந்தக் குடிசையானது அணுகுண்டுவெடிப்பில் சிக்கி சுக்குநூறாக சிதைந்து போயிருந்தது. குருமானவர்களின் உதவியோடு இடிபாடுகளையெல்லாம் அகற்றிவிட்டு நாக்கமுராவைத் தேடினார். அந்தோ பரிதாபம்! பாதி எரிந்தும் எரியாமலும் அலங்கோலமான நிலையில் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தார் நாக்கமுரா.

அவரைத் தொட்டு தூக்கி முதலுதவி செய்ய முனைந்தார் பேதுரு அருப்பே. அப்போது கொடிய வேதனையில் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த நாக்கமுரா, முனகிக்கொண்டே, தந்தையே! எனக்கு நற்கருணைக் கொண்டு வந்திருக்கிறீர்களா? என்று அருப்பே அவர்களைப் பார்த்துக் கேட்டார். இதோ! இதோ! உனக்காகவே கொண்டு வந்திருக்கிறேன் என்று கூறியவாறே, தன் கரங்களில் வைத்திருந்த சிறிய நற்கருனைப் பேழையைத் திறந்து திருநற்கருணையை அவருக்கு வழங்கினார். சொல்லொண்ணா அந்தத் துயரத்தின் மத்தியிலும் இன்முகத்தோடு இயேசுவை தன் உள்ளத்தில் ஏற்ற சிறிது நேரத்திலேயே அவர் உயிர் பிரிந்தது. உயிரோட்டம் நிறைந்த இந்த நிகழ்வை ‘நற்கருணையில் வளர்ந்தேன்’ என்ற நூலில் பதிவு செய்திருக்கிறார் அண்ணல் பேதுரு அருப்பே.

நாம் கிறிஸ்துவின் திருவுடல் திருஇரத்தப் பெருவிழாவைக் கொண்டாடுகிறோம்.

இயேசுவின் உயிரில் கலந்த உறவாக வாழ நம்மை அழைக்கின்றது இப்பெருவிழா. திரு அவையின் மையமே நற்கருணைதான். அப்படியென்றால் கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றும் உச்சமுமாக விளங்குவது இந்த நற்கருணைதான்.




ஆப்பிரிக்க நாட்டின் ஒரு கிராமத்தில் திருப்பலிக்காகக் கூடிவந்த மக்கள், ‘நற்கருணை இல்லாமல் எங்களால் வாழ முடியாது’ என்று உறுதிபடக் கூறினர். காரணம், நற்கருணை வழியாகவே நாம் கிறிஸ்துவில் ஒன்றறக் கலந்துவிடுகிறோம். ஒருமுறை உப்புச்சிலை கடலைப் பார்த்து, “நான் உன்னை உயிருக்கு உயிராகக் காதலிக்கிறேன்” என்று கூறியதாம். அதற்கு கடல், “அதனை நீ எப்படி நிரூபிப்பாய்” என்று கேட்டதற்கு, “இதோ இப்படித்தான்” என்று கூறி அந்த உப்புச்சிலை கடலுக்குள் இறங்கிப் போய் கடல் நீரோடு ஒன்றறக் கலந்து போனதாம்.

இயேசுவும் இப்படித்தான் நான் உங்களை அன்பு செய்கிறேன் என்று கூறி தன் திருவுடலையும் திருஇரத்தத்தையும் நமக்கு வழங்கியதன் வழியாக நம்முள் ஒன்றாகிப் போனார். நாள்தோறும் திருப்பலியில் நாம் உண்ணும் திருவுடல், திருஇரத்தம் வழியாக அவரோடு நாமும் ஒன்றாகிப் போகிறோம்.நமது உடல் கற்பனைக்கு எட்டாத அதிசயங்கள் நிறைந்தது. நம்மை ஆச்சரியப்படுத்தும் விதத்தில் நமது உடல் ஒவ்வொரு வினாடியும் இயங்கிக் கொண்டே இருக்கிறது. ஆனால் உடல் என்ற இந்த உயிர் இயந்திரம் செய்யும் அற்புதங்களை நாம் நினைப்பதும் இல்லை, இரசிப்பதும் இல்லை. சராசரியாக ஒவ்வொரு மனிதரும் தங்கள் வாழ்நாள்களில் 30 ஆயிரம் கிலோ எடை கொண்ட உணவினை உட்கொள்கிறார்.

இதயம் ஒர் ஆண்டிற்கு 43 இலட்சம் முறை துடிக்கிறது. இதுபோல் ஏராளமான பிரமிக்கத்தக்கப் பணிகளை ஒவ்வொரு வினாடியும் நமது உடல் செய்துகொண்டே இருக்கிறது.

அவ்வாறே, நமது உடல் பல பாகங்களைக் கொண்டுள்ளது. அவை அனைத்தும் ஒருங்கிணைந்து ஒன்றுபட்டு இயங்குவது இந்த உயிர் இயந்திரத்தின் சிறப்பம்சமாக அமைகிறது. உடலுக்குள் இரத்தம் தினமும் 16 கோடியே 80 லட்சம் மைல் தூர அளவுக்குப் பயணித்துக்கொண்டே இருக்கிறது.

அதற்காகத்தான் இரத்தம் தினமும் உடலுக்குள் அவ்வளவு தூரம் பயணிக்க வேண்டியிருக்கிறது. இரத்தத்தின் சிவப்பு அணுக்களில் இருக்கும் ஹீமோகுளோபினின் பங்களிப்பு மிக முக்கியமானது. இதுதான், ஆக்சிஜனை சுவாச கட்டமைப்புகளில் இருந்து பெற்று, செல்களில் கொண்டுபோய் சேர்க்கிறது.

இந்தச் சமுதாயத்தின் மேம்பாட்டிற்காக அர்ப்பணிக்கப்படும் தியாகத்தின் சின்னமாக மாறும்போது அது திருவுடல் திருஇரத்தம் என்ற பெருமையைப் பெறுகிறது.

இயேசு அவர்களிடம், “உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்; மானிடமகனுடைய சதையை உண்டு அவருடைய இரத்தத்தைக் குடித்தாலொழிய நீங்கள் வாழ்வு அடையமாட்டீர்கள். எனது சதையை உண்டு என் இரத்தத்தைக் குடிப்பவர் நிலைவாழ்வைக் கொண்டுள்ளார். நானும் அவரை இறுதி நாளில் உயிர்த்தெழச் செய்வேன்.

எனது சதை உண்மையான உணவு. எனது இரத்தம் உண்மையான பானம். எனது சதையை உண்டு எனது இரத்தத்தைக் குடிப்போர் என்னோடு இணைந்திருப்பர், நானும் அவர்களோடு இணைந்திருப்பேன். (யோவா 6:5356)

. இயேசு கூறும் இந்தப் பகுதியை நாம் எப்படி புரிந்துகொள்வது? இயேசுவின் திருவுடலையும் திருஇரத்தையும் அடையாளப்படுத்தும் அப்பத்தையும் இரசத்தையும் நாம் உண்டு பருகும்போதெல்லாம் நாம் அவராகவே மாறுகிறோம்.

அத்துடன் அவரது இறையாட்சிக் கொள்கைகளும், இலட்சியங்களும் நமதாகின்றன.

அதனால்தான் ‘இதை என் நினைவாகச் செய்யுங்கள்’என்றார் இயேசு., நாம் உண்ணும் இயேசுவின் திருவுடலும் திரு இரத்தமும் நம் உயிரோடும் உடலோடும் உணர்வோடும் ஒன்றாகக் கலந்துவிடுகிறது.

உண்மை அன்பை பற்றி கவிஞர் எழுதுகிறபோது, ‘விழியில் விழுந்து இதயம் நுழைந்து உயிரில் கலந்த உறவே’ என்கிறார். நாள்தோறும் நம் இதயம் நுழையும் இயேசுவின் திருவுடலும் திருஇரத்தமும் நம் உயிரில் கலந்து அவரது உயிரிலும் உறவிலும் நம்மை நிலைநிறுத்தட்டும்.

ஆம், இயேசு தனது திருவுடல், திருஇரத்தத்தை நமக்கு வழங்குவதன் வழியாக, நமது உயிருக்குள் ஒன்றாகி நாள்தோறும் நம்முள் வாழ்கிறார். அவரது என்றுமுள்ள அன்பு நமக்கு நாள்தோறும் உறுதிசெய்யப்படுகிறது.

ஆகவே, கிறிஸ்துவிடமிருந்து நாம் பெற்றுக்கொண்ட இத்தகைய தியாகமிக்க அன்பை பிறரோடு பகிர்ந்து வாழ்வோம்.

அருட்பணி
செல்வராஜ் சூசைமாணிக்கம்...

# கிழக்கின் குரல்



# தேர்தல் ஒன்றின் மூலம் பொருளாதார நெருக்கடியை மீள கட்டியெழுப்ப முடியாது

## பிரதமர் மாறுவதால் டொலர் வந்து கொட்டாது என்கிறார் அமைச்சர் நிமல்

**றொட்டவெவ குரூப் நிருபர்**

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை, தேர்தல் ஒன்றின் மூலம் மீளக் கட்டியெழுப்ப முடியாது என விமான போக்குவரத்து மற்றும் கப்பல் துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

நாட்டில் தற்போது அமைக்கப் பட்டுள்ள அரசாங்கம் ஸ்திரதன்மை கொண்ட அரசாங்கம் எனவும் ஜே.வி.பி மற்றும் சஜித் மூலம் நாட்டிற்கு டொலர் கொண்டுவர முடியாது என அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

திருகோணமலை இயற்கை துறைமுகத்தை பார்வையிட நேற்று முன்தினம் (19) உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றினை மேற்கொண்டு பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்



இயற்கை துறைமுகமான திருகோணமலை துறைமுகத்தை உலகின் தலைசிறந்த வர்த்தக துறைமுகமாக அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. கடந்த பல வருடங்களாக இலாபமீட்டாமல் இருந்த திருகோணமலைத் துறைமுகம் கடந்த 6 மாதங்களில் சற்று இலாபம் தரக்கூடிய துறைமுகமாக மாற்றப்பட்டுள்ளது. நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு உலக நாடுகளின் ஒத்துழைப்பு கிடைக்காமல் இருப்பதற்கு காரணம் நாட்டில் ஸ்திரமான அரசாங்கம் இல்லாமையே என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டை கட்டியெழுப்புவதற்கு தேர்தல் ஒன்றுக்கு தயாராக உள்ளீர்களா என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் இவ்வாறு பதிலளித்தார். தேர்தல் ஒன்றுக்கு முகம் கொடுப்பதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாது. நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த அசாதாரண சூழ்நிலை, பொருளாதார நெருக்கடிக்கு தேர்தல் ஒன்றின் மூலம் தீர்வு கிட்டாது எனவும் விமான போக்குவரத்து மற்றும் கப்பல் துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இதன் போது தெரிவித்தார்.

நாளை பிரதமர் மாற்றப்படுவதால் அரசாங்கம் மாற்றப்படுவதாலும் நாட்டில் உள்ள பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது. அதனால் நாட்டில் டொலர் வந்து கொட்ட போவதில்லை.

மேலும் மக்கள் விடுதலை முன்னணியினராலும் டொலர் கொண்டுவர முடியாது. சஜித் மூலமும் டொலர் கொண்டு வர முடியாது எனவும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

# மண்ணெண்ணெய் விளக்கு தீப்பிடித்ததில் குடும்பப்பெண் பரிதாப மரணம்

**(மண்டூர் நிருபர்)**

ஏறாவூர் பொலிஸ்பிரிவிற்குட்பட்ட முருகன்கோயில் வீதி மயிலெம்பாவெளி பிரதேசத்தைச் சேர்ந்த வயோதிபப்பெண், மண்ணெண்ணெய் விளக்கு நிலத்தில் விழுந்து தீப்பிடித்ததில் உயிரிழந்தார். இச்சம்பவம் (18) இடம் பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முருகன்கோயில் வீதி மயிலெம்பா வெளி பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தாயாரான கிருஷ்ணபிள்ளை வள்ளிப்பிள்ளை என்பவரே இச்சம்பவத்தில் பலியானவராவார்.

நாட்டில் மின்வெட்டு அமுல்படுத்தப்படுவதால், வீட்டில் மண்ணெண்ணெய் விளக்கை கையிலெடுத்தவாறு, இப்பெண் சிறுநீர் கழிக்கச்சென்றுள்ளார்.

இதன்போது விளக்கு தவறுதலாக நிலத்தில் விழுந்து தீப்பிடித்தது. அயலவர்களின் உதவியுடன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்கையில், இப்பெண் மரணமடைந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது ஏறாவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் வேண்டு தலுக்கமைய சம்பவ இடத்திற்குச் சென்ற பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம்.நசீர் சடலத்தை பார்வையிட்டு, பிரேத பரிசோதனைக்கு உட்படுத்திய பின்னர் உறவினர்களிடம் ஒப்படைந்தார்.மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# போக்குவரத்து விழிப்புணர்வு பதாகை திறந்து வைப்பு

**நிந்தவூர் குறூப் நிருபர்**

நிந்தவூர் அல்லிமுல்லை சந்தியில் அமையப்பெற்றுள்ள வீதிச்சோதனைச் சாவடியில் போக்குவரத்து விழிப்புணர்வு பதாகை நேற்று முன்தினம் (18) காலை வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

ஐ,எஸ்,ஈ டிஜிற்றல் நேஷன் நிறுவனத்தின் அனுசரணையில் பொருத்தப்பட்ட குறித்த விழிப்புனர்வு பதாகைகளை, இலங்கை இராணுவத்தின் 241 ஆம்படைப்பிரிவின் கட்டளைத்தளபதி பிரிகேடியர் ஏ. சந்திர அபயகோன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

இந்நிகழ்விற்கு விஷேட அதிதியாக கிழக்கு மாகாண ஆளுனரின்



சுதேச மருத்துவதுறை இணைப்பாளரும், கிழக்குமாகாண சுற்றுலாத்துறை பணியகத்தின் பணிப்பாளருமான சுலைமான் நாஸிறூன், கல்முனை பிராந்திய 18ஆவது விஜயபா காலாட் படையின் இரண்டாம் நிலை கட்டளை அதிகாரி மேஜர் தர்சனதரங்க, நிந்தவூர் இராணுவ முகாமின் பொறுப்பதிகாரி மேஜர் கசுன் சில்வா, நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் இஹ்ஜாஸ் இஸ்மாயில் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# ஆற்றுமண் ஏற்றிவந்த வாகனங்களுக்கு அபராதம் விதிப்பு, நீதி மன்றம் நடவடிக்கை

**பாலமுனை தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி ஆற்றுமண் ஏற்றி வந்த டிப்பர்வாகன உரிமையாளர்களுக்கு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தினால் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று, பனங்காடு, சாகாமம் அட்டாளைச்சேனை,ஒலுவில் மற்றும் பள்ளக்காட்டு நகர் ஆகிய வெவ்வேறு பிரதேசங்களிலிருந்து அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி ஆற்றுமண் ஏற்றி வந்த வாகனங்களை கடந்த வெள்ளிக்கிழமை (17) பொலிஸார் கைப்பற்றியிருந்தனர்.

கைப்பற்றப்பட்ட இந்த டிப்பர் வாகனங்களை அக்கரைப்பற்று நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் ஆஜர்படுத்தியபோதே இத்தண்டப்பணம் விதிக்கப்பட்து.

இதற்கமைய அக்கரைப்பற்று பனங்காடு மற்றும் அட்டாளைச்சேனை பிரதேசங்களில் கைப்பற்றிய டிப்பர் வாகனங்களுக்கு தலா 10000 ரூபா தண்டப்பணமும், சாகாமம் வீதியில் கைப்பற்றப்பட்ட டிப்பர் வாகான உரிமையாளர் ஏற்கனவே முன்குற்றம் புரிந்த காரணத்தினால் 25000 ரூபா தண்டப்பணமும், ஒலுவில், பள்ளக்காட்டு நகர் உழவு இயந்திர உரிமையாளருக்கு முன்குற்றம் புரிந்த காரணத்தினால் 20000 ரூபா தண்டப்பணமும் விதிக்கப்பட்டது. வாகன உரிமையாளர்கள் தண்டப்பணங்களை செலுத்தியதைடுத்து, வாகனங்களும் விடுவிக்கப்பட்டன.

## காரைதீவு பத்திரகாளி அம்பாளின் தீமிதிப்பு வைபவம்

# காரைதீவுபத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம்




**காரைதீவு குறூப் நிருபர்**

வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் மற்றும் தீமிதிப்பு வைபவம் நாளை (22) புதன்கிழமை கதவு திறத்தலுடன் ஆரம்பமாகின்றது. தொடர்ச்சியாக 10 தினங்கள் சடங்கு இடம்பெற்று, ஜூலை மாதம் முதலாம் திகதி தீமிதிப்பு வைபவம் நடைபெறவுள்ளது.

சம்மாந்துறை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் மற்றும் காரைதீவு பத்திரகாளியம்மன் ஆலயத்தின் பிரதம பூசகர் குணசிங்கம் லோகேஷ் தலைமையில் இவ்வுற்சவம் இடம்பெற இருக்கின்றது. தினமும் பகல் பூசை 13.30 மணிக்கும், இரவு பூசை 7 மணிக்கும் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. மேலும் (24) வெள்ளிக்கிழமை மகாவிஷ்ணு ஆலயத்தில் பாற்குடபவனியும் இடம்பெறவுள்ளது. எதிர்வரும் (28)செவ்வாய்க்கிழமை முத்துச்சரம் புறத்தில் அம்பாள் வீதியுலா வரவுள்ளார். தீமிதிப்பு வைபவம், ஜூலை (01) வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு மஞ்சள் குளிக்கும் நிகழ்வு இடம்பெற்றதும் ஆரம்பமாகும்.

அன்றைய தினம் அன்னதான நிகழ்வும் இடம்பெறும். இறுதியாக 08ஆம் திகதி வெள்ளிக்கிழமை எட்டாம் நாள் வைரவர் திருச்சடங்கு இடம்பெறுமென்றும் ஆலய பரிபாலன சபையினர் தெரிவிக்கின்றனர்.

# கதிர்காமத்திற்கான காட்டுப்பாதையை ஜூலை 22 இல் திறக்க ஏற்பாடு

**காரைதீவு குறூப் நிருபர்**

வரலாற்றுப் பிரசித்திபெற்ற கதிர்காமம் ஆடிவேல் விழா உற்சவ பாதையாத்திரைக்கான காட்டுப்பாதை எதிர்வரும் ஜூலை (22) திறக்கப்படவுள்ளதாக கதிர்காமம் கந்தன் ஆலய பஸ்நாயக்க நிலமே திசான் குணசேகர தெரிவித்தார்.பின்னர் இப்பாதை,ஒகஸ்ட் மாதம் 5ஆம் திகதி மீண்டும் பூட்டப்படும். கதிர்காமம் ஆடிவேல் விழா திருவிழாவிற்கு வடக்கு, கிழக்கிலிருந்து இம்முறை ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

திருவிழாவில் கலந்து கொள்வதற்காக வடக்கு மற்றும் கிழக்கில் இருந்து வரும் யாத்திரிகர்கள் குமண மற்றும் யால வனப்பூங்காவில், ஜூலை 22 முதல் ஆகஸ்ட் 05 வரை அனுமதிக்கப்படுவர்.

யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து ஆரம்பித்த பாதயாத்திரை குழுவினர், தற்போது திருகோணமலை மாவட்டத்திற்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருள் பாவனை,சட்டவிரோத செயற்பாடுகளை தடுக்க ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் நடவடிக்கை

**வாச்சிக்குடா விஷேட நிருபர்**

ஆலையடிவேம்பு பிரதேசத்தில் இடம்பெறும் போதைப்பொருள் பாவனை மற்றும் சமூக விரோத செயற்பாடுகளை இல்லாதொழிக்கும் நடவடிக்கைகளை, பிரதேச செயலகத்துடன் இணைந்து சமூக அமைப்புக்கள் முன்னெடுக்கும் வகையிலான விழிப்புணர்வுக்கூட்டம் பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதேச செயலாளர் வி.பபாகரன் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில், பிரதேசத்தில் உள்ள ஆலயங்கள் மற்றும் இந்து அமைப்புக்கள், விளையாட்டுக்கழகங்கள், சமூக அமைப்புக்கள் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், பெண்கள் அமைப்புக்கள் என பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது உரையாற்றிய பிரதேச செயலாளர், ஆலையடிவேம்பில் அண்மைக்காலமாக மீண்டும் சட்டவிரோத செயற்பாடுகள் தலைதூக்கியுள்ளன.

இதனை தடுப்பதற்கு பிரதேச செயலாளர் ஆகிய என்னால் மாத்திரம் முடியாது.

எனவேதான் சமூக அமைப்புக்களாகிய உங்களது பங்களிப்பை எதிர்பார்க்கின்றேன். இச்செயற்பாட்டில் அனைவரும் இணைந்து பயணிப்போமானால் வெற்றி பெறுவது இலகு. அத்தோடு பிரதேசத்திலுள்ள 90 வீத மானவர்கள் நல்லவர்களே. ஆனால் மிகுதியான 10 வீதமானவர்களின் செயற்பாடுகளே பிரதேசத்தை ஒட்டுமொத்தமாக குழப்புகின்றது.

ஒரு குடம் பாலில் ஒரு துளி விஷம் கலப்பதாக இவர்களின் செயற்பாடுள்ளது. ஆகவே அதனை தடுப்பது நமது ஒவ்வொருரினதும் கடமை. இல்லையேல் நமது சந்ததி நிம்மதியாக வாழ முடியாது.



குற்றச்செயல்களை தடுப்பதற்கு பொறுப்பானவர்கள் நடவடிக்கை எடுக்காவிடின் அதனை உயர் மட்டத்திற்கு தெரிவிப்போம்.

குறிப்பாக ஆலயங்களின் நடைபெறும் அசம்பாவிதங்களை தடுப்பது, சட்டத்தை மீறி செயற்படுகின்றவர்களை அடையாளப் படுத்துவது என்ப வை நமது கடமை.

அவ்வாறு அடையாளப்படுத்தும்போது நடவடிக்கை எடுக்காவிடில்; சம்மந்தப்பட்டவர்களுக்கு எதிராக மேலதிக நடவடிக்கைக்கு செல்வோம்.

அத்தோடு பொலிசாரின் உதவிக்கு மேலதிகமாக இராணுவத்தின் உதவியையும் பெறுவோம் என்றார். மேலும் குற்றத்தை தடுப்பதற்கான படிமுறைகள் பற்றியும் இங்கு தெளிவுபடுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் பல்வேறு தலைவர்களும் கருத்து தெரிவித்ததுடன் ஒட்டுமொத்தமாக பொலிஸாரின் திருப்தியற்ற நடவடிக்கையே குற்றச்செயல்கள் அதிகரிப்பதற்கு காரணம் என்றனர்.

அத்தோடு பிரதேச செயலாளர் எடுக்கும் நடவடிக்கைக்கு தாம், எப்போதும் உறுதுணையாக இருப்பதுடன் நீண்ட காலத்தின் பின்னர், பிரதேசத்தின் மீது பற்றுடன் செயற்படும் பிரதேச செயலாளருக்கு நன்றியும் தெரிவித்தனர்.

இதில், கிராம உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக கிராம உத்தியோகத்தர்களுக்கான நிருவாக உத்தியோகத்தர் பரிமளவாணி சில்வெஸ்டர், சிரேஸ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.பி.ரவிச்சந்திரன் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டனர்.

# வெல்லாவெளியில் விசேட நிவாரணக் கொடுப்பனவு

**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**

போரதீவுப்பற்று பிரதேசசெயலகப் பிரிவிற்குட்பட்ட வெல்லாவெளி சமுர்த்தி வங்கியில் சமுர்த்திப்பயனாளிகளுக்கு விஷேட நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்பட்டது.

உலக வங்கி நிதியுதவியுடன், இக்கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.



போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் ஆர்.ராகுலநாயகி தலைமையில் நடைபெற்ற நிந்இகழ்வில் மாவட்ட கண்காணிப்பு சிரேஷ்ட முகாமையாளர் என். விஸ்வலிங்கம், தலைமை முகாமையாளர் தனேந்திரராசா, வங்கி முகாமையாளர் ரீ.யோகச்சந்திரன், கணக்காய்வு உத்தியோகத்தர் மயூரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இங்கு பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட 705 சமுர்த்தி முத்திரைப் பயனாளிகளுக்கு தலா 3ஆயிரத்து 300 ரூபா வீதம் 21 இலட்சத்து 56 ஆயிரம் ரூபாவும், காத்திருப்பு பட்டியலிலுள்ள 17 பயனாளிகளுக்கு தலா 5 ஆயிரம் ரூபா மற்றும் 25 ஆயிரம் ரூபா வீதமும் வழங்கப்பட்டன.

# எரிபொருள் வழங்கப்படாது என அறிவித்தும் மக்கள் தொடர்ந்து வரிசையில் காத்திருப்பு

இன்னும் மூன்று நாட்களின் பின்பே பெற்றோல் வழங்கப்படுமெனவும் வரிசையில் நிற்க வேண்டாமெனவும் அரசாங்கம் பொதுமக்களுக்கு அறிவித்திருந்தும் நற்பிட்டிமுனை கல்முனை அடுத்து அமைந்துள்ள கிராமப்பகுதி மக்கள் இரவு பகல் பாராது பலமணி நேரம் நின்று திரும்பிச்செல்லும் நிலையில் உள்ளனர்.

பெற்றோல் நிலைய பொறுப்பாளர்கள் பெற்றோல் வழங்கப்படும் அல்லது வழங்கப்படமாட்டாது எனும் செய்தியை பாதுகாப்புக்கு வந்துள்ள படையினர் மூலம் இதனை தெரிவிக்க வேண்டுமெனவும் பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

அதிக உஷ்ணம் காரணமாக அம்பாறை மாவட்டத்தில் தற்போது ஒருவித வைரஸ் இருமல் தடிமண் காய்ச்சல் போன்ற நோய்கள் வேகமாக பரவி வருவதையும் சுட்டிக்காட்டுகின்றனர்.

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 ஜூன் 21
செவ்வாய்க்கிழமை


# இரணைமடு குள நீரை குடிநீராக அக்கராயனுக்கு வழங்க கோரிக்கை

**முலலைத்தீவு குறுப் நிருபர்**

கிளிநொச்சி அக்கராயன் கிராம அலுவலர் பிரிவுக்கு இரணைமடுக் குளத்தின் நீர் விரைவாக குடிநீராக கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அக்கராயன் பொது அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

கிளிநொச்சியில் இருந்து கோணாவில் வழியாக அக்கராயன் கிழக்கு வரை தற்போது நீர்க் குழாய்கள் பொருத்தப்பட்டுள்ளன. 2010 ஆம் ஆண்டு மீள் குடியேற்றத்தின் பின்னர் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினரால் குடிநீர்த் திட்டம் ஒன்று அக்கராயனில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

450 குடும்பங்களுக்கு குடிநீர் வழங்குவதற்கென தொடங்கப்பட்ட திட்டத்தின் மூலம் தற்போது 196 குடும்பங்களுக்கே இரு மணித்தியாலங்களில் குடிநீரினைப் பெற வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. கிளிநொச்சியில் இருந்து அக்கராயனுக்கு குடிநீர் வழங்கப்படுமானால் அக்கராயன் பிரதேச வைத்தியசாலை, அக்கராயன் மகா வித்தியாலயம், அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் ஆகியவற்றிற்கும் குடிநீர்த் தேவைப்படுகின்ற குடும்பங்களுக்கும் 24 மணித்தியாலயம் குடிநீர் கிடைக்கக் கூடிய நிலைமை உருவாகும்.



கிளிநொச்சி மாவட்டத்தில் யுன், யுலை மாதங்களில் வறட்சி ஏற்படுகின்றபோது குடிநீர் நெருக்கடியினை எதிர்கொள்கின்ற கிராமங்களில் ஒன்றாக அக்கராயன் கிராம அலுவலர் பிரிவு காணப்படுகின்றது.

கிளிநொச்சியில் இருந்து வருகின்ற குடிநீரினை அக்கராயன் பிரதேச வைத்தியசாலையின் நீர்த்தாங்கி, கெங்காதரன் குடியிருப்பில் வடமாகாண சபையினால் அமைக்கப்பட்டு செயலிழந்து உள்ள நீர்த்தாங்கி, அக்கராயன் மகா வித்தியாலயத்திற்கு முன்னால் உள்ள கிராமிய குடிநீர் வழங்கல் திட்டத்தின் நீர்த்தாங்கி என்பவற்றில் குடிநீரினை சேமித்து வைக்கக் கூடிய நிலைமை உள்ளது.

இரணைமடுக் குளத்தில் இருந்து சுத்திகரிக்கப்பட்டு அக்கராயன் வரை குடிநீர் விநியோகிக்கப்பட உள்ளது. இதன் மூலம் கிளிநொச்சி மாவட்டத்தின் குடிநீர் நெருக்கடியினை எதிர்கொண்டுள்ள கிராமங்களில் ஒன்றான அக்கராயனில் வாழ்கின்ற மக்கள் 24 மணித்தியாலம் குடிநீரினைப் பெற்றுக் கொள்ளக் கூடிய நிலைமையினை நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தற்போது உருவாக்கி வருகின்றது.

அக்கராயன் கிராம அலுவலர் பிரிவில் தற்போது 750 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றன. கிளிநொச்சி மாவட்டத்தின் உப நகரமான அக்கராயன் எதிர்காலத்தில் தனிப் பிரதேச செயலகம், தனிப் பிரதேச சபை என்பன உருவாக உள்ள நிலையில் பொது மக்கள், மாணவர்கள் எல்லோருக்கும் நன்மை அளிக்கும் வகையில் இரணைமடுக் குளத்தின் நீர் குடிநீராக கிடைக்க இருப்பது மக்கள் மத்தியில் பெரும் மகிழ்ச்சியினை உருவாக்கி உள்ளது.

# மன்னார் மறைமாவட்டத்தில் திருவிவிலிய அறிவுப் போட்டிகள்

**தலைமன்னார் விஷேட நிருபர்**

வருடந்தோறும் தேசிய ரீதியில் நடைபெறும் திருவிவிலிய அறிவுப் போட்டிகள் நடப்பு வருடத்திலும் (2022) நடைபெறுவதற்கான முன்னேற்பாடுகள் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் ஆரம்ப கட்டங்களாக மன்னார் மறைமாவட்டத்தில் தற்பொழுது பங்கு ரீதியாக இவ் போட்டிகள் நடைபெற்று முடிந்திருக்கும் இவ்வேளையில் இதையடுத்து மன்னார் மறைமாவட்டத்தில் மறைக்கோட்ட ரீதியில் இப் போட்டிகள் இடம்பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மன்னார் மறைமாவட்டத்தில் நான்கு மறைகோட்டங்களில் நடைபெற இருக்கும் இப்போட்டிகள் ஏற்கனவே தெரிவித்திருப்பதற்கு அமைவாக மன்னார் மறைக்கோட்ட மட்டத் திருவிவிலிய அறிவுப் போட்டிகள் அனைத்தும் 25.06.2022 சனிக்கிழமை நடைபெறும் எனவும் திருவிவிலிய எழுத்துப் பரீட்சை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும் எனவும் பேச்சுப் போட்டிகள் அன்று மதியம் ஒரு மணிக்கும் ஆரம்பமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மன்னார் மறைமாவட்ட மறைக்கல்வி நடுநிலையம் அறிவித்திருப்பதாவது,

நான்கு மறைக்கோட்டங்களிலும் நடைபெற இருக்கும் பரீட்சை மற்றும் போட்டிகள் பரீட்சை நிலையங்களாக வவுனியா மறைக்கோட்டத்தில் அருட்பணி அ. ஆரோக்கியம் அடிகளார் பொறுப்பில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் தேசிய பாடசாலையிலும்

முருங்கன் மறைக்கோட்டத்தில் அருட்பணி. அ.யூட் குரூஸ் அடிகளார் பொறுப்பில் மன். முருங்கன் தேசிய பாடசாலையிலும் மடு மறைக்கோட்டத்தில் அருட்பணி.எஸ்.லக்கோன்ஸ் பிகிறாடோ அடிகளார் பொறுப்பில் ஆட்காட்டிவெளி றோ.க.த.க.வித்தியாலயத்திலும் மன்னார் மறைக்கோட்டத்தில் மறைக் கல்வி நிலையப் பொறுப்பில் புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலையிலும் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எரிபொருள் கோரி யாழில் ஆசிரியர்கள் போராட்டம்



**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் க.பொ.த சாதாரண தர விடைத்தாள் திருத்தும் பணியில் ஈடுபடும் ஆசிரியர்கள் நேற்றைய தினமும் எரிபொருள் கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரிக்கு முன்னால் நேற்றைய தினம் திங்கட்கிழமை காலை ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணியில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் உரிய எரிபொருள் வழங்கப்பட வேண்டும் அல்லது தமக்கான எரிபொருளை பெறுவதற்கு குறிப்பிட்ட எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றினை ஒதுக்குமாறும் கோரியே இப்போராட்டம் இடம்பெற்றது.

“இதன் போது றோட்டில் நிற்பதா?, “பெற்றோல் அடிப்பதா? விடைத்தாள் திருத்துவதா?” போன்ற கோஷங்களும் எழுப்பப்பட்டன.

அதேவேளை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய கல்லூரியில் எரிபொருள் வேண்டும் என கோரி ஆசிரியர்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். மாவட்ட மக்களுக்கான எரிபொருள் விநியோகம் தொடர்பாக முக்கிய தீர்மானங்கள்





**பருத்தித்துறை விசேட நிருபர்**

யாழ். மாவட்ட மக்களுக்கான எரிபொருள் விநியோகம் தொடர்பாக நேற்று (20) யாழ் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

அதன்படி, யாழ் மாவட்டத்திலுள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தத்தம் பிரதேச செயலகங்களின் பொறுப்பில் செயற்படுவதுடன் நாளாந்த கையிருப்பு தகவல்கள் பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் தினமும் காலை இரவு என இரண்டு தடவைகள் நேரடியாக சேகரிக்கப்படும். இதற்கான அபிவிருத்தி உத்தியோகத்தர்களை பிரதேச செயலாளர் நியமிப்பார்.

பிரதேச செயலகங்களுக்கு ஒத்துழைப்பு வழங்காத எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கான விநியோகத்தை இடைநிறுத்த இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனமும் இணங்கியுள்ளது.

வாகனங்களுக்கான பங்கீட்டு அட்டை முறை ஜூலை 1ம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வருகிறது. அதன்படி மக்கள் தமது வதிவிட பிரதேசத்தில் உள்ள ஒரு எரிபொருள் நிரப்பு நிலையத்தை தெரிவு செய்து அங்கு மாத்திரமே எரிபொருளை பெறும்வகையில் பொறிமுறை உருவாக்கப்படும்.

அரச உத்தியோகத்தர்கள் தமக்கான எரிபொருள் நிலையத்தை தெரிவு செய்து பதிவு செய்யும் வகையில் விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் அரச உத்தியோகத்தர்கள் திணைக்கள தலைவர்களிடம் மாத்திரமே தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

சுகாதார சேவையினருக்கான எரிபொருள் விநியோகத்துக்கு தனியான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு பிரதேச செயலக எல்லைகளுக்குள் அமைந்துள்ள ப.நோ.கூ.ச எரிபொருள் நிரப்பு நிலையங்கள் அத்தியாவசிய சேவைகளுக்காக மாத்திரம் எரிபொருளை வழங்குமென்றும் தீர்மானிக்கப்பட்டது.யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவர் அங்கஜன் இராமநாதனின் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில், யாழ்க்ஷமாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன், மேலதிக அரசாங்க அதிபர் ம. பிரதீபன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) முரளிதரன், பிரதேச செயலாளர்கள், பெற்றோலிய கூட்டுத்தாபன அதிகாரிகள், வர்த்தக சங்க பிரதிநிதிகள், நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# பேசாலையில் இயேசுவின் திரு உடல் திரு இரத்தப் பெருவிழா பேரணி







**தலைமன்னார் விஷேட நிருபர்**
**வாஸ் கூஞ்ஞ**

அகில உலக கத்தோலிக்க திருச்சபையானது ஞாயிற்றுக்கிழமை (19.06.2022) இயேசுவின் திரு உடல் திரு இரத்தப் பெருவிழாவை கொண்டாடியது. இவ் விழாவை முன்னிட்டு மன்னார் மறைமாவட்டத்தில் பேசாலை புனித வெற்றி அன்னை ஆலய பங்கு மக்கள் இவ் விழாவை வெகு சிறப்பாக கொண்டாடியதுடன் அன்று மாலை 5 மணிக்கு புனித வெற்றி அன்னையின் ஆலயத்திலிருந்து திவ்விய நற்கருணை அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் எழுந்தருளப்பட்டு இவ் பேரணியானது புறப்பட்டு நான்கு மணித்தியாலங்கள் அலங்கரிக்கப்பட்ட வீதிகள் ஊடாக பரந்த பேசாலை கிராமத்தினூடாக வலம் வந்த வேளையில் தயார் படுத்தப்பட்டிருந்த மூன்று தரிப்பிடங்களில் மறையுரைகள் நிகழ்த்தப்பட்டு பின் மன்னார் தலைமன்னார் வீதியில் அமைந்துள்ள வெற்றி அன்னை வளாக முன்றலை சென்றடைந்து அங்கு நற்கருணை ஆசீர்வாதம் பேசாலை உதவி பங்கு தந்தை அருட்பணி டிக்சன் அடிகளாரால் இறைமக்களுக்கு வழங்கப்பட்டது.

இவ் நற்கருணை பேரணியும் வழிபாடுகளும் பேசாலை பங்கு தந்தை அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் நடைபெற்றபோது சமூக தொடர்பு அருட்பணி மையம் இயக்குனர் அருட்பணி எம்.செல்வநாதன் பீரிஸ் வாழவோதய இயக்குனர் அன்ரன் அடிகளார் கீழியன்குடியிருப்பு பங்கு தந்தை அருட்பணி சீமான் கிராடா நிறுவன இயக்குனர் அருட்பணி அ.லொஸ்ரின் அடிகளார் (அ.ம.தி) ஆகியோர் இவ் பேரணியில் கலந்து கொண்டு வழிபாட்டில் மறையுரைகளையும் ஆற்றினர்.

# வழிப்பறி கொள்ளையில் ஈடுபட்ட இரு இளைஞர்கள் பிடிபட்டனர்

**கரவெட்டி தினகரன் நிருபர்**

யாழ்ப்பாணம் பருத்தித்துறை பிரதான வீதியில் அச்சுவேலிப் வல்லைப்பகுதியில் , வழிப்பறி கொள்ளையில் ஈடுபட்ட இரண்டு இளைஞர்கள் பொது மக்களினால் பிடிக்கப்பட்டு நையப் புடைக்கப்பட்டனர். இந்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இறைச்சி வியாபாரி ஒருவரின் 3 லட்சம் ரூபா பணத்தை கொள்ளையிட்ட நபர்களே இவ்வாறு நையப் புடைக்கபட்டு பின்னர் அச்சுவேலி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

புத்தூர் பகுதியில் வைத்து வியாபாரம் செய்யும் வியாபாரி ஒருவர், வல்லை பகுதியூடாக வீட்டுக்கு சென்றுள்ளார். இதன் போது மோட்டார் சைக்கிளில் வந்த 2 இளைஞர்கள் கத்தி முனையில் வியாபாரியை அச்சுறுத்தி அவரிடமிருந்த 3 லட்சம் ரூபா பணத்தினை கொள்ளை அடித்துள்ளனர்.

சாமர்த்தியமாக செயல்பட்ட இறைச்சி வியாபாரி ஒரு இளைஞனை துரத்திப் பிடித்து நையப் புடைத்தனர்.

தப்பிச்சென்ற இன்னொரு இளைஞன் நாவல் காட்டு பகுதியில் உள்ள கோயில் கேணியில் கால் கழுவிக் கொண்டிருந்த போது கையும் மெய்யுமாக அப்போது இளைஞர்களினால் பிடிக்கப்பட்டார். இதன்போது குறித்த இளைஞனின் மர்ம உறுப்புகளில் இருந்து கொள்ளையடிக்கப்பட்ட பணம் கைப்பற்றப்பட்டது.

இவ்வாறு வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்ட இளைஞர்கள் இருவரும் யாழ்ப்பாணம் புறநகர் பகுதியை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டது. வீதியில் வைத்து இளைஞர்கள் முறையாக கவனிக்கப்பட்ட பின்னர் அச்சுவேலி பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் இளைஞர்கள் இருவரையும் கைது செய்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.

## பொருளாதார நெருக்கடியை... (03 ஆம் பக்கம் பார்க்க)

குறிப்பிட்டார்.

இந்தியப் பெருங்கடலில் பாது காப்புக்காக ஆஸ்திரேலியா தயார் நிலையில் உள்ளது. இந்து சமுத்திரத்தை பாதுகாப்பு வலயமாக பேணுவதற்கு தமது அரசாங்கம் முழுமையான ஆதரவை வழங்கும் என ஜனாதிபதி ராஜபக்ஷ தெரிவித்தார்.

சுங்க நிர்வாகத்தில் அனுபவத்தை வழங்குவதன் மூலம் அரசாங்கத்தின் வருவாயை அதிகரிக்கவும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தித் திட்டத்தை வெற்றியடையச் செய்யவும் உதவும் என்று அமைச்சர் கூறினார்.

மீனவர்கள் கண்காணிப்பு, தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வியை மேம்படுத்துவதற்கும், சர்வதேச மாணவர்கள் உயர் கல்வியைத் தொடர இலங்கையை ஒரு மையமாக மாற்றுவதற்கும் தமது அரசாங்கம் தயாராக இருப்பதாக அமைச்சர் கூறினார்.

## தேர்தல் நடத்துவதே... (03 ஆம் பக்கம் பார்க்க)

இவ்வாறான வேலைத்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியூடாக தேர்தலை நடத்த முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதைய நெருக்கடிக்கு இது ஒன்று தான் தீர்வாக அமையும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (பா)

## இந்தியா வழங்கும்... (03 ஆம் பக்கம் பார்க்க)

உர விநியோகத் திட்டத்தின் வெற்றிக்காக ஒவ்வொரு அதிகாரியும் ஒவ்வொரு நிறுவனமும் உழைக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

முறைகேடுகள் நடக்காமல் பார்த்துக்கொள்வது அதிகாரிகளின் பொறுப்பு என்றும் பொறுப்பு வாய்ந்த அதிகாரியினால் ஏதேனும் தவறுகள் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக அந்தஸ்து பாராமல் சட்டம் அமுல்படுத்தப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## எரிபொருள் நிரப்பு... (03 ஆம் பக்கம் பார்க்க)

வரிசையில் நிறுத்தி எரிபொருள் பெறுவதாகவும் அறியவருகிறது.

பணம்பெற்றுக்கொண்டு வேறு நபர்களின் வாகனங்களை வரிசையில் நிறுத்தி வரும் இவர்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களை தமக்குத் தேவையானவாறு நடத்த முற்படுவதாகவும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

அத்தியாவசிய சேவை அடையாள அட்டையை துஷ்பிரயோகம் செய்து எரிபொருளைப் பெறுவோர் தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் செயற்படும் பாதாள உலக மற்றும் கும்பல்களுக்கு எதிராக உடனடியாக சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும் என மக்கள் அரசாங்கத்திடம் சுட்டிக்காட்டுகின்றனர்.

## வடக்கு, கிழக்கில் வழமை போல...

எண்ணிக்கையான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளை செயற்படுத்துவதற்கு கல்வி அமைச்சு மாகாண கல்வி அதிகாரிகளுக்கு அனுமதி வழங்கியிருந்தது. பாடசாலைகளுக்கு சமூகளிக்க முடியாத மாணவர்களுக்காக ஒன்லைன் ஊடாக கற்பித்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் கல்வி அமைச்சு ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

அதேவேளை கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள் திருத்த பணிகள் இடம்பெற்று வரும் நிலையில் எரிபொருள் நெருக்கடி காரணமாக முறையாக அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் உள்ளதாக சம்பந்தப்பட்ட பணியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

தமக்கான எரிபொருளை பெற்றுத் தருமாறு சில பகுதிகளில் அத்தகைய ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டங்களையும் மேற்கொண்டுள்ளனர்.

## பெண்ணை காப்பாற்றிய பொலிஸ்...

தற்கொலை செய்துக் கொள்வதற்காக ஆற்றில் குதித்துள்ளார்.

அப்போது, வீதியில் நடந்து சென்று கொண்டிருந்த சமல்க இசுரங்க என்ற இளைஞர் இந்த சம்பவத்தை அவதானித்து அந்த பெண்ணை காப்பாற்ற ஆற்றில் குதித்துள்ளார்.

இதேநேரம் போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரியான வின்ஸன் ராஜபக்ஷ என்பவரும் ஆற்றில் குதித்துள்ளார். இருவரும் இணைந்து அந்த பெண்ணின் உயிரை காப்பாற்றி கரைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

சமல்க இசுரங்க வீட்டிற்குச் சென்று கொண்டிருந்த போது, ஆற்றுக்கு அருகில் மக்கள் கூட்டம் அலைமோதுவதைக் கண்டு, இது குறித்து வி சா ரித்துக் கொண்டிருந்த போதே பெ ண் ஒருவர் நீரில் மூழ்குவதனை கண்டு அவர் ஆற்றில் குதித்துள்ளார்.

மஹியங்கனையில் தொலைபேசி அட்டை விற்பனையாளராக கடமையாற்றும் 58 வயதான கல்யாணி என்ற பெண்ணே நீரில் குதித்துள்ளார். இதனை அவதானித்த பொலிஸ் அதிகாரியும் அந்த பெண்ணை காப்பாற்றுவதற்காக குதித்துள்ளார்.

இருவரும் தங்கள் உயிரை பணயம் வைத்து அந்த பெண்ணை காப்பாற்றி கரைக்கு கொண்டு வந்துள்ளனர்.

அங்கிருந்த மக்கள் இருவரையும் பாராட்டியுள்ளனர்.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் அந்த பெண்ணின் கணவர் உயிரிழந்ததால் வாழ வழியில்லாமல் தற்கொலைக்கு முயற்சித்ததாக அந்த பெண் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி செயலக வாசலை...

செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் நேற்று மாலை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு (19) நள்ளிரவு ஜனாதிபதி செயலக வாயில்களுக்கு முன்பாக சுமார் ஆயிரம் ஆர்ப்பாட்டக்காரர்கள் கலந்துகொண்டு ஆர்ப்பாட்டம் நடத்தியதோடு நுழைவாயில்களை மறித்து கூடாரங்கள் அமைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த நிலையில் நேற்று காலை முதல் ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் பெருந்தொகையான பொலிஸாரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டனர். இதன் போது ஜனாதிபதி செயலக நுழைவாயிலுக்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த கூடாரத்தையும் பொலிஸார் அகற்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதனால் அப்பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது.

அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் கைது செய்யப்பட்டு பஸ் வண்டியில் ஏற்றப்பட்டனர். கைதானவர்களில் தேரர் ஒருவர், பெண்கள் 4 பேர் மற்றும் 16 ஆண்கள் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த கைதை அடுத்து கொழும்பு ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் பதற்றமான சூழல் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும், ஜனாதிபதி செயலகத்தின் பாதுகாப்பை பலப்படுத்துவதற்காக படையினர் ஈடுபடுத்தப்பட்டனர்.

இதேவேளை, இரண்டாம் கட்ட போராட்டம் நேற்று (20) ஆரம்பிக்கப்பட்டதாக போராட்டக்காரர்கள் தெரிவிக்கின்றனர். நேற்று இப்பகுதியில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்ட நிலையில் கொழும்பு லோட்டஸ் வீதி சுற்றுவட்டத்திற்கு அருகில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

ஜனாதிபதி செயலகத்திற்கான நுழைவாயில்கள் யாவும் மூடப்பட்டதால் செயலக ஊழியர்களுக்கு கடமைக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டதாக அறிய வருகிறது. சர்வதேச நாணய நிதிய அதிகாரிகளுடனான பேச்சுவார்த்தையில் பங்கேற்க நிதி அமைச்சின் செயலாளருக்கு முடியாத நிலை ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (பா)

# வெறிச்சோடி காணப்படும் சிகிரியா சுற்றுலா தலம்



நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைக்கு மத்தியில் சிகிரியா மற்றும் அதனை அண்மித்த சுற்றுலாத்தலங்கள், உல்லாசப் பயணிகள் இன்றி வெறிச்சோடி காணப்படுகிறது.

நாட்டினுள் நிலவும் எரிபொருள் பற்றாக்குறை, மின்வெட்டு, எரிவாயு தட்டுப்பாடு மற்றும் உணவுப்பொருட்களுக்கான நெருக்கடி போன்ற பிரச்சினைகளால் சுற்றுலாப் பயணிகளின் வருகை சமீபத்திய நாட்களில் வீழ்ச்சியடைந்துள்ளது.

இதன் காரணமாகச் சுற்றுலாப் பயணிகளை நம்பியிருந்த பல உணவகங்கள் வெறிச்சோடி காணப்படுவதுடன், அதன் உரிமையாளர்கள் வருமானமின்றி பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

## வாக்காளர் இடாப்பில்... (03 ஆம் பக்கம் பார்க்க)

கேட்டுக்கொள்கிறது. வாக்காளர் இடாப்பில் பெயர் இல்லை என்றால், 0112860031 என்ற எண்ணுக்கு எதிர்வரும் 12ம் திகதிக்கு முன்னதாக தகவல் தெரிவிக்குமாறும் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

## 21ஆவது திருத்தத்துக்கு...

உறுப்பினர் பதவியை வகிக்கவோ அல்லது எதிர்காலத் தேர்தலில் போட்டியிடவோ முடியாது என்ற சரத்து திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. 21 ஆவது திருத்தம் அண்மையில் நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அது குறித்து கட்சித்தலைவர்களுடன் ஆராயப்பட்டதோடு அவர்கள் முன்வைத்த திருத்தங்களுடன் புதிய திருத்த நகல் மீண்டும் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் அதற்கு நேற்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## உணவு மற்றும் சுகாதார...

வழிவகுத்துள்ளது.

இலங்கையில் உள்ள, 3 மில்லியன் மக்களின் அன்றாட ஊட்டச்சத்து தேவைகளை பூர்த்தி செய்ய அவசர உணவு உதவிக்காக உலக உணவு திட்டத்திற்கு, அவுஸ்திரேலியா உடனடியாக 22 மில்லியன் டொலர்களை வழங்குவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியா 2022, 23 ஆம் ஆண்டில் இலங்கைக்கு 23 மில்லியன் டொலர்களை அபிவிருத்தி உதவியாக வழங்கவுள்ளது. இது சுகாதார சேவைகள் மற்றும் பொருளாதார மீட்சிக்கு ஆதரவளிக்கும் என்றும் மேலும் தெரிவித்துள்ளது.

இந்த நன்கொடைகள் இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் நிறுவனங்களுக்கு அண்மையில் வழங்கப்பட்ட 5 மில்லியன் டொலர்களுக்கு மேலதிகமாக வழங்கப்படுவதாக உயர்ஸ்தானிகரத்தின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மின்கட்டண உயர்வு குறித்து...

தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்துள்ளார். அந்நியச் செலாவணியை ஈட்டும் அனைத்து நிறுவனங்களும் எதிர்காலத்தில் மின் கட்டணத்தை டொலரில் செலுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அவர், அந்நிய செலாவணி பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் இந்த பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பாரிய நஷ்டத்தை தாங்கும் சக்தி மின்சாரசபையிடம் இல்லை எனவும் எதிர்வரும் இரண்டு மூன்று தினங்களில் மின் கட்டணத்தை எவ்வாறு அதிகரிப்பது என்பது குறித்து முடிவெடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். 30 தொடக்கம் 60 யூனிட் வரையிலான மின்சாரத்தைப் பயன்படுத்தும் குறைந்த வருமானம் பெறும் நுகர்வோரின் மின்சாரக் கட்டணங்கள் கணிசமான அளவில் அதிகரிக்காது மானியம் வழங்கவும் ஏனைய நுகர்வோரின் கட்டணங்களை அதிகரிக்கவும் உள்ளது. எதிர்வரும் நாட்களில் காலை 7.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை மின்சாரம் துண்டிக்கப்பட மாட்டாது , நண்பகல் 12.00 மணிக்குப் பின்னர் இரவு 10.30 மணி வரை இரண்டரை மணித்தியாலங்களுக்கு மின்வெட்டு முன்னெடுக்கப்படும் எனவும் ரத்நாயக்க மேலும் தெரிவித்தார்.

## எமக்கு உதவி செய்ய தயாராக...

சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாங்கள் ஜனாதிபதியை சந்தித்த போது அவரிடம் வடக்கு, கிழக்கில் பொருளாதார அபிவிருத்தியை செய்வதற்காக எங்களது புலம் தமிழர்கள் உதவி செய்வார்கள். ஆனால் அதற்கு நீங்கள் எங்களுக்கு அரசியல் தீர்வினை தர வேண்டும் என கூறியிருக்கின்றோம்.

ஆனாலும் இந்த விடயத்தில் அரசாங்கம் மௌனம் காக்கின்றது. எனினும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள அரசாங்கத்தினை காப்பாற்ற நாம் முயற்சிப்பதாக சிலர் சமூக வலைத்தளங்களில் விமர்சித்தனர்.

நாங்கள் தொடர்ச்சியாக ஜனாதிபதியை சந்தித்து பேசுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், காணி விடுவிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை உள்ளிட்ட விடயங்கள் குறித்து பேசி வருகின்றோம். குறிப்பாக பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான போராட்டத்தின் போது நாங்கள் முன்வைத்திருந்த கோரிக்கைகளில் இவையும் உள்ளடங்குகின்றன.

குருந்தூர் மலை விவகாரம் குறித்து ஏன் சாணக்கியன் எதுவும் பேசாமல் மௌனமாக இருக்கின்றார் என்று பலரும் கேட்கின்றார்கள். நாங்கள் குருந்தூர் மலையை சென்று பார்வையிட்டுள்ளோம். இந்த விவகாரம் தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனினும் நீதிமன்றத்தின் உத்தரவினையும் மீறி ஜனாதிபதி தனக்குள்ள அதிகாரத்தினை பயன்படுத்தி இவ்வாறான விடயங்களை செய்து வருகின்றார். கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் கிழக்கு மாகாணத்திலுள்ள பல பகுதிகள் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் எங்கெல்லாம் காணி அபகரிப்பிற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றனவோ அங்கெல்லாம் அவற்றை எதிர்த்திருக்கின்றேன் என்றார்.



இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அவுஸ்திரேலியாவின் உள்விவகார அமைச்சர் கிளேர் ஓ நீல் நேற்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸை சந்தித்த போது

## பாராளுமன்றம்... (03 ஆம் பக்கம் பார்க்க)

சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகளுக்கு நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதுடன், பி.ப 4.50 மணி முதல் பி.ப 5.30 மணி வரை ஆளும் கட்சியினால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான விவாதம் நடைபெறும்.

அத்துடன், அண்மையில் இடம்பெற்ற குழப்பமான சம்பவங்களின் போது படுகொலை செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அதுகோரல தொடர்பான அனுதாபப் பிரேரணையின் இரண்டாவது நாள் விவாதத்துக்காக எதிர்வரும் 24ஆம் திகதி மு.ப 10.00 மணி முதல் பி.ப 5.30 வரையான நேரத்தை ஒதுக்குவதற்கும் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக செயலாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (பா)

## வர்த்தக நிலையத்தை உடைத்து....

இதன் உரிமையாளர் வழங்கிய முறைப்பாட்டின் பேரில், பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்

சந்தேக நபர் கடையின் இரும்புக் கதவுகளை உடைத்து இரத்தினக் கற்கள் பதித்த தங்க நகைகள் உட்பட பல நகைகளைத் திருடிச் சென்றுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. தலைக்கவசம் மற்றும் முகமூடி அணிந்து கடைக்குள் நுழைந்த காட்சிகள் சிசிரிவி கமெராவில் பதிவாகியுள்ளது. அதனை அடிப்படையாக வைத்து சந்தேக நபரை கைது செய்வதற்கான நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## குழந்தை பிரசவித்த தாய்...

முயன்றனர். ஆனால் அதற்கு கூட முடியாமல் போயுள்ளதாகவும் இவ்வாறான பரிதாபத்திற்கு யார் பொறுப்பு என மருத்துவர் ஒருவர் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார். இந்த சம்பவம் பின்தங்கிய கிராமமொன்றில் அன்றி நுகேகொடயில் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

## படகு மூலம் வருவோரை...

நாடு கடத்தப்பட்ட இலங்கைப் பெண்ணொருவர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், மெல்பேர்னில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட அவுஸ்திரேலிய பிரதமர் அன்தனி அல்பனீஸிடம், மேற்படி பெண்ணின் தகவல் குறித்து செய்தியாளர்கள் வினவினர்.

அப்போது, அவர் பதிலளிக்கையில், புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பான அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் கொள்கை தெளிவானது. படகு மூலம் வருபவர்கள் அவுஸ்திரேலியாவில் குடியேற்றப்பட மாட்டார்கள் எனத் தெரிவித்தார்.

தனது அரசாங்கம் மனிதாபிமானத்தில் பலவீனமாக அல்லாமல் எல்லைகளில் பலமானதாக இருக்கும் எனவும் அவர் கூறினார்.

## நிமலை நீக்கும் தீர்மானத்துக்கு...

சிரேஷ்ட உப தலைவர் நிமல் சிறிபால டி சில்வா கட்சியின் அனைத்து பொறுப்புக்களில் இருந்தும் நீக்கப்படுவதாக ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி அறிவித்திருந்தது.

இதனையடுத்து அதற்கு எதிராக நிமல் சிறிபால டி சில்வா கொழும்பு மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார். கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேன, பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர, பொருளாளர் லசந்த அழகியவன்ன உள்ளிட்ட நால்வரை பிரதிவாதிகளாக பெயரிட்டு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

அதன்படி, அவ்வழக்கை கடந்த 7 ஆம் திகதி ஆராய்ந்த கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி பூர்ணிமா பரணகம, மனுதாரரின் கோரிக்கைக்கு ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியில் அவர் வகித்த பொறுப்பில் இருந்து அவரை நீக்கவோ, இடை நிறுத்தவோ தடை விதித்து நேற்று (20) வரை இடைக்கால தடை உத்தரவொன்றினை பிறப்பித்தார். இந்நிலையில், வழக்கு நேற்று மீண்டும் அழைக்கப்பட்ட போது ஏற்கனவே விதிக்கபட்ட தடை உத்தரவு நீடிக்கப்பட்டது. அதன்படி, நிமல் சிறிபால டி சில்வாவை மத்திய செயற்குழுவில் இருந்தும், நிறைவேற்றுக் குழுவிலிருந்தும், மாவட்ட தலைவர் பதவியிலிருந்தும், தொகுதி அமைப்பாளர் பதவியிலிருந்தும் நீக்குவது மற்றும் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் பதவியிலிருந்து நீக்குவதற்கும் அது தொடர்பிலான தீர்மானங்களை எடுப்பதற்கும் விதிக்கப்பட்ட இடைக்கால தடை நீடிக்கப்பட்டது.

## பொருளாதார மீட்சி...

பேச்சுவார்த்தைகளில் சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் மட்டத்திலான பிரதிநிதிகள் பங்கேற்றிருந்ததாகவும் மேற்படி நிதியத்திடம் இருந்து நான்கு பில்லியன் அமெரிக்கன் டொலர்களை பெற்றுக் கொள்ளும் வகையிலேயே பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

சில கட்டங்களாக அதனை பெற்றுக் கொள்ளும் நோக்கிலேயே இந்த பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நேற்று முற்பகல் நாட்டை வந்தடைந்த சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு ஒரு வார காலம் நாட்டில் தங்கி பல்வேறு தரப்பினருடனும் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள உள்ளதாகவும் பிரதமர் அலுவலகம் தெரிவித்தது. சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டினா ஜோர்ஜ்வாவுடன் கடந்தவாரம் தொலைபேசி மூலம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாணய நிதியத்தின் அதிகாரிகள் மட்ட குழு ஒன்றை விரைவாக இலங்கைக்கு அனுப்புமாறு வேண்டுகோள் விடுத்தார்.

அதற்கிணங்க அதிகாரிகள் மட்டக் குழு நேற்று இலங்கைக்கு வருவர் என கடந்த ஒன்பதாம் திகதி அவருக்கு அறிவிக்கப்பட்டது. நேற்று நாட்டை வந்தடைந்தத அந்த பிரதிநிதிகள் குழு மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் நிதியமைச்சின் உயர்மட்ட அதிகாரிகளுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்த உள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஸ)

## 850,000 ஆட்டோ சாரதிகளின்...

மக்கள் பாதிக்கப்படுவார்கள் என அகில இலங்கை முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சுதில் ஜயருக் தெரிவித்தார்.

போதிய எரிபொருள் இன்றி அவர்களால் தொழிலில் தொடர முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

முச்சக்கர வண்டி சாரதிகள் மற்றும் மோட்டார் சைக்கிள் சாரதிகள் வாகன இலக்கத் தகடுகளின் இலக்கங்களின் அடிப்படையில் வாரத்தின் குறிப்பிட்ட நாட்களில் எரிபொருளைப் பெற்றுக்கொள்ளும் முறையை அறிமுகப்படுத்துவது குறித்து ஆலோசித்து வருவதாக எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர நேற்று தெரிவித்தார்.

தற்போது தொழில்துறையில் அங்கம் வகிப்போருடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்னரே இது போன்ற முன்மொழிவுகளை செயற்படுத்த வேண்டும். நடைமுறை திட்டங்களுக்கு அவர்கள் தங்கள் ஆதரவை வழங்குவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

நாளொன்றுக்கு ஐந்து லீற்றர் எரிபொருளை வழங்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ள வேலைத்திட்டம் தொடர்பில் கருத்து தெரிவித்த அவர், கிராம சேவை உத்தியோகத்தர்கள் ஊடாக முச்சக்கர வண்டி சாரதிகளை இனங்கண்டு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அல்லது இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான டிப்போக்கள் ஊடாக அவர்களுக்கு எரிபொருளை வழங்க முடியும் என்றார். அதிகாரிகள் அரச அமைப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு, கடுமையான திட்டத்தை விரைவில் செயற்படுத்த வேண்டும்.

2,000 ரூபாவுக்கான பெற்றோலைப் பெறுவதற்கு இரண்டு அல்லது மூன்று நாட்கள் எரிபொருள் வரிசையில் காத்திருப்பதும் இன்னும் மூன்று நாட்களுக்கு வரிசையில் திரும்புவதும் முச்சக்கர வண்டி தொழிலை கைவிடுவதற்கு மாத்திரமே வழிவகுக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனவே எரிபொருள் தட்டுப்பாட்டைத் தீர்ப்பதற்கும் முச்சக்கரவண்டி சாரதிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் அரசாங்கம் மிகுந்த அக்கறை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பெருந்தோட்ட மக்களுக்கும்...

இந்நிலைமை நாட்டின் அனைத்து துறைகளின் செயற்பாட்டையும் ஸ்தம்பிதம் அடைய செய்திருக்கின்றது.

வழமையான நாட்களிலேயே முறையான விநியோக வழிமுறையில்லாத தோட்ட பகுதிகள் இதனால் பெருமளவு பாதிப்பிற்குள்ளாகி இருக்கின்றது.

எனவே உடனடியாக தோட்ட மக்களுக்கு விசேட பொருள் விநியோக வழிமுறையும் நிவாரண திட்டமும் முன்வைக்கப்பட வேண்டும்.

தோட்டங்களின் வேலை நாட்களும் நாளுக்கு நாள் குறைவடைந்து வருகின்றது.

தோட்டங்களிலிருந்து சென்று நகர்புறங்களில் வேலை செய்தவர்களும் வேலை வாய்ப்புக்களை இழந்துள்ளனர்.

இவ்வாறான சூழலில் தோட்ட மக்களை பாதுகாக்க விசேடமான நிவாரண திட்டமொன்று உடனடியாக முன்னெடுக்கப்பட வேண்டும். இந்தியாவினால் வழங்கப்பட்ட நிவாரணப்பொருட்களும் தோட்ட மக்களுக்கு ஒழுங்கான முறையில் கிடைக்கப்பெறவில்லை.

பொதுவாகவே நிவாரணங்கள், உதவி திட்டங்கள் மேற்கொள்ளும் போது மலையக மக்களுக்கு பாரா பட்சம் காட்டப்படுவது வழமை. அதுவே இந்திய நிவாரண பொருட்களிலும் நடைபெற்றிருக்கின்றது.

தொடர்ந்து வரும் நாட்களில் நிலைமை மிக மோசமடைய போகின்றது. எனவே அனைத்து தரப்பினருடன் கலந்துரையாடி மலையக மக்களுக்கென தனியான நிவாரண திட்டமொன்றை முன்னெடுத்தல் வேண்டும்.

இன்றைய அரசாங்கத்திற்கு எமது மக்களின் வாக்குகளை பெற்றுக்கொடுத்தவர்கள் அரசில் இருந்து வெளியேறிவிட்டோம் என கூறி தம்மை காப்பாற்றிக்கொள்ள முடியாது. இன்றைய அனைத்து நிலைமைகளுக்கும் இவர்கள் பொறுப்பு கூற வேண்டும் எனத் தெரிவித்தார்.

## சூழலை பாதுகாப்பதில் பங்களித்த சிலாபத்தின் துடிப்பான குடிமக்கள்

**மனிதன் உட்பட முழு உயிரினத் தொகுதிக்கும் சூழலுக்கும் இடையே பிரிக்கமுடியாத தொடர்பு உள்ளது. பழங்காலத்திலிருந்தே சூழலுடன் மனிதன் பேணிவந்த ஆழமான தொடர்பு இன்று அழிந்து வருகிறது.**

மனிதன் சூழலின் ஒருகூறு மாத்திரமேயாகும் என்பதுடன் சூழலின் உயிர்வாழ்விற்கு மனிதன் இன்றியமையாத காரணி அல்ல. ஆனால் மனிதர்களின் நிலையான இருப்புக்கு சூழல் சமநிலை அவசியமாகும். இது சூழல் நிலைப்புவாதம் என்று அழைக்கப்படுகிறது. இதை உணர்ந்த பண்டைய மக்கள், மனிதன் இயற்கையால் ஆளப்படுகிறான் என்பதை எண்ணி வாழ்ந்தனர். ஆனால் சமூக பரிணாம வளர்ச்சியுடன், சூழல் மனித விருப்பத்திற்கு ஏற்ப பயன்படுத்தக்கூடிய ஒரு சொத்தாக மாறியது. இதன் விளைவாக, உலகளாவிய ரீதியில் சூழல் மாசடைவு அதிகரித்து வருகிறது.

உயிர்க் கோளத்தை செயற்கையாக மாற்றுவதன் மூலம் அல்லது அதன்மீது ஆதிக்கம் செலுத்துவதன் மூலம் சூழல் தொடர்பின் வீழ்ச்சி, சூழல் மாசடைவு என வரையறுக்கப்படுகிறது. இன்றைய காலகட்டத்தில் பல்வேறு மனித நடவடிக்கைகள் காரணமாக, எதிர்கால சந்ததியினர் பாதுகாப்பான சூழல் தொகுதியில் வாழ்வதற்கான வாய்ப்புகள் குறைவடைந்துள்ளன. எனவே, ஒட்டுமொத்த சூழல் தொகுதியைப் பாதுகாக்கவும், பராமரிக்கவும், பேணுவதற்குமான பொறுப்பு முழு மனித இனத்திற்கும் உள்ளது.

அந்த வகையில், இலங்கையில் சூழல் மாற்றம் தொடர்பில் அதனை தணிப்பவர்களாக, சூழல் ஆர்வலர்களாக இளைஞர்களை ஈடுபடுத்துவதில் தனது கவனத்தை செலுத்தியுள்ள British Council, இதற்காக Caritas Sri Lanka National Institute உடன் கைகோர்த்துள்ளது. இந்த உன்னதப் பணியின் பலனை அடையும் வாய்ப்பை Caritas Sri Lanka National Institute நிறுவனமானது Caritas Chilaw Janasaviya SEDEC இற்கு வழங்கியுள்ளது.



இலங்கையின் வடமேற்குப் பகுதியில் செழுமையான வரலாற்றைக்கொண்ட புத்தளம் மாவட்டம், ஒரு புறம் அழகிய கடற்கரையையும், மாவட்டம் முழுவதும் நிறைந்த நீர்ப்பாசன தொகுதியையும், அதன் மூலம் போசணை அடையும் பலதரப்பட்ட விவசாய தொகுதியையும் கொண்டுள்ளது. மாவட்டத்தின் காலநிலைச் சமநிலையை பேணுவதற்கு ஆனைவிழுந்தான் இயற்கை பறவைகள் சரணாலயம் மற்றும் வில்பத்து பாதுகாக்கப்பட்ட வனப்பிரதேசம் ஆகியன முக்கியமானவையாகும். அது மாத்திரமன்றி, மாவட்டம் முழுவதும் பரந்து காணப்படும் பல சிறிய வனப்பகுதிகளையும் அது கொண்டுள்ளது.

மூன்று இனங்களின் நான்கு மதங்களைச் சேர்ந்த வெவ்வேறு சமூகங்களினால் கலந்துள்ள சமூக அமைப்பை இங்கு காணமுடியும். இதன் காரணமாக இலங்கையில் மிகவும் பிரபலமான பல சமய மற்றும் கலாசார மையங்களை புத்தளம் மாவட்டத்தில் காணலாம். மாவட்டத்தின் கேந்திர நிலையமாக கருதக்கூடிய சிலாபம் நகரமானது, முன்னாளில் "முதுபுரய" என அழைக்கப்பட்டது. இவ்வாறான விழுமியங்கள் நிறைந்த புத்தளம் மாவட்டம் மனித செயற்பாடுகள் காரணமாக வீழ்ச்சியடைந்து வருவதைக்காண முடிந்துள்ளது. அதற்குத் தீர்வு காணும்வகையில் இளைஞர்களை வலுவூட்டுவதற்காக, British Council மற்றும் Caritas Sri Lanka - SEDEC நிறுவனமும் இணைந்துள்ளது.

## PEPSI® அதன் SWAG தத்துவத்தை மீண்டும் வலியுறுத்தும் புதிய பிரசாரத்துடன் கோடைகாலத்தை வரவேற்கிறது

**- புதிய பிரசாரம் இலங்கை இளைஞர்களின் உறுதி மற்றும் தன்னம்பிக்கையை கொண்டாடுகிறது...**

SWAG - ஒரு வார்த்தை. நான்கு எழுத்துகள். ஒரு மில்லியன் விசுவாசிகள். இக்கோடை காலத்தில், Pepsi® அதன் SWAG தத்துவத்தை மீண்டும் வலியுறுத்தும் வகையிலான புதிய பிரசாரத்தின் மூலம் இலங்கையிலுள்ள இளைஞர்களை ஊக்கப்படுத்த தயாராகி உள்ளது. இதற்கு முன் இளைஞர்கள் அதிக நம்பிக்கையுடன் இருந்ததில்லை. அவர்கள் எப்படி எதை செய்கிறார்களோ, அதை அப்படியே செய்கிறார்கள். ஆயினும் தற்போது, அவர்கள் SWAG மூலம் எல்லாவற்றையும் செய்கிறார்கள். புதிய தலைமுறையின் இந்த உணர்வையே இக்கோடை காலத்தில் '#Pepsi யோடு SWAG'எனும் பிரசாரத்தை Pepsi® கொண்டாடுகிறது.

இந்த வீடியோ விளம்பரமானது, கல்லூரி ஒன்றின் சிற்றுண்டிச்சாலையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அங்கு ஒரு மாணவர் சிற்றுண்டிச்சாலையில் தனது உணவையும் குளிர்ந்த பெப்சி போத்தலையும் கொள்வனவு செய்கிறார். இதன்போது குறித்த மாணவன் வழங்கும் பணத்தின் மீதத்திற்கு பதிலாக, சிற்றுண்டிச்சாலை முகாமையாளர் டொபி ஒன்றை வழங்குகிறார். மறுபடியுமா!? என மாணவர் கேட்க, முகாமையாளரும் தான் வெற்றி பெற்றது போல் நமட்டு புன்னகையை வெளிப்படுத்துகிறார். தனது பெப்சி பாட்டிலில் இருந்து SWAG யை எடுத்துக் கொண்ட மாணவன் புன்னகை செய்கிறார். தனக்கு வழங்க வேண்டிய மீதியை ஏற்பாடு செய்யும் வரை காத்திருப்பதாக முகாமையாளருக்கு மாணவர் சொல்கிறார். இதன் பின்னர் தனது நண்பர்கள் அனைவரையும் நம்பிக்கையுடன் பார்க்கும் மாணவன், முகாமையாளரிடமிருந்து மீதியை கேட்க




சொல்கிறார். சிறிது நேரத்தில், ஒவ்வொரு மாணவரும் முகாமையாளரின் முன்பாக தங்களுக்கு வழங்கப்பட்ட டொபிகளின் குவியலுடன் மீதியை வழங்குமாறு வரிசையில் நிற்கிறார்கள். தன்னம்பிக்கை மற்றும் புதிய சிந்தனை மூலம் எதையெல்லாம் சாதிக்க முடியும் என்பதை வலியுறுத்தும் வகையில், மாணவர் முகாமையாளரைப் பார்க்கிறார். மாணவர் தனது குளிர்ந்த பெப்சியை அருந்தியவாறு முகாமையாளரை ஞுறுயுபு நிலைக்கு மாற்றுகிறார்.

'#Pepsi NahL SWAG' என்பது இந்த தருணத்தை வாழ்வது, புதியதை அடைவது, சுவாரஸ்யமான வாய்ப்புகளைப் பெறுதல், அனைத்தையும் ஞுறுயுபு உடன் செய்வதுமாகும். இன்றைய தலைமுறையினரின் தன்னம்பிக்கையை உண்மையாக பிரதிபலிக்கும் முற்போக்கான அணுகுமுறையை ஏற்படுத்தும் இப்பிரசாரம் இலங்கையின் இளைஞர்களால் விரும்பப்படும் என்று நாம் நம்புகிறோம்." என்றார்.

புதிய Pepsi® TVC (கணொளி விளம்பரம்) ஆனது, தொலைக்காட்சி, டிஜிட்டல் ஊடகங்கள், வெளி நிகழ்வுகள், சமூக ஊடகங்கள் மூலம் வலுவான வகையில் 360 பாகை முழுமையான பிரசாரமாக முன்னெடுக்கப்படவுள்ளது. Pepsi® இலங்கையில் உள்ள அனைத்து நவீன மற்றும் பாரம்பரிய சில்லறை விற்பனை நிலையங்கள் மற்றும் முன்னணி இணைய வர்த்தகத் தளங்களில் தனியாகவோ, ஒன்றிணைந்த பொதிகளாகவோ கிடைக்கிறது.

### பெயர் மாற்றம்

வம்மியடியூற்று 40, கிராமம், திக்கோடை பெரியபோரதீவு, குமார் கீர்த்திகா (NIC NO 200270801245) நான் 29.08.2021 எனது சுய விருப்பத்தின் பெயரில் இஸ்லாம் மார்க்கத்தை தழுவி எனது பெயரை ஆயிஷா என மாற்றிக் கொண்டேன் என்பதனை இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசுக்கு தெரிவிக்கின்றேன்.

### பெயர் மாற்றம்

ஏறாவூர் மீராகேணியைச் சேர்ந்த நூர்ஜஹார் முஹம்மது அரபாத் (தே.அ.அ. இல:200131504231)ஆகிய நான், எனது பெயரை முஹம்மது அப்றான் என மாற்றிக் கொண்டுள்ளேன். எதிர்காலத்தில் அனைத்து ஆவணங்களிலும் இவ்வாறே ஒப்பமிடுவேன் என இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு மக்களுக்கு அறிவிக்கிறேன்

நூ.மு.அப்றான்

Repeat Your ad For Better Offers

## SLIM நிறுவனமானது இலங்கையர்களின் தாங்குதிறனை பாராட்டுவதோடு, அதற்கு ஆதரவு அளிக்கும் வகையில் கட்டணங்களை அதிகரிக்காது என அறிவிக்கிறது

Sri Lanka Institute of Marketing

**இலங்கையில் சந்தைப்படுத்தல் தொழில்துறையாளர்களை மேம்படுத்த அதிகாரமளிக்கப்பட்டுள்ள நிறுவனமான, இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனம் (SLIM), நாடு கடந்து வரும் தற்போதைய சிரமங்களை தைரியமாக எதிர்கொள்ளும் அனைத்து இலங்கையர்களுடனும் அனுதாபம் கொள்கிறது.**

இலங்கையின் வரலாற்றில் இது உண்மையில் ஒரு சவாலான கால கட்டமாக இருந்த போதிலும், நாட்டு மக்கள் அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறையை எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளதோடு, அவற்றை சில வேளைகளில் கைவிடும் நிலையை எதிர்கொண்டுள்ளனர், அவர்கள் தனித்தனியாகவோ, குடும்பங்களாக கூட்டாகவோ இத்தகைய தியாகங்களைச் செய்த போதிலும், இந்த மாற்றத்தின் காலப்பகுதியில் பலர் நெகிழ்வான போக்கில் ஈடுபடுவதையும் ளுடுஐஆ அவதானிக்கிறது.

தற்போது உள்ளூர் சந்தையில் விநியோகிக்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளை அதிகரிப்பதற்குப் பதிலாக, பொதுமக்கள் மற்றும் நுகர்வோரின் நலனுக்காக இயன்றளவு அவர்களுக்கு உதவும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய காலகட்டம் இதுவென SLIM நம்புகிறது.

இந்த புரிதலுடன், இலங்கை சந்தை முழுவதும் கடுமையான விலை உயர்வுகளுக்கு மத்தியில், வாழ்வில் உள்ள தடைகளை கடப்பதற்கும், நமது தேசத்தின் வளர்ச்சியில் பங்குதாரர் ஆவதற்கும் கல்வியே சிறந்த ஆயுதம் என்ற உறுதியான நம்பிக்கையுடன், SLIM அதன் அனைத்து சேவைகளின் கட்டணங்களையும் குறிப்பாக, பல்வேறு பாட நெறிகளுக்காக வசூலிக்கப்படும் கட்டணங்களையும் மாற்றமின்றி, தற்போது அறவிடப்படுவதைப் போன்றே தொடர்ந்தும் அறவிட, ஏகமனதாக முடிவு செய்துள்ளது. (செலவு அதிகரிப்பு காரணமான விகித அதிகரிப்பு தவிர்க்க முடியாததாகும்)

## காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 33ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்

குறிப்பு இல. கேகா/காணி/சுவீ/ஏ3/01/77

சப்ரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டத்தில், கேகாலை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள காணி கேகாலை பக்கப் பாதைக்காக (கட்டம் 3) சுவீகரிக்கப்படுகின்றது. பின்வரும் காணிக்கு நஷ்டஈடு வழங்குவதற்காக காணி சுவீகரித்தல் சட்டத்தின் (அத்தியாயம் 460) 33ஆம் பிரிவின் கீழ் காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிக்குரிய நஷ்டஈட்டுப் பணத்தை இக்காணியின் உரிமை கோருபவர்கள் பெற்றுக் கொள்வதற்கு கேகாலை மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு இலக்கங்களின் கீழ் பற்று வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து இலங்கை ஜனநாயக குடியரசின் 08.06.2022ஆம் திகதிய 2283/32ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.


| தொடர் இல | ஆ.வ.இல. | துண்டு இல | நஷ்டஈடு (ரூ) | வழக்கு இல | மாவட்ட நீதிமன்றம் |
|---|---|---|---|---|---|
| 01 | கே.3448 | 23 | 238,825.00 | LA/183/2022 | கேகாலை |

**கே.ஜீ.எஸ். நிஷாந்த,**
**பிரதேச செயலாளர்,**
**கேகாலை.**

**20.06.2022**

BE BETTER INFORMED!

Dinamina
Daily News
Thinakaran




News you can trust now free on your mobile phone.

VISIT

apps.lakehouse.lk

DOWNLOAD TODAY!

AVAILABLE AT

LAKE HOUSE

## Project Blue Next Generation, இலங்கையின் கடல் சூழலைப் பாதுகாக்கும் முன்னோக்கிய பயணம்

THE PROJECT BLUE

Project Blue Next Generation (அடுத்ததலை முறை நீலத்திட்டம்) என்பது, தொண்டு நிறுவனங்கள், சூழலியல் குழுக்கள், ஆராய்ச்சியாளர்கள், ஆர்வலர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பல்வேறு சமூகங்களை ஒன்றிணைத்து, உலகத்தில் சமுத்திரங்கள் வகிக்கின்ற முக்கிய பங்கு தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக்கொண்ட, இளைஞர்கள் தலைமையிலான ஒரு முயற்சித்திட்டமாகும்.

இத்திட்டம் பிரிட்டிஷ் கவுன்சிலின் COP26 Challenge குரனெ மற்றும் 'The Climate Connection' பிரசாரத்தின் ஒரு பகுதியாகும். காலநிலை மாற்றத்தின் சவால்களை எதிர்கொள்ள உலகெங்கிலும் உள்ள மக்களை 'Climate Connection' ஒன்றிணைக்கிறது. இது கலை மற்றும் கலாசாரம், கல்வி மற்றும் ஆங்கில மொழி, யோசனைகள், புத்தாக்கம் மற்றும் உண்மையான மாற்றம் பற்றியதாகும்.

தற்போது மனித இனம் எதிர்கொள்ளும் மிக அழுத்தமான பிரச்சினையாக காலநிலை மாற்றம் எனும் விடயம் அமைந்துள்ளதை, பல்வேறு அறிஞர்கள் மற்றும் தலைவர்களால் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதகமான விளைவுகளைத் தவிர்க்க, சூழலைப் பாதுகாப்பது அவசியமாகும். பல சூழல் தொகுதிகளும் வனவிலங்குகளும் சார்ந்திருக்கும் ஒரு விடயம் என்பதால், கடல் அல்லது கடற்கரைச் சூழலானது ஒரு முக்கிய அங்கமாக காணப்படுகின்றது.

Project Blue Next Generations திட்டமானது, கடல் சூழலின் பாதுகாப்பு, கடற்கரை பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றம் போன்ற விடயங்களில் அங்கம் வகிப்பதற்காக, இளம் தலைமுறையினரை விழிப்புணர்வூட்டுவது மற்றும் ஊக்குவிப்பது ஆகிய இரண்டையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இத்திட்டமானது, இரண்டு முக்கிய நிகழ்வுகளைக் கொண்டிருந்ததுடன், அவை ஒன்லைன் வழியாக நடாத்தப்பட்டன. "சமுத்திரப் பாதுகாப்பை வீட்டிலிருந்து ஆரம்பிப்போம்" எனும் முதலாவது பயிற்சிப் பட்டறைத் தொடரில், நாடு முழுவதிலுமிருந்து பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மாணவர்கள் கலந்துகொண்டனர். இந்த நிகழ்வை, கொழும்பு பல்கலைக்கழகத்தின் விலங்கியல் மற்றும் சூழல் விஞ்ஞான துறையுடன் இணைந்து Project Blue Next Generation ஏற்பாடு செய்திருந்தது. இது 3 நாட்களைக் கொண்ட முற்றுமுழுதான விழிப்புணர்வு அமர்வுகளாக இடம் பெற்றதுடன், பங்கேற்பாளர்கள் வீட்டில் பின்பற்றுதற்கான 14 நாட்களுக்கான செயற்பாட்டுத் திட்டமொன்றையும் இது கொண்டிருந்தது.

இரண்டாவதாக, 'Ocean Sustainability' (சமுத்திர நிலைபேறுத் தன்மை) என்ற தலைப்பிலான இணையவழி பயிற்சிப்பட்டறைத் தொடர், இது கடல் வாழ்வியல் மற்றும் அவற்றின் தாக்கங்கள் தொடர்பான பல முக்கிய தலைப்புகளில் விழிப்புணர்வை ஏற்படுத்த வடிவமைக்கப்பட்டிருந்தது. இந்த அமர்வுகளில் கலந்துகொண்ட பங்கேற்பாளர்கள் பல்வேறு பின்னணியில் இருந்து வந்தவர்களாக இருந்ததுடன், சமூகம் சார்ந்த திட்டங்களுக்கு தன்னார்வலர்களாக செயற்பட்டதோடு, கடல் பாதுகாப்பு தொடர்பில் மிகுந்த ஆர்வத்துடனும் இருந்தனர். ருஹுணு பல் கலைக்கழகத்தின் சமுத்திரவியல் மற்றும் கடல் புவியியல் துறையைச் சேர்ந்த விரிவுரையாளர்கள் குழுவினால் இந்த இணையவழி பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்பட்டன.

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## இலங்கை போக்குவரத்துச் சபை (SLTB)

### அசோக்லேலண்ட் புதிய சிலின்டர் ஹெட்களை வழங்கி விநியோகிப்பதற்கான விலைமனு

**(SLTB/TS/GEN/02-II/2022)**

1. தேசிய போட்டி கேள்விகோரல் முறைமையின் கீழ் 2022.07.12 மு.ப. 10.30 வரை தரப்பட்டுள்ள மாதிரிகளுக்கு அமைவாக 60 நாள், கடன் அடிப்படையில் அசோக்லேலண்ட் புதிய சிலின்டர் ஹெட்களை வழங்கி விநியோகிப்பதற்காக தகைமையான வழங்குநர்களிடமிருந்து, பொறியிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை போக்குவரத்து சபையின் சார்பாக இ.போ.ச பெறுகைக் குழுவின் தலைவர் பெற்றுக் கொள்வார். கொழும்பு - 05, கிருல வீதி, 200, இலங்கை போக்குவரத்துச் சபை, பெறுகைப் பிரிவு, செயலாளர் இடம் காணப்படும் படிவங்களில் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அலுவலக நேரங்களில் வேலை நாட்களில் ஓர் மீளளிக்கப்படாத விண்ணப்பப்படிவக் கட்டணம் ரூ. 35,000/- செலுத்துவதன் பேரில் 2022.06.21 முதல் 2022.07.11 வரை விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும்.

| விபரம் | விலைமனுப் பிணை (ரூபா) |
|---|---|
| 60 நாள் கடன் அடிப்படையில் அசோக்லேலன்ட் புதிய சிலின்டர் ஹெட்களை வழங்கி விநியோகித்தல் | 2,000,000.00 |

2. பஸ்களின் உதிரிப்பாக மொத்த பெயர் குறிப்பிடப்படும் உள்ளூர் பிரதிநிதிகள்/ உற்பத்தியாளர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் முகவர்கள் மாத்திரம் விலைமனுக்கோர தகைமை பெறுவர்.
3. உற்பத்தியாளர்களின் அதிகாரமில்லாத விலைமனுக்கள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.
4. (அ) விலைமனு சமர்ப்பிக்கப்படுவதற்கு முன் 1987ஆம் ஆண்டின் ஒப்பந்த இல 3 இன் விதிகளின் கீழ் கொழும்பு - 10, D.R விஜேவர்தன மாவத்த, 'சமாகம் மெதுர' பொது ஒப்பந்தங்கள் பதிவாளரின் கீழ் ஓர் விலைமனுதாரரின் சார்பாக அல்லது முகவராக செயற்படும் எந்த நபர், உதவி முகவர், பிரதிநிதித்துவப்படுத்துபவர் அல்லது பெயர் குறிப்பிடப்படுபவர் சான்றிதழின் மூலம் பிரதியை சமர்ப்பிக்கத் தவறும் விலைமனுதாரரின் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

   (ஆ) 1987ஆம் ஆண்டின் பொது ஒப்பந்த சட்டம் இல-03 விதிகளின் கீழ் பெறுகை வழங்கப்படுவதற்கு முன் மற்றும் விலைமனு சமர்ப்பித்த பின்னர் உடனடியாக தாமாகவே விலைமனுதாரர்களும் பதிவு செய்யப்படுவர். சம்பந்தப்பட்ட பெறுகைக் குழுவிற்கு பொது ஒப்பந்த சட்டத்தின் விதிகளின் கீழ் வழங்கப்படும் பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்காத எந்த விலைமனுதாரருக்கும் பெறுகை வழங்கப்பட மாட்டாது.
5. விலைமனுக்கள் 2022.10.13ம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும் எனினும் ஒப்பந்த உடன்படிக்கை கையொப்பமிட்ட தினத்திலிருந்து ஆறு (06) மாத காலத்திற்கு விலைமனுக்கள் உறுதிப்படுத்தப்படும்.
6. இபோச வினால் முதல் எழுத்துமூல வேண்டுதலின் பேரில், மாற்றமுடியாத மற்றும் நிபந்தனையற்ற கோரப்படும் போது வழங்கக்கூடிய மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து வழங்கப்படும் மேலே குறிப்பிடும் பெறுமதிக்கு 2022.11.12 வரை செல்லுபடியாகும் ஒரு விலைமனுப்பிணையை விலைமனுவுடன் இணைத்தல் வேண்டும். மேலே குறிப்பிடுமாறு ஓர் செல்லுபடியாகும் விலைமனுப் பிணை இணைக்கப்படாத எந்த விலைமனுவும் நிராகரிக்கப்படும்.
7. விலைமனு ஆவணத்தின் எல்லாப் பக்கங்களும் விலைமனுதாரரால் கையொப்பமிடப்படுவதுடன் அவரது முத்திரை இடப்படல் வேண்டும்.
8. 2022.07.12 மு.ப. 10.30 அல்லது அதற்கு முன் கொழும்பு-05 கிருல வீதி 200, இலங்கை போக்குவரத்து சபை பெறுகை பிரிவில் இந்த நோக்கத்திற்காக குறிப்பிடப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் விலைமனுக்கள் வைப்பிலிடப்படல் வேண்டும். அல்லது நகல்களுடன் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் அசோக்லேலண்ட் புதிய சிலின்டர் ஹெட்களை வழங்கி விநியோகித்தலுக்கான விலைமனு' என்று குறிப்பிடப்பட்டு, பொறியிடப்பட்ட உறைகளில் இடப்படல் வேண்டும்.
9. விலைமனுக்கள் கொழும்பு-05, கிருல வீதி, 200, இலங்கைப் போக்குவரத்து சபை, பெறுகைப் பிரிவில் மூடப்பட்ட பின்பு உடனடியாகத் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனு திறக்கப்படும் போது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**இபோச பெறுகைக்குழு,**
**இலங்கை போக்குவரத்துச் சபை,**
**இல-200, கிருல வீதி, கொழும்பு-05**

**விசாரணைகள், செயலாளர், பெறுகைக் குழு - இலங்கை போக்குவரத்து சபை**
**தொ.பே - 011-7706110, 0771056110 தொ.பே/ பெக்ஸ் : 011-2588457**

## கடற்றொழில் அமைச்சு

**வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்**

## பெறுகை அறிவித்தல்

**04 கார்கள்/டபள் கெப்ஸ் (டீசல்/பெட்ரோல்)**
**(1300cc-1800cc இயந்திர கொள்ளளவு - கார்**
**2400cc-3500cc இயந்திர கொள்ளளவு -D/CAB) வாடகைக்கு**

**(CFHC/SD/HIRE/HO/2022-23)**

**கொழும்பு 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கையில் இல-15** இல் காணப்படும் வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் தலைவரினால் **2022.07.04** ஆம் திகதி **மு.ப.10.00** மணி வரை முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்த இலக்கம் | விபரம் | மனு ஆவண தொகை | மனுக் கட்டணம் | மூடப்படும் திகதி |
|---|---|---|---|---|---|
| 01. | CFHC/ SD/HIRE/HO/ 2022-23 | 04 கார்கள்/டபள் கெப்ஸ் (டீசல்/பெட்ரோல்) (1300cc-1800cc இயந்திர கொள்ளளவு - கார் 2400cc-3500cc இயந்திர கொள்ளளவு -D/CAB) களை வாடகைக்கு எடுத்தல் - தயாரிப்பு வருடம் 10 வருடங்களுக்கும் குறைவான தற்போதைய மைலேஜ் 150,000 கி.மீ. க்கு கீழ் | ஒவ்வொரு வாகனத்திற்குமான வைப்பு தொகை ரூ.20,000 | மீளச் செலுத்தப்படும் கட்டணம் ரூ.1,000 | 2022.07.04 மு.ப.10.00 |

இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **2022.06.21** ஆம் திகதியிலிருந்து **2022.07.01** ஆம் திகதி **மு.ப.09.00 தொடக்கம் பி.ப.03.00** வரையான காலப்பகுதியினுள் மேற்கூறப்பட்ட மீளச்செலுத்தப்படாத கட்டணத்துடன் எழுத்து மூல விண்ணப்பத்தை முகாமையாளர் **(பெறுகை), கொழும்பு 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கையில் இல-15 இல் காணப்படும் வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தில்** கையளிப்பதன் மூலமாக ஆங்கில மொழியினாலான விண்ணப்பப்படிவத்தினை பெற்றுக்கொள்ள முடியும். கட்டண முறையானது பணமாக செலுத்தப்பட வேண்டும்.

ஒப்பந்தத்தில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி தயாரிக்கப்பட்டு முத்திரையிடப்பட்ட மனுப் பிரதிகளை **2022.07.04** ஆம் திகதி **மு.ப.10.00** மணி வரையான காலத்திற்குள் கிடைக்குமாறு **முகாமையாளர் (கொள்முதல்), வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம், இல-15, ரொக் ஹவுஸ் ஒழுங்கையில் கொழும்பு 15** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும் அல்லது கொள்முதல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள மனுப்பெட்டியில் இடலாம். **2022.07.04** ஆம் திகதி **மு.ப.10.00** மணிக்கு பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

மனு ஆவணத்தை பிரதியுடன் சமர்ப்பிக்க வேண்டும். மனு ஏற்றுக்கொள்ளல் முடிவுற்ற உடனேயே ஒவ்வொரு மனுக்களாக திறக்கப்படும்.


மனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதி பங்கேற்க முடியும்.

எந்தவொரு விண்ணப்பத்தையும் முழுமையாக அல்லது பகுதியாக ஏற்க அல்லது நிராகரிக்கும் உரிமையினை ஆணைக்குழு கொண்டுள்ளது. மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள **முகாமையாளர் (பெறுகை), தொலைபேசி இலக்கம்** 011-2525063 மற்றும் எமது அதிகாரப்பூர்வ வலைத்தளத்திலிருந்து **(www.cfhc.gov.lk)** பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்**
**வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்**
**இல- 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை,**
**கொழும்பு 15.**

சிறு விளம்பரம்

மோட்டார் வாகனங்கள்




106

**கார்கள்**

**விற்பனைக்கு**

WP CAX-2700 Audi A3, 2017, Car. கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல.310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714 542958. 036976



122

**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்**

**விற்பனைக்கு**

NW BIZ-1487 Yamaha ZN 150, 2020, motor cycle கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல.310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 07 1 1 210810. 036981

WP AAE - 9740 Bajaj, 2012, SP YB - 9063 Bajaj, 2010, Three-wheel. கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல.310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 07 1121081 0. 036979

வேலைவாய்ப்பு

321

**வெற்றிடங்கள்**

**தோட்டத்துறை**

தோட்ட வேலை, தேயிலை கொழுந்து பறித்தல் மற்றும் தோட்ட வேலைகளிற்கு குடும்பமொன்று மற்றும் இரண்டு கங்காணிகள் தேவை. நீர், மின்சாரம் உண்டு. அனுபவத்தின் அடிப்படையில் சம்பளம். அழைக்கவும் 0773436200. 036525

**Repeat Your ad For Better Offers**

NSB National Savings Bank

# விலைமனுக் கோரல்

## வங்கியின் பிணை ஆவணங்களைப் பதிவு செய்துகொள்ளல் மற்றும் ஏனைய சேவைகள்

**NSB/PT/CRE/2022/16**

01. காணிப்பதிவகங்களில், தேசிய சேமிப்பு வங்கியின் பிணை ஆவணங்களைப் பதிவு செய்து கொள்ளல் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளிற்கான சேவை வழங்கல்களிற்காக கொழும்பு 03, காலி வீதி, இல. 255, தேசிய சேமிப்பு வங்கியின் தாபனப் பெறுகைக் குழு (பிரதான) வின் தலைவரினால் முத்திரையிடப்பட்ட விலைமனுக் கோரப்படுகின்றது.
02. கொழும்பு 03, காலி வீதி, இல. 255, தேசிய சேமிப்பு வங்கி, பெறுகைக் குழு (பிரதான) தலைவரிடமிருந்து இதற்கான படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். 2022.06.21 முதல் 2022.07.12 வரை வார வேலை நாட்களில், மு.ப. 8.30 முதல் பி.ப. 3.00 வரை, தேசிய சேமிப்பு வங்கியின் பெறுகைக் குழு (பிரதான) தலைவரிடம் எழுத்துருவ விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து இதற்கான படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
03. இதற்காக மீளளிக்கப்படாத ரூபா 500/- இற்கான கட்டணமொன்று காசாகச் செலுத்துதல் வேண்டும்.
04. 2022.07.14 அன்று மு.ப. 10.00 இற்கு விலைமனுக்கள் மூடப்பட்டு உடனடியாக அவை, தேசிய சேமிப்பு வங்கியின் வழங்கல் பிரிவில் திறக்கப்படும்.
05. இதற்கான மேலதிக விபரங்களை, தேசிய சேமிப்பு வங்கியின் பிரதான முகாமையாளர் (சட்டம்) இடம் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**தாபனப் பெறுகைக்குழு பிரதான,**
**தேசிய சேமிப்பு வங்கி,**
**இலக்கம்: 255, காலி வீதி, கொழும்பு-03.**

## கொழும்பு மாநகர சபை

## மாநகர பொறியியல் திணைக்களம்

### காணிகள் முகாமைத்துவம் மற்றும் சுற்றுச்சூழல் அபிவிருத்திப் பிரிவு

# விஹாரமகாதேவி பூங்காவிற்கான விற்பனையாளர்களைப் பதிவு செய்தல்

விஹாரமகாதேவி பூங்காவில் விற்பனையாளர்களுக்காக பராமரிக்கப்படும் 18 விற்பனைக் கூடங்களுக்கு விற்பனையாளராக பதிவு செய்துகொள்வதற்கு ஆர்வமுள்ள நபர்களிடமிருந்து இத்தால் விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வொன்றிற்காக அழைக்கப்படுவார்கள் என்பதுடன் அவர்களின் தகைமைகள் மற்றும் அனுபவத்தின் பிரகாரம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

விண்ணப்பப் படிவங்களை மீளளிக்கப்படாத படிவக் கட்டணமாக 2,240.00 ரூபாவை (வெட் வரிகள் உட்பட) செலுத்துவதன் பேரில் கொழும்பு-7, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மாநகர பொறியியலாளர் திணைக்களத்தின் செயற்றிட்டப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2022-07-12ஆம் திகதிக்கு முன் "பொறியியல் பணிப்பாளர் (செயற்றிட்டங்கள் பிரிவு), மாநகர பொறியியல் திணைக்களம், கொழும்பு மாநகர சபை, நகர மண்டபம், கொழும்பு-07 எனும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

இலகுவாக அடையாளம் காண்பதற்காக கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "விஹாரமகாதேவி பூங்காவிற்கான விற்பனையாளர்களைப் பதிவு செய்தல்" எனக் குறிப்பிடுதல் வேண்டும். மேலதிக விபரங்களை கொழும்பு மாநகர சபையின் 0112-695475 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பொறியியல் பணிப்பாளர் (காணிகள் முகாமைத்துவம் மற்றும் சுற்றுச்சூழல் அபிவிருத்தி) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**சட்டத்தரணி ரோஷினி திசாநாயக்க,**
**மாநகர ஆணையாளர்,**
**கொழும்பு மாநகர சபை,**
**நகர மண்டபம்,**
**கொழும்பு-07.**

Photo Classified



Toyota Vitz 2008 / 2011, white, 1300 CC, 8 Air Bags, showroom condition, service records available. Rs. 54/25, Maharagama. 075 122

SUNDAY OBSERVER ADZ — For 15 Words Rs. 600/- * Cost of each additional word Rs. 20/-

For 15 Words Rs. 600/- * Cost of each additional word Rs. 20/-

தினகரன் வாரமஞ்சரி Budget ADZ — For 15 Words Rs. 200/- * Cost of each additional word Rs. 10/-



3 papers in 3 Languages just only for Rs. 1000/-

* Cost of each additional word Rs. 20/-

* Conditions Apply

The convenient way to make your payment... Acc.No. 000000377 Green light for Online Transfer BOC LAKE HOUSE BRANCH

E-mail - classified@lakehouse.lk

Ramani - 077 7 278 948 / Piyumi - 011 2 429 383 / Gayani - 011 2 429 342

CSIAP — THE WORLD BANK

# Invitation for Bids

**Democratic Socialist Republic of Sri Lanka**
**Ministry of Agriculture**

## National Competitive Bidding

### Climate Smart Irrigated Agriculture Project (CSIAP)

**Project No: P163742**
**IFB No: 2022/03**

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a Credit from the International Development Association (IDA) – World Bank in the cost of the Climate Smart Irrigated Agriculture Project of the Ministry of Agriculture and it intends to apply part of the proceeds of this credit to eligible payments under the Contracts given in the table below.
2. The Chairman, Regional Procurement Committee (Northern Province) on behalf of the Climate Smart Irrigated Agriculture Project (CSIAP) invites sealed bids from eligible and qualified bidders for the construction works described in the table below.

| Lot No | Contract No | Description of Work | CIDA Registration | Non - refundable Fee | Bid Security Value in (LKR) and Validity |
|---|---|---|---|---|---|
| 01 | LK-MOA-265615-CW-RFB/NP/DPDO/Rehab.T (130)/ 2022/051 | Improvement of Kovil Koduthavil,Nadu Koduthavil,Moolai Koduthavil tanks(03) in Pallikuda village , Poonakary ASC Area and and DS area at Kilinochchi District in Northern Province under world bank funded Climate Smart Irrigated Agriculture Project. | C6 orC5 | 8,000.00 | 250,000.00<br>27th October 2022 |
| 02 | LK-MOA-293139-CW-RFB/NP/DPDO/Imp.T(2) /2022/60 | Rehabilitation of Mathamoodai Kulam Tank at Mandakkallaru Cascade in Mullankavil ASC, poonakary DSD Kilinochchi District in Northern Province under WB funded Climate Smart Irrigated Agriculture Project. | C5 orC4 | 8,000.00 | 290,000.00<br>27th October 2022 |
| 03 | LK-MOA-265594-CW-RFB / NP/DPDO / Rehb.T (121)/2022/047 | Improvement of Thekkerik kulam, Oyamaari kulam and Koramoddai kulam tanks in Pallikuda Village, Poonakary ASC Area and DS Division at Killinochchi District in Northern Province under World Bank funded Climate Smart Irrigated Agriculture Project. | C5 orC4 | 8,000.00 | 310,000.00<br>27th October 2022 |
| 04 | LK-MOA-266080-CW-RFB/NP/DPDO/Imp.T (53)/2022/020 | Improvements of Sekkalai kulam, Karumaari Kulam and Enochchi (Arasapuram) in Pallikuda Village, Poonakary ASC Area and DS Division at Killinochchi District in Northern Province under World Bank funded Climate Smart Irrigated Agriculture Project. | C5 orC4 | 8,000.00 | 390,000.00<br>15th December 2022 |
| 05 | LK-MOA-265612-CW-RFB/NP/DPDO/ Imp.T(2)/2022/59 | Improvement of Iyanar Kulam Tank and Pathinippai Tank in Mandakkallaru Cascade, Poonakary ASC, and Poonakary Divisional Secretaries Division at Kilinochchi District in Northern Province under World Bank funded Climate Smart Irrigated Agriculture Project. | C5 orC4 | 8,000.00 | 440,000.00<br>15th December 2022 |
| 06 | LK-MOA-266949-CW-RFB/NP/DPDO/Imp.T (107) /2022/040 | Improvement of Minnil kulam ,Thikkuvil kulam,Veeramoddai,Nochchimoddai, Sinnaiththavil,Iththavil tanks in Poonakary DS Division at Kilinochchi District in Northern Province under world bank funded Climate Smart Irrigated Agriculture Project | C5 orC4 | 8,000.00 | 490,000.00<br>15th December 2022 |
| 07 | LK-MOA- 265626- CW - RFB/NP/DPDO/Imp.T (45)/2022/016 | Improvement of Semmankuntru Tank in Pallikuda GND and Village, Poonakary Divisional Secretaries Division at Killinochchi District in Northern Province under World Bank funded Climate Smart Irrigated Agriculture Project. | C5 orC4 | 8,000.00 | 610,000.00<br>15th December 2022 |

3. Bidding shall be conducted through National Competitive Bidding (NCB).
4. Interested bidders may obtain further information from **Deputy Project Director, Climate Smart Irrigated Agriculture Project, Deputy Project Director's Office (Northern Province), Climate Smart Irrigated Agriculture Project, Kovinthankadai Junction, Wilson road, Kilinochchi (T.P: 021 228 4881 Fax: 021 228 4880, Email: dpd.np@csiap.lk),** and inspect the bidding documents free of cost at the same place on working days from **9.00 hrs to 14.00 hrs.**
5. To be eligible for Contract award, the successful bidder shall not have been blacklisted and shall meet the requirements in Bidding Document. Further the successful bidder shall have valid registration Grade in Construction Industry Development Authority (CIDA) as mentioned in above Table under the specialty of **Irrigation & Drainage Canals.** Bidders are free to bid for more than one Contract but selections, will be made accordingly to the financial and other capacity limits of the Contractors.
6. Bidding Document in English Language can be purchased by eligible bidders on the submission of a written application on original Letter Head to the **Deputy Project Director** at the address mentioned in **item 4** above, and paying a non-refundable fee (Please refer above table for the amount) in Cash only on Working days from
   - ✓ **23rd June 2022 to 14th July 2022 from 09:00 hrs. to 14:00 hrs. for Lot no 01, 02 & 03.**
   - ✓ **23rd June 2022 to 21st July 2022 from 09:00 hrs. to 14:00 hrs. for Lot no 04,05 06 & 07.**
7. Pre-bid meeting and subsequent Site Visit will be arranged on **30th June 2022** at 9.30 Hrs, at the place mentioned in **item 4** above. Prospective bidders are requested to inspect the sites with the assistance of the relevant officers at their own cost.
8. Bid must be accompanied by an Unconditional Bid Guarantee on prescribe format in the Bidding Document for the value and date mentioned in above Table. Any Bid without a valid Bid Guarantee as indicated will be considered as non-responsive and rejected without any further reference.
9. All pages of the Bidding Documents shall be signed by the bidder and affixed his seal.
10. The Bids shall submit as the Original and the Duplicate. The original and the duplicate should be Enclosed in separate sealed envelopes and marked as the "Original" and "Duplicate"' respectively. Both envelopes shall be enclosed in a sealed single envelope, and write the Description of Work and Contract No on top of left-hand corner of the envelope.
11. Completed Bids shall either be deposited in the Tender Box kept for this purpose or send under registered post address to **The Chairman, Regional Procurement Committee (Northern Province), Climate Smart Irrigated Agriculture Project, Deputy Project Director's Office (Northern Province), Kovinthankadai Junction, Wilson road, Kilinochchi** to reach
   - ✓ on or before **14:00 Hrs. (2.00 p.m.) on 14th July 2022. For Lot no 01, 02 & 03.**
   - ✓ on or before **14:00 Hrs. (2.00 p.m.) on 21st July 2022. For Lot no 04, 05, 06 & 07.**
12. Receiving of the Bids shall be closed
   - ✓ at **14:00 Hrs. (2.00 p.m.) on 2022-07-14 for Lot no 01, 02 & 03.**
   - ✓ at **14:00 Hrs. (2.00 p.m.) on 2022-07-21 for Lot no 04, 05,06 & 07.**

Late Bids shall not be accepted. Bids will be opened immediately after closing in the presence of the bidders or bidders' representatives who choose to attend.

**Chairman,**
**Regional Procurement Committee (Northern Province)**
**Climate Smart Irrigated Agriculture Project,**
**Deputy Project Director's Office (Northern Province),**
**Kovinthankadai Junction,**
**Wilson Road,**
**Kilinochchi**

Date - 2022-06-21

# திருக்கேதீஸ்வர ஆலய கும்பாபிஷேகத்திற்கு அமைச்சர் டக்ளஸுக்கு அழைப்பு



தேவாரப் புகழ் பெற்ற மன்னார் திருக்கேதீஸ்வரர் ஆலயத்தின் கும்பாபிஷேக நிகழ்வில் தென்னிந்தியாவில் இருந்து அடியவர்கள் கலந்து கொள்ளும் வகையில் பலாலி திருச்சி மற்றும் சென்னை போன்ற விமான நிலையங்களுக்கு இடையிலான விமானப் போக்குவரத்தினை மீண்டும் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டமைக்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு நன்றி தெரிவித்துள்ள ஆலய திருப்பணிச் சபையினர், கும்பாபிஷேக நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறும் கடற்றொழில் அமைச்சருக்கு அழைப்பு விடுத்துள்ளனர். மேலும், ஜுலை 6 ஆம் திகதி நடைபெறவுள்ள கும்பாபிஷேகத்திற்கான கிரியைகள், இம்மாதம் 30 ஆம் திகதியளவில் ஆரம்பிக்கப்படவுள்ளமையினால், குறித்த கிரியைகளில் பங்குபற்றுவதற்காக வருகைதரவுள்ள சிவாச்சாரியர்கள் மற்றும் அடியவர்களின் நலன் கருதி, ஜுன் 28 ஆம் திகதி தொடக்கம் பலாலி விமான சேவையை ஆரம்பிப்பதற்கான சாத்தியங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினருடன் ஆராயுமாறும் திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச்சபையின் தலைவர் செ. இராகவன், இணைச் செயலாளர் திருமதி அ. கையிலாசபிள்ளை மற்றும் பொருளாளர் வே. கந்தசாமி ஆகியோர் மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நேரடியாகச் சந்தித்து கேட்டுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நகர்வலம்



**தென் மாகாண சதொச மூலமாக**

# 7 இலட்சத்து 86,000 கிலோ அரிசியை விற்பனை செய்ய நடவடிக்கை

### மாகாண நெல் சந்தைப்படுத்தும் சபை தெரிவிப்பு



(மாத்தறை தினகரன் நிருபர்)

தென் மாகாணத்திலுள்ள நெல் சந்தைப்படுத்தும் சபையின் மூலம் 7,86,000 கிலோ அரிசியை தென் மாகாணத்திலுள்ள சதொச விற்பனை நிலையங்களின் வாயிலாக பொது மக்களுக்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக நெல் சந்தைப்படுத்தும் சபையின் தென் மாகாண முகாமையாளர் சுசந்த தஞ்சம கீர்த்தி தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக பலபிடிய கூட்டுறவு சங்கத்திற்கு 1,07000 கிலோ அரிசியை வழங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நெல் சந்தைப்படுத்தும் சபையின் தென் மாகாண அலுவலகம் 2021/ 2022 பெரும் போகத்தின் போது 1600 மெற்றிக் தொன் நெல்லை விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்தது.

இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட நெல்லை தனியார் துறை அரிசி ஆலையின் மூலம் அரிசியாக்கி தென் மாகாணத்திலுள்ள சதொச மற்றும் கூட்டுறவு சங்கங்களின் மூலமாக விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் முகாமையாளர் தெரிவித்தார்.

# புத்தளம் தாய் சேய் மத்திய நிலைய சிகிச்சைகள் மற்றும் சேவைகளை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை

### புத்தளம் நகர பிதா பேச்சுவார்த்தை



கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

புத்தளம் மன்னார் வீதியில் உள்ள தாய் சேய் மத்திய நிலையத்தில் சிகிச்சைகள் மற்றும் சேவைகள் என்பனவற்றை மீண்டும் ஆரம்பிப்பதற்கு புத்தளம் நகர பிதா எம்.எஸ். எம்.ரபீக் நடவடிக்கை எடுத்துள்ளார்.

கடந்த கொரோனா பெருந்தொற்று நிலைமைகள் காரணமாக புத்தளம் மன்னார் வீதியில் உள்ள மத்திய தாய்சேய் சிகிச்சை நிலையத்தின் சிகிச்சை, சேவைகள் நீண்ட காலமாக புத்தளம் கொழும்பு வீதியில் அமைந்துள்ள சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்திற்கு மாற்றப்பட்டு நடைபெற்று வருகின்றது.

இந்த நிலையில், தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக புத்தளம் நகரில் உள்ள நூற்றுக்கணக்கான தாய்மார்கள் தமது தேவைகளை பூர்த்தி செய்வதற்கு பல சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

தமது வீடுகளில் இருந்து புத்தளம் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்திற்கு செல்ல அதிக பணத்தையும் போக்குவரத்துக்காக செலவிடுவதாகவும் நகர பிதாவின் கவனத்திற்கும் கொண்டு வந்தனர். இதனையடுத்து உடன் செயற்பட்ட புத்தளம் நகர பிதா எம்.எஸ்.எம்.ரபீக் இந்த விடயம் தொடர்பில் புத்தளம் சுகாதார வைத்திய அதிகாரியை நேரில் சந்தித்து கலந்துரையாடினார்.

## கலாவிபூஷணம் விருது பெற்றார்



சிலாபத்தைச் சேர்ந்த தம்பி சாஹிப் சித்தி பரீதா கலாவிபூஷணம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இவர், ஆன்மீக எழுத்துத் துறையிலும், கவிபுனைவிலும் தனக்கெனத் தனியான பாதையை வகுத்துக் கொண்டு எழுத்துத் துறையில் பிரகாசித்து வரும் கவிஞர்களில் ஒருவராவார்.

இராமநாதபுரம் கீழக்கரை ஹபீப் முஹமத்தம்பி சாகிப்பு, சிலாபம் அம்பகந்தவில மரியம் பீபி தம்பதிகளின் மகளான இவர், தனது ஆரம்பக் கல்வியை சிலாபம் ரோமன் கத்தோலிக்கத் தமிழ் பெண்கள் பாடசாலையிலும், பின்னர் சிலாபம் நஸ்ரியா மகா வித்தியாலத்திலும் கல்வி கற்றுள்ளார்.





கொழும்பு 12 வாழைத்தோட்டம் அல்ஹிக்மா கல்லூரியின் (தேசிய பாடசாலை) பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையில் ஏற்பாடு செய்யப்பட்ட கல்லூரிக்கான நவீன முறையிலான பாதுகாப்பு அறை, சிசிடிவி மற்றும் இன்டர்கொம் முறைமைகளை உத்தியோக பூர்வமாக பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கும் நிகழ்வு மற்றும் மாணவ தலைவர்களுக்கான சின்னம் அணிவித்தல் மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு கல்லூரியில் இடம்பெற்றது. கல்லூரியின் அதிபர் எம்.எம்.மஹ்சூர் மற்றும் பழைய மாணவர் சங்கத்தின் உப தலைவர் டாக்டர் எச்.எம்.எச். இஸ்மத் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பாதுகாப்பு அமைச்சின் ஊடகப் பணிப்பாளரும் பேச்சாளரும் தலைமைத்துவ விரிவுரையாளருமான கேர்ணல் நளின் ஹேரத் பிரதம அதிதியாகவும் கல்லூரியின் பழைய மாணவியும் கொழும்பு கல்வி வலயத்தின் தமிழ் பிரிவுக்கான உதவி கல்வி பணிப்பாளருமான திருமதி எம்.எச். மும்தாஸ் பேகம், தொழிலதிபர் சப்பார் ரய்னுடீன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் தொழில் அதிபர்களான நிஸ்வான் ஆசிரியர், இர்ஷாட் ரில்வான் மற்றும் சபர் ஆகியோர் விஷேட அதிதிகளாக கலந்து கொண்டனர். (படம்: ஏ.எஸ்.எம்.ஜாவித்)

**எரிபொருள் பெற்றுக்கொண்ட பின்**

# போலி 5000 ரூபா நாணயத்தாளை ஊழியருக்கு வழங்கிய நபர் கைது

### மிஹிந்தலை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் சம்பவம்

அநுராதபுரம் தினகரன் நிருபர்



ஐயாயிரம் ரூபா போலி நாணயத்தாள் ஒன்றுடன் சந்தேக நபர் ஒருவரை மிஹிந்தலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (18) மாலை மிஹிந்தலை நகரிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் மிஹிந்தலை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் குறிப்பிட்டனர். கைது செய்யப்பட்டவர் மிஹிந்தலை, அசோக்கபுரம் பகுதியை வசிப்பிடமாக கொண்ட 30 வயதுடையவர் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

## மலைச்சாரல்



# பயன்படுத்தப்படாத 2700 ஏக்கர் காணியை பயிர்செய்ய பகிர்ந்தளிக்குமாறு வேண்டுகோள்

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

கலவானை டிப்டீன் தோட்டத்தில் தற்போது பயிர் செய்யப்படாமல் கைவிடப்பட்டு காடாகியுள்ள சுமார் 2700 ஏக்கர் நிலத்தை தொழிலாளர்களுக்கும் இப்பிரதேசத்திலுள்ள காணி வீட்டு வசதியற்ற ஏழை மக்களுக்கும் பகிர்ந்தளிக்குமாறு இத்தோட்ட மக்கள் தொழிற்சங்க பிரதிநிதிகள் மற்றும் இப்பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

கடந்த காலங்களில் இக்காணியை தோட்டத் தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப் போவதாகப் பிரச்சாரம் செய்யப்பட்ட போதிலும் அவை வெறும் ஏமாற்று நடவடிக்கை என இப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே தற்போது நிலவும் உணவுத் தட்டுப்பாடு நெருக்கடி நிலையைக் கருத்தில் கொண்டு இவற்றில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள இவற்றை தமக்கு பகிர்ந்த அளிக்குமாறு இப்பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

கலவான டிப்டீன் தோட்டத்தை தோட்ட கம்பனியொன்றுக்கு குத்தகைக்கு வழங்கும் போது மிகவும் சிறந்து விளங்கியது. இத்தோட்டத்தின் 3000 ஏக்கர் நிலத்தில் தேயிலைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இங்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்தனர் எனவும் எனினும் தற்போது இங்குள்ள சுமார் 3000 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் சுமார் 300 ஏக்கரில் மாத்திரம் தேயிலை செய்கை பண்ணப்படுகிறது.

இதனை மட்டுமே தோட்ட நிர்வாகம் பராமரிக்கிறது. ஏனைய 2700 ஏக்கரிலும் காடு வளர்ந்து கவனிப்பாரற்றுக் காணப்படுகிறது எனவும் இவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ்விடயமாக கலவான பிரதேச சபையிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது என தெரிவிக்கும் இப்பிரதேச காணி வசதியற்ற ஏழை மக்கள், இத்தோட்டத்தில் பயன்படுத்தப்படாது கைவிடப்பட்டுள்ள நிலங்களைத் தமக்கு வழங்குமாறு பொறுப்பு வாய்ந்தவர்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# இரத்தினபுரி மாவட்டத்தில் வேகமாக பரவி வரும் புதிய வகை வைரஸ்

பலாங்கொடை தினகரன் நிருபர்

இரத்தினபுரி மாவட்டத்தில் "இன்புளுவன்ஸா" என்ற தொற்றுநோய் மிக வேகமாக பரவி வருவதாக அறியப்படுகிறது.

கலவானை பிரதேசத்தை அண்மித்து இந்த வைரஸ் நோய் வேகமாக பரவி வருவதாக சப்ரகமுவ மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் டாக்டர் கபில கன்னங்கர தெரிவித்துள்ளார். கடந்த ஏப்ரல் மாதம் தொடக்கம் நேற்று வரை "இன்புளுவன்ஸா" வைரஸ் நோய் தாக்கத்தினால் 14 பேர் உயிரிழந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஏப்ரல் மாதத்தில் 11 நோயாளர்களும் மே மாதத்தில் ஆறு நோயாளர்களும் ஜூன் மாதத்தில் 103 நோயாளர்களும் இனம் காணப்பட்டுள்ளதாக மாகாண சுகாதார வைத்திய பணிப்பாளர் சுட்டிக்காட்டினார். இந்த வைரஸ் நோயினால் அதிக அளவு பெண்களே பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனடிப்படையில் 75 பெண்களும்,33 ஆண்களும்,12 சிறார்களும் அடங்குவதாக அவர் தெரிவித்தார்.

இந்த வைரஸ் தொற்று நோய் காரணமாக உயிரிழந்தவர்கள் 75 வயதுக்கு மேற்பட்டவர்கள் என கண்டறியப்பட்டுள்ளது. இதுவரை உயிரிழந்தவர்களில் 11 பெண்களும் 3 ஆண்களும் அடங்குவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மருத்துவ ஆய்வு நிறுவனத்தின் வைரஸ் தொற்று தொடர்பான விசேட வைத்திய நிபுணர் ஜூட் ஜயமஹ தெரிவித்ததாவது, இந்த வைரஸ்" இன்புளுவன்ஸாஏ" என அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்த நோய் தாக்கத்திற்கு அதிக அளவு வயோதிபர்களும் கர்ப்பிணித் தாய்மார்களும் பாதிக்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

காய்ச்சல் இருமல் தடிமல் போன்ற நோய் அறிகுறிகள் இந்த வைரசின் தாக்கத்தினால் ஏற்படுமென அவர் மேலும் தெரிவித்தார். இவ்வாறான சந்தர்ப்பத்தில் வைத்திய அதிகாரி ஒருவரை சந்தித்து உரிய சிகிச்சை பெற்றுக் கொள்ளுமாறும் அவர் வேண்டிய உள்ளார்.

# பசறை தமிழ் மகா வித்தியாலய ஸ்ரீ சரஸ்வதி ஆலய மஹா கும்பாபிஷேகம்

நடராஜா மலர்வேந்தன் லுணுகல நிருபர்

பசறை தமிழ் மகா வித்தியாலய ஸ்ரீ சரஸ்வதி ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 23ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 7.34 மணிக்கு நடைபெற உள்ளது.

21.06. 2022 செவ்வாய்க்கிழமை (இன்று) முற்பகல் 9.00 மணிக்கு வரும் சுபவேளையில் கருமாரம்பம், விநாயகர் வழிபாடு, புண்ணியாகவாசனம், தேவபிராமண அனுக்ஞை, திரவிய சுத்தி, திரவிய விபாகம், மகா கணபதி ஹோமம், மகாலட்சுமி ஹோமம், நவக்கிரக ஹோமம், கங்கா தீர்த்தம், சூரிய அக்கினி சங்கிரணம் நடைபெற்று அன்று மாலை 5 மணிக்கு புண்ணியாகவாசனம் கிராமசாந்தி பிரவேசம், பிரவேசபலி வாஸ்துசாந்தி, கோபூஜை, கடஸ்தாபனம், கலாகர்சணம், யந்திராஹோமம், க்ஷண ஹோமம், கும்பயாகசாலை பிரவேசம், ஸ்தூபிஸ்தாபனம், தீப ஸ்தாபனம், யந்திர ஸ்தாபனம், விம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம், யாகபூஜை, அக்னி உத்பலும் தீபாராதனை, தேவ ஸ்தோத்திர பாராயணம், திருமுறை பாராயணம், விபூதி பிரசாதம் வழங்கல்என்பன நடைபெறும்.

22.06.2022 புதன்கிழமை காலை 7.30 மணி முதல் புண்ணியாகவாசனம் , எண்ணை காப்பு சாத்துதல், யாகபூஜை குண்டபூஜை ,விசேஷ திரவிய ஹோமம், யாக தீபாரதனை தேவ ஸ்தோத்திரம், திருமுறை பாராயணம் என்பன நடைபெற்று விபூதி பிரசாதம் வழங்கப்படும்.

அன்று மாலை 3 மணிமுதல் புண்ணியாகவாசம், பஞ்சகவ்ய பூஜை, பிம்பசுத்தி, விம்பரக்ஷாபந்தனம், பூர்வ சந்தானம், யாக பூஜை, குண்டபூஜை ஸ்பர்சாகுதி, யாக தீபாராதனை, வேத ஸ்தோத்திர திருமுறை பாராயணம் நடைபெறும்.

23.06.2022 காலை 7.00 மணிக்கு புண்ணியாகவாசனம், யாக பூஜை, குண்ட பூஜை, விசேட உபசார ஹோமம், மஹா பூர்ணாகுதி, தீபாராதனை, வேத ஸ்தோத்திர திருமுறை பாராயணம், ஆசீர்வாதம், பலிகள்தானம், நடைபெற்று பிரதான கும்பங்கள் புறப்பட்டு குறித்த சுபமுகூர்த்தத்தில் ஸ்தூப அபிஷேகம், மகா கும்பாபிஷேகம் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து தசதரிசனம், மகா அபிஷேகம் எஜமான அபிஷேகம், மகேஸ்வர பூஜை நடைபெற்று பின் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

தொடர்ந்து 06 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறுவதோடு எதிர்வரும் 30 ஆம் திகதி அஷ்டோத்திர சத சங்காபிஷேகம் நடைபெறும்.

கும்பாபிஷேக கிரியைகள் ஜனஹிதகாமி கீர்திஸ்ரீ தேசபந்து லங்கபுத்திர அம்மணிவத்தை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய பிரதம குரு சிவஸ்ரீ இரா சிவகுமார் சிவாச்சாரியார் தலைமையில் நடைபெறவுள்ளது.

மகா கும்பாபிஷேக கிரியைகளில் அடியவர்கள் கலந்துகொண்டு எல்லாம் வல்ல ஸ்ரீ சரஸ்வதி அன்னையின் அருளைப் பெற்றுய்யுமாறு ஆலய பரிபாலன சபையினர் அன்புடன் அழைக்கின்றனர்.

## சைவ மகாநாடு வெற்றி பெற பூஜை

ஹட்டன் விசேட நிருபர்

பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியத்தின் தலைவர் முருகபிள்ளை கோபாலகிருஷ்ணன் தலைமையில் 22வது சைவ மகாநாடு ஜுன் 18 ம் 19ம் திகதிகளில் லண்டனில் நடைபெற உள்ளது. இந்த மகாநாட்டில் சிவாச்சாரியர்கள் உயர் சைவ மத தலைவர்கள் என பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். இந்நிகழ்வு சிறப்புற அமைய இலங்கை மலையக சைவ திருப்பணிகள் ஒன்றியத்தின் தலைவர் அம்மாசி நல்லுசாமி ஏற்பாட்டில் லிப்பக்கலையூர் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடு இடம்பெற்றது.

இதன்போது அறநெறி பாடசாலை ஆரம்ப நிகழ்வும் இடம்பெற்றது. அதேவேளை சமைய சொற்பொழிவும் சைவ மாநாடு வெற்றி பெற ஆசி உரைகளும் வாழ்த்துரைகள் நிகழ்த்தப்பட்டன.

சைவ மாநாடு வெற்றி பெற வேண்டி சிதறு தேங்காயும் உடைக்கப்பட்டது.

அதிபர், ஆசிரியர்கள், சிறுவர்கள் அமைப்பின் முக்கியஸ்தர்கள், தோட்டத் தலைவர்கள், ஆலய பரிபாலன சபை உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## பதுளை வீடொன்றில் தீ



(ஹாலிஎல விசேட நிருபர்)

பதுளை, முத்தியங்கனை மகா விகாரைக்கு அருகாமையில் உள்ள சுமனதிஸ்ஸ கம பகுதியில் இரண்டு மாடி வீடொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் பல சொத்துக்கள் எரிந்து நாசமாகியுள்ளதுடன் வீட்டின் மேல் தளம் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

இந்த வீட்டில் வசிப்பவர்கள் பட்டாசு வியாபாரம் செய்து வருகின்றனர். வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பட்டாசுப் பொதிகளே தீப்பிடித்துள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பிரதேசவாசிகளின் உதவியுடன் தீயை அணைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அது முடியாததாலும், தீ மளமளவென பரவியதையடுத்து பதுளை மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினர் வந்து அருகில் உள்ள வீடுகளுக்கு தீ பரவாமல் தடுக்க தீயணைப்பு வாகனங்களை பயன்படுத்தி தீயை அணைத்தனர்.

வீட்டில் வசிப்பவர்கள் பட்டாசு விற்பனை செய்து கொண்டிருந்ததால், வீட்டின் மாடியில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பட்டாசுகள் திடீரென தீப்பிடித்து எரிந்து பலத்த சத்தத்துடன் வெடித்து சிதறியது. வீட்டின் மேல்மாடி பகுதியில் இரும்பு வேலியை வெல்டிங் செய்யும் போது, திடீரென தீப்பொறி வெடித்ததுடன் பட்டாசு மீது விழுந்ததால் தீ பரவியதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்த தீ விபத்தில் யாருக்கும் காயங்கள் ஏற்படவில்லை.

# ஆஸியுடனான 3 ஆவது போட்டியில் இலங்கைக்கு இலகு வெற்றி

## 4 ஆவது போட்டி இன்று கொழும்பில்



இரு அணிகளும் மோதும் ஒருநாள் தொடரின் நான்காவது போட்டி இன்று செவ்வாய்க்கிழமை (21) கொழும்பில் நடைபெறவுள்ளது.




அவுஸ்திரேலியா - இலங்கை அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரின் மூன்றாவது போட்டியில், இலங்கை குசல் மெண்டிஸ் பெதும் நிஸ்ஸங்கவின் சாதனை இணைப்பாட்டத்தோடு 6 விக்கெட்டுக்களால் இலகு வெற்றியினைப் பதிவு செய்தது.

இந்த வெற்றியுடன் இலங்கை அணி ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரிலும் 2-1 என முன்னிலை அடைந்துள்ளது.

இந்த ஒருநாள் தொடரில் கண்டியில் இடம்பெற்ற முதல் இரு போட்டிகளிலும் இரு அணிகளும் தலா ஒரு வெற்றி பெற்றிருந்த நிலையில், மூன்றாவது ஒருநாள் போட்டி கொழும்பு ஆர்.பிரேமதாச அரங்கில் கடந்த (19) இடம்பெற்றது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய இலங்கை அணியை முதலில் களத் தடுப்பை மேற்கொள்ளுமாறு பணித்தது. இப் போட்டிக்கான இலங்கை அணியைப் பொறுத்த வரை கடந்த போட்டியில் இருந்து ஒரு மாற்றம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இடதுகை ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் தனுஷ்க குணதிலக்கவுக்குப் பதிலாக மற்றொரு இடதுகை துடுப்பாட்ட வீரரான விக்கெட் காப்பாளர் நிரோஷன் டிக்வெல்ல அணியில் இணைக்கப்பட்டார்.

சகலதுறை வீரர் வனிந்து ஹசரங்க உபாதையில் இருந்து முழுமையாக குணமடையாத நிலையில் அவர் இப் போட்டியிலும் அணியில் இணைக்கப்பட்டிருக்கவில்லை.

மறுமுனையில் அவுஸ்திரேலிய அணியில் மூன்று மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதன்படி அனுபவ துடுப்பாட்ட வீரர் ஸ்டீவ் ஸ்மித், சகலதுறை வீரர் பெட் கம்மின்ஸ் மற்றும் மிஷெல் வெப்சன் ஆகியோர் நீக்கப்பட்டு மிச்செல் மார்ஷ், கமருன் கிரீன் ஜை றிச்சர்ட்சன் ஆகியோர் இப் போட்டிக்காக அணியில் இணைக்கப்பட்டிருந்தனர்.

தொடர்ந்து நாணயச் சுழற்சி முடிவுகளுக்கு அமைய முதல் துடுப்பாட்டத்தினை ஆரம்பம் செய்த அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணிக்கு இலங்கை அணியின் வேகப்பந்துவீச்சாளரான துஷ்மந்த சமீர நெருக்கடியினை உருவாக்கினார். அதன்படி அவுஸ்திரேலிய அணியின் முதல் விக்கெட்டாக டேவிட் வோர்னர் துஷ்மந்த சமீரவின் பந்துவீச்சில் 9 ஓட்டங்களுடன் ஓய்வறை நடந்தார்.

இதனையடுத்து புதிய வீரராக வந்த மிச்சல் மார்ஷின் விக்கெட்டும் அவர் 10 ஓட்டங்களை எடுத்த நிலையில், துனித் வெல்லாலகேவின் பந்துவீச்சில் பறிபோனது.

மூன்றாம் விக்கெட்டுக்காக ஆரோன் பின்ஞ் – மார்னஸ் லபுஷேன் ஜோடி சிறந்த இணைப்பாட்டம் ஒன்றினை உருவாக்க முயன்றது. 67 ஓட்டங்கள் வரை நீடித்த இந்த இணைப்பாட்டம் மார்னஸ் லபுஷேனின் விக்கெட்டோடு நிறைவுக்கு வந்தது. மார்னஸ் லபுஷேன் 29 ஓட்டங்களுடன் ஜெப்ரி வென்டர்செயின் முதல் விக்கெட்டாக மாறினார்.

அவுஸ்திரேலிய அணியின் நான்காம் விக்கெட்டாக ஒருநாள் போட்டிகளில் தன்னுடைய 30ஆவது அரைச்சதத்தினைப் பூர்த்தி செய்த ஆரோன் பின்ச் 85 பந்துகளில் 4 பௌண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸர் அடங்கலாக 62 ஓட்டங்கள் பெற்று ஜெப்ரி வென்டர்சேயின் இரண்டாம் விக்கெட்டாக ஆட்டமிழந்தார்.

ஆரோன் பின்ஞ்சின் விக்கெட்டின் பின்னர் அவுஸ்திரேலிய அணிக்கு அலெக்ஸ் கேரி, ட்ராவிஸ் ஹெட் மற்றும் கிளன் மெக்ஸ்வெல் ஆகியோர் பெறுமதி சேர்க்க அவ்வணி 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 291 ஓட்டங்கள் எடுத்தது.

அவுஸ்திரேலிய அணியின் துடுப்பாட்டம் சார்பில் ட்ராவிஸ் ஹெட் தன்னுடைய 12ஆவது ஒருநாள் அரைச்சதத்துடன் 65 பந்துகளுக்கு 3 சிக்ஸர்கள் மற்றும் 3 பௌண்டரிகள் அடங்கலாக 70 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் நின்றார். அலெக்ஸ் கேரி 49 ஓட்டங்களை எடுக்க, கிளன் மெக்ஸ்வெல் 18 பந்துகளில் ஒரு சிக்ஸர் மற்றும் 3 பௌண்டரிகள் அடங்கலாக 33 ஓட்டங்கள் எடுத்தார்.

இலங்கை அணியின் பந்துவீச்சில் ஜெப்ரி வன்டர்செய் 3 விக்கெட்டுக்களையும், துஷ்மந்த சமீர, துனித் வெல்லாலகே தனன்ஞய டி சில்வா ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீதம் சாய்த்திருந்தனர்.

பின்னர் போட்டியின் வெற்றி இலக்காக நிர்ணயம் செய்யப்பட்ட 292 ஓட்டங்களை அடைவதற்கு பதிலுக்கு துடுப்பாடிய இலங்கை அணிக்கு ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக நிரோஷன் டிக்வெல்ல மற்றும் பெதும் நிஸ்ஸங்க ஆகியோர் களம் வந்தனர்.

இந்த வீரர்களில் இலங்கை அணிக்காக சிறந்த ஆரம்பத்தினை நிரோஷன் டிக்வெல்ல வழங்கிய போதும் அவரினால் அதனை பெரிய இன்னிங்ஸ் ஆக மாற்ற முடியாமல் போனது.

தொடர்ந்து கிளன் மெக்ஸ்வெலினால் போல்ட் செய்யப்பட்ட நிரோஷன் டிக்வெல்ல 5 பௌண்டரிகள் அடங்கலாக 25 ஓட்டங்கள் பெற்று இலங்கையின் முதல் விக்கெட்டாக மாறினார்.

இரண்டாம் விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த குசல் மெண்டிஸ் – பெதும் நிஸ்ஸங்க ஜோடி பொறுமையான முறையில் இணைப்பாட்டம் ஒன்றுக்கு வித்திட்டனர். தொடர்ந்து இரண்டு வீரர்களும் தங்களது அரைச்சதங்களைப் பூர்த்தி செய்ய இந்த இணைப்பாட்டம் வலுப்பெறத் தொடங்கியது.

தொடர்ந்து இந்த இரண்டு வீரர்களினதும் விக்கெட்டுக்களைக் கைப்பற்றுவது அவுஸ்திரேலிய வீரர்களுக்கு கடினமாக, இலங்கை சார்பில் ஒருநாள் போட்டிகளில் அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக பெறப்பட்ட அதிகூடிய இரண்டாம் விக்கெட் இணைப்பாட்டத்தினை குசல் மெண்டிஸ் – பெதும் நிஸ்ஸங்க ஜோடி பதிவு செய்தது. 170 ஓட்டங்கள் வரை நீடித்த அந்த சாதனை இணைப்பாட்டம் குசல் மெண்டிஸின் கால் உபாதை காரணமாக அவர் மைதானத்தினை விட்டு வெளியேற நிறைவுக்கு வந்தது.

குசல் மெண்டிஸ் மைதானத்தினை விட்டு வெளியேறும் போது தன்னுடைய 19ஆவது ஒருநாள் அரைச்சதத்துடன் 85 பந்துகளுக்கு 8 பௌண்டரிகள் அடங்கலாக 87 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

குசல் மெண்டிஸின் பின்னர் பெதும் நிஸ்ஸங்க ஒருநாள் போட்டிகளில் தான் பெற்ற கன்னி சதத்தின் உதவியோடு இலங்கை அணி போட்டியின் வெற்றி இலக்கினை 48.3 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 292 ஓட்டங்களுடன் அடைந்தது.

அத்துடன் இது இலங்கை அணி ஒருநாள் போட்டிகளில் அவுஸ்திரேலியாவிற்கு எதிராக துரத்திய அதிகூடிய வெற்றி இலக்காகவும் மாறியது.

இலங்கை அணியின் வெற்றிக்கு பக்கபலமாக இருந்த பெதும் நிஸ்ஸங்க 147 பந்துகளில் 11 பௌண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்கள் அடங்கலாக 137 ஓட்டங்கள் எடுத்து ஒருநாள் போட்டிகளில் தன்னுடைய சிறந்த இன்னிங்ஸை பதிவு செய்தார்.

மறுமுனையில் அவுஸ்திரேலிய அணியின் பந்துவீச்சு சார்பில் ஜை றிச்சர்ட்ஸன் 2 விக்கெட்டுக்களையும், ஜோஸ் ஹேசல்வூட் மற்றும் கிளன் மெக்ஸ்வெல் ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீதம் பதம் பார்த்தனர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக பெதும் நிஸ்ஸங்க தெரிவானார்.


44th OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
Recognizing talent, inspiring greatness
SLTMOBITEL The Connection

44th OBSERVER SLT- MOBITEL
மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022
இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022
தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது :
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை :
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை :
வாக்களித்தவர் பெயர் :
முகவரி :
மொபைல் இல. :

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:
1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:
SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்குபெற முடியாது.
ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 25-06-2022
இல. 13


MOBILE
வேகத்திலும் அதிவேகமான மொபைல் வலையமைப்பு.
SLTMOBITEL


# சோண்டர்ஸ் – ஜாவா லேன் ஆட்டம் சமநிலை

**(திருகோணமலை குறூப் நிருபர்)**

சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடரில் இரண்டாம் வாரத்திற்காக ஞாயிற்றுக்கிழமை (19) இடம்பெற்ற ஒரு போட்டியில் நிகம்பு யூத் அணி வெற்றி பெற, மேலும் இரண்டு போட்டிகள் சமநிலையில் நிறைவுற்றன.



இலங்கையில் உள்ள முன்னணி இரண்டு கழகங்களான இவ்விரு அணிகளுக்கும் இடையிலான மோதல் கொழும்பு சுகததாச அரங்கில் இடம்பெற்றது. இரசிகர்களின் பெரிய எதிர்பார்ப்பிற்கு மத்தியில் ஆரம்பமான இந்த போட்டியின் முதல் பாதி எந்தவொரு கோலும் இன்றி நிறைவுற்றது.

இந்நிலையில் ஆரம்பமான இரண்டாம் பாதியின் 63ஆவது நிமிடத்தில் சப்ரான் கொடுத்த பந்துப் பரிமாற்றத்தினால் மாலக பெரேரா பெற்ற கோலினால் ஜாவா லேன் அணி முன்னிலை பெற்றது. எனினும், 83ஆவது நிமிடத்தில் மத்திய களத்தில் இருந்து சோண்டர்ஸ் அணியின் டிலான் கௌஷல்ய உயர்த்தி வழங்கிய பந்துப் பரிமாற்றத்தின் மூலம் இளம் வீரர் பெதும் கிம்ஹான பெற்ற கோலினால் போட்டி தலா ஒரு கோலுடன் சமநிலை பெற்றது.

காலி மாவட்ட விளையாட்டுத் தொகுதி அரங்கில் இடம்பெற்ற இந்தப் போட்டியின் 22ஆம் நிமிடத்திலும் 27ஆவது நிமிடத்திலும் முறையே நிகம்பு யூத் அணியின் கிறிஸ்டீன் மற்றும் அணித் தலைவர் நிலுக ஆகியோர் இரண்டு கோல்களைப் பெற்றனர்.

அதன் பின்னர் 90ஆவது நிமிடம் வரை எந்தவொரு மேலதிக கோலும் பெறப்படாத நிலையில் 90ஆவது நிமிடத்தில் பொலிஸ் அணியின் இளம் வீரர் சிஷான் அவ்வணிக்கான முதல் கோலைப் பெற்றார்.

போட்டி நிறைவில் முதல் பாதியில் பெறப்பட்ட இரண்டு கோல்களினால் நிகம்பு யூத் வீரர்கள் 2-1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்று, தொடரில் தமது இரண்டாவது வெற்றியைப் பதிவு செய்தனர்.

பொலிஸ் விளையாட்டுக் கழகம் தாம் ஆடிய 3 போட்டிகளிலும் தோல்வி கண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குருநாகல் மாலிகாபிடிய அரங்கில் இடம்பெற்ற இந்தப் போட்டியின் முழு நேர நிறைவு வரையில் எந்தவொரு அணி வீரரும் கோல் எதனையும் பெறாமையினால் ஆட்டம் சமநிலையானது.

நியூ ஸ்டார் ஒரு வெற்றியுடனும், சொலிட் அணி எந்தவொரு வெற்றியையும் பதிவு செய்யாத நிலையிலும் இந்த தொடரில் நீடிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடெட் கம்பனியால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜூன் மாதம் 21ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.